609

1609

786

திருகுர்ஆனும், பிறமதத்தாரும்

ஆக்கியோன்
மௌலவி அஹ்மத் ஸயீத் சாஹிப்
ஆசிரியர், "ஸைபுல் இஸ்லாம்"

சென்னை
"ஸைபுல் இஸ்லாம்" பதிப்பகத்தாரால்
வெளியிடப் பெற்றது.

1935

18 SEP 1935
MADRAS

140
170
210

G7
M35
222960

"லைபுல் இஸ்லாம்" புக் டிபோ

முஸ்லிம் சமூகத்தினரின் சீர்திருத்த முன்னே
றதைக் கருதி முஸ்லிம்கள் அறிந்துகொள்ள வேண்டிய
சிய நூல்கள், தற்கால உலகப் போக்கிற்கும் நாக
திற்கும் ஏற்றவாறு இயற்றப்பட்டுள்ள நமது சொந்த
கள், இதர இஸ்லாமிய நூல்கள், உயர்தர செந்தமிழ் நா
கள், முதலிய மற்றும் பல நூல்களும் விலை சகாயமாக
புக் டிபோவில் கிடைக்கும்.

நூல்களின் விலை விவரமடங்கிய கேட்லாக் ¼
தபால் தலை அனுப்புகிறவர்களுக்கு தபால் மூலம் அனு
வைக்கப்படும்.

மானேஜர்

"லைபுல் இஸ்லாம்" புக் டிபோ

47, செம்புதாஸ் தெரு

சென்னை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1935
MADRAS

786

குர்ஆனும், பிற மதத்தாரும்

அத்தியாயம் 1.

ஹம்து ஸலாத்

சர்வ உலகையும் படைத்துப் போஷித்துப் பாலித்துக் காத்துவரும் இறைவனுக்கே சர்வ ழும் உரியன. அவனது திருத் தூதரும், உல ய்யத் தோன்றியவரும், மனு ஜின் ஆகிய இரு ர்க்கத்துக்கும் நேர்வழி காட்டுவதற்காக வந்தவ ம், சிருஷ்டிகளிற் சிறந்தோருமான நபிகள்கோன் ல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மீதும், வாது குடும்பத்தார், துணைவர் ஆகியோர் மீதும் றைவனின் கருணையும், ஈடேற்றமும் உண்டாவ தாக! ஆமீன்.

பீடிகை

கிற்றோன்றிய சகல சமூகத்தாரும் தத்தமக்கென த்தை, ஒரு வழிகாட்டியை வைத்துக் கொண்டிருக் . யூத மதத்தார் தங்களுக்கு பைபிள் பழைய ஏற் ஒரு பகுதியை வேதமாகக் கொண்டிருக்கின்றனர்.

கிறிஸ்துவ மதத்தார் பைபிள் புதிய ஏற்பாட்டை தங்களுக்குரிய வேதமாகக் கொண்டாடுகின்றனர். முஸ்லிம்களாகிய நாம் திரு குர்ஆனைப் பரிசுத்த வேதமென விசுவாசங் கொண்டுள்ளோம். இதுபோல் ஏனைய மதத்தார் தத்தமக்குள்ள ஒரு நூலைத் தங்களது வேதமாகக் கொண்டாடுகின்றனர்.

தற்காலம் உலகிலுள்ள ஒவ்வொரு மதத்தாரும் தத்தம் மாலியன்ற வரைத் தமது மதத்தை உலகில் பரவச் செய்து செல்வாக்கும், கீர்த்தியும் அடையச் செய்ய முயன்று வருகின்றனர். இம் முயற்சியில் அவர்கள் தங்கள் காரியத்தை மட்டிலும் பார்ப்பார்களாயின், அவர்களைப்பற்றிய சிந்தனை கொள்ள வேண்டிய அவசியமின்று. ஆனால், அவர்கள் தங்களது மதப் பிரசாரத்துடன் பிற மதத்தைப்பற்றித் தூற்றவும், பிற மதத்திலுள்ள சிற்சில விஷயங்களைப் பற்றி ஆக்ஷேபனைகள் செய்யவும் தொடங்கி விட்டனர். "மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை" என்ற சட்டப்படி நாம் பிற மதத்தாரை நிர்ப்பந்தப் படுத்தி இஸ்லாத்தில் சேர்க்கும் வேலையில் ஈடுபடா விடினும், பிற மதத்தார் செய்யும் ஆக்ஷேபனைகளுக்கு நாம் பதில் கூறவில்லையாயின், நம்மவரிலுள்ள சாமான்யர் பிற மதத்தாரின் சூழ்ச்சியில் சிக்கிவிட ஹேதுவுண்டு. ஆதலின், அவ்வாறு சிக்கிக் கொள்ளாதிருப்பதற்கான காரியத்தைச் செய்ய முயலுதல் நம்மவர் ஒவ்வொருவருடையவும் கடமையுமாகும். எனவே, நமது சத்தியத் திரு மறையான புர்க்கானுல் ஹமீதென்னும் குர்ஆன் ஷரீபைப்பற்றியும், அதிலுள்ள விஷயங்களைப் பற்றியும் பிற மதத்தாராகிய கிறிஸ்துவர், ஆரிய சமாஜத்தார் முதலியவர்கள் செய்த ஆக்ஷேபனைகளையும், நம்மவர் கூறிய பதில்களையும் இங்கு ஒன்று திரட்டி [illegible]ருக்கிறது. ஆனால், அதற்கு முன் திரு குர்ஆன் எவ்வாறு அருளப்பட்டது? [illegible] அமைப்பு என்ன? என்ற விபரங்களைச் சுருக்கமாகவே

222960

தெரிந்து கொள்வது அவசியமாதலால், அதனைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவாம்.

திரு குர்ஆன் அருளப்பட்ட முறை

இஸ்லாத்தின் சத்திய திரு வேதமாகிய குர்ஆன் ஷரீப் முழுதும் ஒரே முறையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவனால் இறக்கப்படவில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் வந்த அன்று முதல் அப்பெருமகார் இவ்வுலகத்தை விட்டு மறையும் வரையுள்ள 23 வருஷ காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாகச் சமய சந்தர்ப்பத்துக்கு வேண்டியவாறு வெளியாக்கப்பட்டது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிப் பட்டம் பெற்ற பின் மக்காவிலிருந்த 13 வருஷங்களில் அருளப்பட்டவைகளுக்கு "மக்கி" என்றும், மதீனாவிலிருந்த 10 வருஷ காலங்களில் அருளப்பட்டவைகளுக்கு "மதனி" என்றும் பெயர் சொல்லப்படுகிறது.

"மக்கி" சம்பந்தப்பட்ட அத்தியாயங்களில் பெரும்பாலும் கொள்கைகள், இறைவனின் ஏகத்துவம், விக்கிரக ஆராதனை, மூடக் கொள்கைகளைப் பின்பற்றுவதைப் பற்றிய இகழ், இறைவனின் தாத்து (குணம்), ஸிபாத்து (லக்ஷணங்கள்) ஆகியவைகளைப்பற்றிய ஆதாரங்கள், மரித்தபின் நன்மை தீமைகளுக்குரிய சன்மானம், தண்டனை முதலியவைகள் சம்பந்தமாக அதிகம் கூறப்பட்டிருக்கிறது. "மதனி" சம்பந்தப்பட்ட அத்தியாயங்களில் சட்ட திட்டங்கள் அதிகமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

784
297

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாலேயே திரு குர்ஆன் ஒழுங்கு முறை ஏற்படுத்தப்பட்டது

திரு குர்ஆன் பல வருஷங்களில் கொஞ்சங் கொஞ்சமாக இறைவனால் வெளியாக்கப் பட்டிருந்தாலும் சூக்ஷ்ம உலகில் அது எவ்வித ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டிருக்கிறதோ அதே ஒழுங்கு முறையில் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்கள் திரு குர்ஆனை நமக்கு அமைத்துத் தந்தார்கள். அன்றியும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருகுர்ஆன் முழுவதையும் மனனஞ் செய்த ஹாபிஸாகவு மிருந்தார்கள். திருகுர்ஆனை மனனஞ் செய்த ஹாபிஸ்களும் அதிகமாக இருந்தார்கள். இவர்கள் திரு குர்ஆன் அருளப்பட்டவுடன் அதை மனனஞ்செய்து எந்த இடத்தில் அவ் வசனங்களைச் சேர்த்து ஒத வேண்டுமோ அந்த இடத்தில் அவைகளை சேர்த்து ஒதிக் கொண்டு மிருந்தார்கள். இதல்லாமல் வஹியை எழுதி வைப்பதற்காக நாயகம் (ஸல்) அவர்கள் நியமித்து வைத்திருந்த காத்திபுல் வஹீ களிடமும் இன்னின்ன வாக்கியங்களை இன்னின்ன அத்தியாயத்தில் இன்னின்ன வசனங்களுக்குப் பின்னர் சேர்த்து எழுதுங்கள் என்று நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுக் கொண்டு மிருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டு மறைவதற்குள் ஹஜ்றத்துகளான ஜைதுப்னுதாபித் அன்ஸாரி, அப்துல்லா ஹிப்னு மஸ்ஊது, நாலுயார்கள், மஆதுப்னு ஜபல், உபய்யுப்னு க அப், ஸஅதுப்னு அபீவகாஸ், அப்துல்லா ஹிப்னு அர்கம், தாபித் துப்னு கைஸ் றலியல்லாஹு அன்ஹும் ஆகியவர்களும், மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்ளவும், பிறருக்கு கற்பிக்கவும் வேண்டும் என்ற நோக்கத்துடன் தங்களது அலுவல்களையும், குடும்ப பாரங்களையும் தொலைத்துவிட்டு மஸ்ஜிது நபவியிலேயே தங்கி மார்க்கக் கல்வி பயின்று வந்தவர்களான அஸ்ஹாபுஸ் ஸுப்பா என்பவர்களிற் பெரும்பாலரும் திரு குர்ஆனை ஆதி தொடுத்து அந்தம் வரை மனப்பாடமாக ஒப்புவிப்பவர்களாக இருந்தார்கள். இவ்வாறு திரு குர்ஆனை அவர்கள் மனனஞ் செய்திருந்ததானது ஆச்சரியப்படத்தக்க விஷயமல்ல. இன்றுங் கூட ஒவ்வொரு கிராமத்திலும், பட்டணத்திலும், அநேகம் ஆண்களும், பெண்களும், முதியோரும், இளையோரும், பார்வை யுள்ளோரும், அந்தகரும்

திருக் குர்ஆனை மனனஞ் செய்த ஹாபிஸ்களாக விளங்குகிறார்கள்.

திரு குர்ஆன் எழுதி முடிக்கப்பட்ட காலம்

இதனையல்லாமல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலேயே திருக் குர்ஆன் பரிபூரணமாக எழுதி முடிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதன் பிரதிகள் யாவற்றையும் ஓரிடத்தில் ஒன்று கூட்டி வைக்கவில்லை. இவ்வாறு ஒன்று கூட்டி வைக்க வேண்டியது அவசியம் என்று நாயகம் அவர்கள் காலத்தில் உணரப்படவுமில்லை. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னர், ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில் முஸைலமத்துல் கத்தாப் என்பவன் தன்னை நபி என்று தாவாச் செய்து குழப்பம் செய்ய ஆரம்பித்தான். இதனால், கலீபா அவர்கள் அவனை அடக்குவதற்காக யுத்தம் செய்ய வேண்டிய தாயிற்று. முஸைலமத்துல் கத்தாப் என்பவன் பலமான படையைத் திரட்டிக்கொண்டு முஸ்லிம்களை அதி உக்கிரமாகத் தாக்கி யுத்தம் செய்தான். இறுதியாக முஸ்லிம்கள் ஜெயக் கொடி நாட்டினார்கள். முஸைலமத்துல் கத்தாபும் அவனது துணைவர்களில் அநேகம் யுத்தத்தில் வெட்டுண் டிறந்தனர். முஸ்லிம்களிலும் அநேகம் பேர் மார்க்க யுத்தத்தில் உயிர்த் தியாகம் செய்து ஷஹீதாகி விட்டார்கள். திருக்குர்ஆனை மனனஞ் செய்த ஹாபிஸ்களில் அநேகம் பேர் இந்த யுத்தத்தில் உயிர்த் தியாகம் செய்ய வேண்டிய தாயிற்று. இச்சம்பவம் இனி வரப்போகும் அவசியத்தை ஹஜ்றத் உமர் (றலி) அவர்களை உணரச் செய்தது. அதாவது திரு குர்ஆனை மனனஞ் செய்த ஹாபிஸ்கள் இம்மாதிரி யுத்தங்களில் அதிகமாக ஷஹீதாகிக்கொண்டே இருந்தால் திருகுர்ஆனைப் பாது காப்பதற்குச் சிறந்த முறையாகிய ஹாபிஸ்களை உற்பத்தி செய்யும் முறையானது நம்மை விட்டு அகன்று விடும். பின்னர் வேதக்காரர்களிடமுள்ள வேதங்களைப்போல் இத்திருக்குர்ஆனிலும் கூட்டல் குறைத்தல் உண்டாகுவதற்கு வழி பிற

ந்துவிடும். ஆதலின், திருக் குர்ஆனை எழுதுவித்து ஒன்று சேர்த்து விட வேண்டும் என்று ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் கலீபா அவர்களுக்கு ஆலோசனை கூறினார்கள். இறுதியாக இந்த ஆலோசனை ஒப்புக் கொள்ளப்பட்டது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலேயே நாயகமவர்களுக்குத் திரு குர் ஆனை எழுதும் பணியைச் செய்து வந்தவரும், திருக் குர்ஆனை மனனஞ் செய்த ஹாபிஸுமான ஹஜ்றத் ஜைதுப்னுதாபித் (றலி) அவர்கள் இத் திருப்பணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்கள். இவர் இதற்கு முன் எழுதி வைத்திருந்த பிரதிகளையும் திரு குர்ஆனை மனனஞ் செய்த ஹாபிஸ்களையும் ஆதாரமாகக் கொண்டு தனிப்பிரதி ஒன்றை எழுதிமுடித்தார். இப்பிரதி கலீபாவான ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்களிடமிருந்தது. அவருக்குப் பின்னர் கிலாபத் பதவி ஹஜ்றத் உமர் (றலி) அவர்களுக்கு வந்தபோது அந்தப் பிரதியும் அவரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் காலத்தில் இஸ்லாம் மதம் மிக மிகத்தூர தேசங்களி லெல்லாம் பரவிற்று. இராக், ஷாம், எகிப்து, ஈரான் முதலிய தேசங்களிலுள்ளவர்கள் இஸ்லாம் மதத்தில் கூட்டம் கூட்டமாகச் சேர ஆரம்பித்தனர். ஆனால், திரு குர்ஆனை முற்றிலும் ஆதியோடந்தமாக மனனஞ் செய்தவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று திரு குர்ஆனை போதிப்பது முடியாத காரியமாக இருந்தது. இவ்வித நிலைமையில் ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்கள் கலீபாவாக ஆனார்கள். திரு குர்ஆனைப் பிழையறப் போதிக்கும் வேலையில் குறை யேற்பட்டு, அதனால் குர்ஆனைத் தப்பும் தவறுமாக ஓத வேண்டிய தேற்படும் போல் தோன்றிற்று. இவ் விஷயத்தை ஹஜ்ரத் ஹுதைபத் துப்னுல் யமான் (றலி) அவர்கள் கலிபாவான ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்களுக்கு அறிவித்து, முன்னர் எழுதி வைத்திருக்

கும் திரு குர்ஆன் பிரதியிலிருந்து பல பிரதிகளை எழுதி, இஸ்லாமிய நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இவ்வேண்டுதலின் பேரில் திரு குர்ஆனுக்குப் பல பிரதிகள் உண்டாக்கும் வேலை மறுபடியும் ஹஜ்ரத் ஜைதுப்னு தாபித் (றலி) அவர்களிடம் ஒப்புவிக்கப் பட்டது. இவர் முந்திய பிரதியையும், அப்துல்லா ஹிப்னு ஜுபைர், ஸயீதுப்னுல் ஆஸ் அப்துல்லா ஹிப்னு ஹாரித், இப்னு ஹிஷாம் (றலி) முதலிய ஸஹாபிகளையும் துணையாகக் கொண்டு ஏழு பிரதிகளைத் தயாரித்தார். இவை ஷாம், எகிப்து, இராக் முதலிய தேசங்களுக்கு அனுப்பப் பட்டன. ஆதியில் ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் காலத்தில் தயார் செய்யப்பட்ட அசல் பிரதி ஹஜ்றத் உமர் (றலி) அவர்களுக்குப் புதல்வியும், உம்முல் மூமினீனுமான ஹஜ்றத் ஹப்ஸா (றலி) அவர்கள் வசம் திரும்ப ஒப்புவிக்கப்பட்டது. இந்த ஆதிப் பிரதிக்கு "உம்மு" என்று பெயர். ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்கள் காலத்தில் திருக் குர்ஆன் மறுபடியும் ஒன்று கூட்டி எழுதிப் பிரசுரம் செய்யப்பட்டதால் இவருக்கு "ஜாமிஉல் குர்ஆன்" (திரு குர்ஆனை ஒன்று சேர்த்தவர்) என்ற சிறப்புப் பெயர் வந்தது. பின்னர், இந்தப் பிரதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பிரதிகள் ஆங்காங்கு எடுத் தெழுதப் பட்டு இஸ்லாமிய நாடுகள் முழுதும் பரவின. அத்துடன் திரு குர் ஆனை மனனஞ் செய்த ஹாபிஸ்களும் அந்த நாள் முதல் இந்த நாள் வரை ஆயிரக் கணக்காக தேச மெங்கும் உண்டாகி வருகிறார்கள். எனவே, நபிகள் நாயகமவர்கள் காலத்தில் எவ்விதமாக திரு குர்ஆன் ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்ததோ அதே ஒழுங்கில் இஸ்லாமிய நாடுகளில் திரு குர்ஆன் இன்றும் எழுதப்பட்டும், மனனஞ் செய்யப்பட்டும், ஓதப்பட்டும் வருகிறது. இனிமேலும் இன்ஷா அல்லாஹ் இவ்விதமாகவே இருந்து வரும்.

அத்தியாயம்—2.

கிறிஸ்துவர்களின் ஆட்சேபனைகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் திரு குர்ஆன் எழுதி முடித்து ஒன்று சேர்க்கப்படவில்லை. நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அவர்களுடைய சிஷ்யர்கள் தான் இதை ஒன்று சேர்த்தனர். இவர்கள் தங்களுக்கு இஷ்டப் பட்ட சில அத்தியாயங்களைச் சேர்த்து, தங்களுக்கு இஷ்டப் படாத சிலவற்றை விட்டு விட்டனர் என்று கூறுகிறார்கள். அதற்காக அவர்கள் காட்டும் ஆதாரங்கள் வருமாறு:—

1. "லகதுஜா அக்கும் றஸூலுன்ம் மின் அன்புஸிக்கும், (உங்களுடைய இனத்திலிருந்தே உங்களிடம் ஒரு தூதர் நிச்சயமாக வந்திருக்கிறார்) என்ற வேத வசனம் எனக்கு எங்கும் அகப்படவில்லை" என்று திரு குர்ஆனை ஒன்று சேர்க்கும் வேலையைத் தலைமை வகித்து நடத்திய ஹஜ்றத் ஜைதுப்னு தாபித் அன்ஸாரி (றலி) அவர்கள் கூறியதாக "தப்ஸீர் இத்கானில் எழுதப்பட்டிருக்கிறது. அன்றியும், ஒரு ஆயத்து எழுதப்பட்ட ஒரு துண்டு எங்களுடைய கட்டிலுக்குக் கீழில் கிடந்தது; அதைக்கறையான் அரித்திருந்தது என்பதாக ஹஜ்றத் ஆயிஷா நாயகி(றலி) அவர்கள் கூறியதாக அபூஹூறைஜமத் அன்ஸாரி ஒரு ரிவாயத்துக் கூறியிருக்கிறார். இந்த ரிவாயத்துகளிலிருந்து திரு குர்ஆனிலும் ஆதாரமற்ற ஆயத்துகள் சேர்க்கப் பட்டிருப்பதும், சில ஆயத்துகள் எழுதப்படாமல் விடப் பட்டிருப்பதும் தெரிய வருகிறது. இது போல் இன்னும் பல ஆயத்துகள் விடப்பட்டிருக்கலாம் என்று நாங்கள் (கிறிஸ்துவர்கள்) கூறுகிறோம். இதற்கு உங்களது சமாதானம் யாது?

2. திரு குர்ஆனிலுள்ள வசனங்களில் அநேகம் மாற்றப் பட்டு (மன்ஸூகுத்திலாவத்தாகி) விட்டதாக முஸ்லிம்களிடமுள்ள ஹதீதுகள் சம்பந்தமாக எழுதப்பட்ட முக்கிய கிரந்

தங்களான ஸிஹாஹுஸ் ஸித்தாவில் சொல்லப் பட்டிருக்கிறது. தவிரவும், ஸூரத்துல் பகருவிலுள்ள முதல் ஆயத்துகள் அந்த ஸூரத்தை விட்டு நீக்கப்பட்டு இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, திருக் குர்ஆனிலும் அநேகம் ஆயத்து கள் விடப் பட்டிருக்கின்றன. இவ்விதமாக விடப்பட்ட வேத வசனங்களை எல்லாம் ராமச்சந்திரா என்ற பாதிரி எடுத் தெழுதி "தஹ்ரீபுல் குர்ஆன்" என்று பெயரிட்டு பிரசுரித்தி ருக்கிறார். அதை நீங்கள் மறுக்கவில்லை. ஆகவே, "திருக் குர்ஆனிலும் அநேகம் குறைத்தல்கள் நிகழ்ந் திருக்கின்றன என்பது வெளியாகிறது. திருக் குர்ஆன் ஏனைய நூல் களைப் போல் ஆரம்பத்தில் ஒரு மசோதாவாகத் தயார் செய்யப்பட்டது. அவைகளிலுள்ள வசன நடையிலும் பொரு ளிலும் அற்பமாகவுள்ள வாக்கியங்களை நபியவர்கள் தமது இஷ்டம்போல் தள்ளுபடி செய்திருக்கிறார்" என்று நாங்கள் (கிறிஸ்துவர்கள்) கருதுகிறோம். இதற்கு உங்கள் சமாதான மென்ன?

3. முஸ்லிம்களாகிய உங்களில் ஷியா என்று ஒரு வகுப்பு இருந்து வருகிறது. "ஹஜ்றத் அலி (றலி) அவர்கள் மீதிருந்த பகையின் காரணமாக, ஹஜ்றத் அலி கலீபாவாக வரவேண்டிய அவசியத்தையும், அவருடைய சிறப்புகளையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தாரான அஹ்ல பைத்துகளின் மேன்மைகளையும் பற்றித் திருகுர்ஆனில் கூறப் பட்ட அநேகம் ஆயத்துகளை ஹஜ்றத் உதுமான் (ரலி) திருகுர் ஆனிலிருந்து நீக்கிவிட்டார். இதனை மற்றவர்கள் உணர்ந்து கொள்ளக்கூடாது என்பதற்காக ஹஜ்றத் அப்துல் லாஹிப்னு மஸ்ஊது (ரலி) எழுதிவைத்திருந்த திருகுர்ஆன் பிரதிகளை எரித்துவிட்டார். ஸூரத்து அலீ, ஸூரத்து பாத்திமா' ஸூரத்து ஹஸனைன் என்ற அத்தியாயங்கள் திருக்குர்ஆனில்

இருந்தன" என்று மேற்கண்ட வியாவருப்பார் கூறுகின்றனர். இதற்கு உங்களது சமாதானம் யாது?

முதலாவது ஆதாரத்துக்குச் சமாதானம்

திருகுர்ஆன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் பரிபூரணமாக எழுதி முடிக்கப்பட்டிருந்ததையும், ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி), அவர்கள் கலீபாவாக இருந்த போது அவைகள் யாவும் நாயகமவர்கள் கற்றுக்கொடுத்திருந்த ஒழுங்கின்படி எடுத்தெழுதி ஒரு பிரதி தயார் செய்ததையும், பின்னர் ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்கள் காலத்தில் அவைகளிலிருந்து ஏழு பிரதிகள் தயார் செய்ததையும்பற்றிய விவரத்தையும், யாம் மேலே கூறி இருக்கிறோம். இனி இவர்கள் காட்டிய ஆதாரங்கள் எம்மட்டும் சரியாக இருக்கின்றன என்பதைக் கவனிப்போம்.

திருகுர்ஆனை ஒன்று கூட்டி எழுதும் பணியைச் செய்த ஹஜ்றத் ஜைதுப்னுதாபித் (றலி) அவர்கள், "உங்களுடைய இனத்திலிருந்தே உங்களுக்கு ஒரு தூதர் நிச்சயமாக வந்துவிட்டார்" என்ற கருத்துள்ள ஆயத்தைத் தேடிப் பார்த்ததையும், அபூ ஹுஜைமத் அன்ஸாரி (றலி) அவர்கள் எழுதி வைத்திருந்த பிரதியில் அதனைக் கண்டதாக தப்ஸீர் "இத்தானி"ல் கூறியிருப்பதையும் ஹஜ்றத், ஆயிஷா (றலி) அவர்கள் கட்டிலின் கீழ் திரு குர்ஆன் எழுதிய துண்டுக் கடிதம் ஒன்றைக் கறையான் அரித்துக் கிடந்ததையும் ஆதாரமாகக் கொண்டு திரு குர்ஆனில் சில ஆயத்துகள் எழுதாமல் விடப்பட்டிருக்கலாம் என்று கிறிஸ்துவர்கள் ஆக்ஷேபனை செய்கிறார்கள். இந்த ஆதாரம் அவர்களுக்குச் சாதகமான ஆதாரமன்று. ஏனென்றால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், ஸஹாபிகளில் பலருக்கும் திரு குர்ஆன் மனனமாக இருந்ததுடன், நாயகமவர்களின் காலத்திலேயே அது எழுதி வைக்கப்பட்டுமிருந்தது. இவ்வித நிலைமையில், திரு குர்ஆனிலுள்ள ஆயத்துகள் எழுதி வைக்கப்பட்டிருந்த வேறு ஒரு துண்டு கறையான் அரிக்கப்பட்டுக் கிடந்தது என்பதானது அசல் குர்ஆனில்

தவறு நிகழ்ந்து விட்டது என்பதற்கு ஆதாரமாகாது. இம் மாதிரி ஒரு துண்டு மாத்திரமென்ன பல துண்டுகள் கறை யானல் அரிக்கப்பட்டுக் கிடந்தாலும் இவைகளை கவனிக்கா மலே திரு குர்ஆனை எழுதி எடுத்துச் சொல்வதற்கு அசல் பிரதி ஒன்று தயாராக இருந்து கொண்டிருக்கிறது. இதுவு மல்லாமல், இந்த அசல் பிரதி இல்லாதிருந்தாலும் அதனைப் பாடமிட்டிருந்த நூற்றுக் கணக்கான ஸஹாபிகள் அதனைக் கண்டு பிடித்து விடுவார்கள். ஆதலால், திரு குர்ஆனிலிரு ந்து ஒன்றிரண்டு ஆயத்துகள் எழுதப்படாமல் விடப்பட்டிரு க்கலாம் என்னும் கூற்றுக்கு திரு குர்ஆன் ஆயத்து எழுதப் பட்ட ஒரு துண்டு கறையானல் அரிக்கப்பட்டு கட்டிலின் கீழில் கிடந்தது என்பது ஆதாரமாகாது.

தவிர, ஹஜ்றத் ஜைதுப்னுதாபித் அன்ஸாரி (றலி) அவர்கள் திரு குர்ஆனிலுள்ள ஒரு ஆயத்தைத் தேடிப்பார்த் தார் என்பதானது, இதர ஹாபிஸ்களுக்கு அந்த ஆயத்து ஞாபகமாக இருந்ததுபோல் ஹஜ்ரத் ஜைதுப்னு தாபித் (றலி) அவர்களுக்கும் ஞாபகமிருந்தது என்பதையும் அபூஹுஜை மத் அன்ஸாரி (றலி) அவர்கள் தமது சொந்தத்துக்காக எழுதி வைத்திருந்த குர்ஆன் பிரதியையும் வாங்கிப் பார்த்துக் கொள் வது நல்லது என்ற அபிப்பிராயத்தின் பேரிலேயே அந்தப் பிரதியை வாங்கிப் பார்த்து அதில் அந்த ஆயத்து எழுதப் பட்டிருந்ததைக் கண்டு பிடித்திருக்கிறார் என்பதையுந் தான் அறிவிக்கிறது. இதனையல்லாமல் "லகதுஜா அகரும் (நிச்சய மாக உங்களினத்திலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்தி ருக்கிறார்)" என்ற பெயருள்ள ஆயத்து அபூ ஹுஜைமத் அன்ஸாரி (றலி) அவர்களின் கையேட்டுப் பிரதியில் மாத்திரம் தான் சாக்ஷியமாக இருந்தது. வேறு ஆதாரம் அதற்கு இல்லை. இவ்விதமாகத் தக்க சான்றுகளில்லாத வாக்கியங் களும் திரு குர்ஆனில் சேர்த்து எழுதப்பட்டு விட்டன என் பதற்கு ஆதாரமாகக் காண்பிக்க முடியாது. ஆகவே, ஜைதுப் னுதாபித் (றலி) அவர்கள் "லக்துஜா அக்கும்" என்ற ஆயத்

தைத் தேடிப் பார்த்தது திரு குர்ஆனில் தவறு ஏற்படவில்லை என்பதற்குத் தான் ஆதாரமாக இருக்கிறது என்பது தெளிவு.

இரண்டாவது ஆதாரத்துக்குச் சமாதானம்

மன்ஸூகுத் திலாவத்துகளைப் பற்றி அதாவது திரு குர் ஆன் வசனங்களை ஓதக் கூடாது என்று மாற்றி அவைகள் நீக்கி விடப் பட்டன என்பதைப் பற்றி கிறிஸ்துவர்கள் சில ரிவாயத்துகளை ஆதாரமாகக் கூறி திரு குர்ஆனைத் திருத்தி எழுதியதாகவும், அவ்வாறு எழுதியபோது சில வசனங்களை எழுதாமல் விட்டு விட்டதாகவும் ருஜூப்படுத்த முயலு கிறார்கள். கிறிஸ்துவர்கள் இதற்காக எடுத்துக் காட்டி இருக்கிற ரிவாயத்துகள் உறுதிப்பட்ட ஹதீதுகளன்று, நாயக வாக்கியக் கலையில் தேர்ந்த பண்டிதர்கள் இந்த ரிவா யத்துகளை "கபரே ஆஹாத்" அதாவது தனிப்பட்டவர்கள் கூறிய சமாச்சாரங்களின் ஜாபிதாவில் சேர்த்து வைத்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் கூறிய சமாச் சாரங்கள் உறுதியாக ருஜூவான ஹதீதுகளன்று. நிற்க, திருக் குர்ஆனிலுள்ள ஒவ்வொரு ஆயத்தும், ஆயத்தின் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு அக்ஷரம் கூடப் பிச கில்லாமல் சரியான ருஜூக்களை அதாவது தகுதி யான ஆதாரங்களைக் கொண்டு உறுதி செய்யப் பட்டிருக்கின் றன. எனவே, மன்ஸூகுத்திலாவத்தென்று கிறிஸ்து வர்கள் கூறுகிற அரபி வாக்கியங்கள் முதலில் திரு குர்ஆனின் வாக்கியங்கள் தான் என்று தக்க ஆதாரத்துடன் ருஜூப்படுத் திவிட்டு, அதற்கப்புறம் அவைகள் மன்ஸூகுத் திலாவத் (மாற்றப்பட்டவைகள்) என்று ருஜூப் படுத்தப்பட வேண்டும். ஆகவே, மன்ஸூகுத்திலாவத் என்று சொல்லிக் கொண்டு கிறிஸ்துவர்கள் எடுத்துக் காண்பிக்கிற அறபி வாக்கியம் திரு குர் ஆனின் வசனம் தான் என்று ருஜூவாகவுமில்லை. அது மன்ஸூகுத் திலாவத் அதாவது மாற்றப் பட்ட ஆயத்து என்று தக்க சாக்ஷியங்களைக் கொண்டு ருஜூவாகவு மில்லை ஆதலால், ஆதாரமற்ற விஷயங்களைக் கொண்டு ஆக்ஷேபனை செய்வது சரியன்று.

நிற்க, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அன்று தொடுத்து இன்றுவரை உலகத்திலுள்ள முஸ்லிம்களனைவராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டு வந்திருக்கிற திருக்குர்ஆனையோ, அதிலுள்ள ஒரு வசனத்தையோ அல்லது ஒரு வார்த்தையையோ ஒப்புக் கொள்ள மறுக்கிறவர் முஸ்லிமாக இருக்க முடியாது. ஆனால், மன்ஸூகுத் திலாவத் தென்று கிறிஸ்துவர்கள் எடுத்துக் காண்பிக்கிற இவ்வறபி வாக்கியங்களை திரு குர்ஆன் அல்ல என்று மறுப்பவர் காபிராகி விடமாட்டார் என்பதையும் கிறிஸ்துவர்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம். இவ்வித நிலைமையில் நபிகள் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் திருகுர் ஆனுக்கு மசோதாவாக ஒரு காப்பியை எழுதி, பின்னர் அதில் சொன்னயமும் பொருணயமும் இல்லாத வாக்கியங்களை எடுத்து விட்டுப் பாக்கியை திரு குர்ஆனென்று ஏற்படுத்தி விட்டதாக கிறிஸ்துவர்கள் நினைப்பது தவறு. தங்களுடைய மனத் திருப்திக்காக அவர்கள் சொல்லிக் கொண்டாலும் அதை எந்த முஸ்லிமும் ஒப்புக் கொள்ள மாட்டார். இதற்கு எத்தகைய ஆதாரமும் கிடையாது.

அன்றியும், மசோதா எழுதுவதும், அதைத் திருத்தி அமைத்துச் சுத்தமான பிரதியாக அமைத்தலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாலேயே நிகழ்ந்திருக்க வேண்டும். கிறிஸ்துவர்கள் கூறுகிற இந்த மன்ஸூகுத் திலாவத்துகள் என்பன நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் உள்ள கலீபாக்கள் காலத்தில் நடைபெற்றன என்பது கிறிஸ்துவர்கள் ஆட்சேபனையிலிருந்து தெரிய வருகிறது. ஆதலால், நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் மசோதா எழுதி அவர்களே அதை சுத்தமான பிரதியாக அமைத்தார்கள் என்பதற்கு அவர்களுடைய ஆட்சேபனையில் எடுத்துக் காட்டப்படும் ஆதாரம் சரியானதன்று. ஆயினும், உண்மையை உணராமல் அவர்கள் ஆக்ஷேபனை செய்திருப்பதால் உண்மையை அவர்களுக்கு எடுத்துரைப்பாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரு குர்ஆனை ஜனங்களுக்கு ஓதிக் காண்பிக்கும்போது சிற்சில இடங்களில் வியாக்கியானமாக இரண்டொரு வார்த்தைகளைச் சேர்த்துக் கூறுவதுண்டு. வியாக்கியான வார்த்தைகளையும் ஜனங்கள் தங்களுடைய சொந்த ஏட்டுப் பிரதிகளில் சேர்த்து எழுதி வைத்திருந்தனர். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இக்குவலயத்தை விட்டு மறைவதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்னர், ஹஜ்றத் ஜிப்ரயில் அலைஹிஸ்ஸலாமவர்கள் திருகுர்ஆன் முழுவதையும் ஆதியோடந்தமாக ஓதிக் காட்டினார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் அதை ஜனங்களுக்கு ஓதிக்காட்டினார்கள். இவ்வாறு ஓதிக் காட்டப் பட்ட திரு குர்ஆனில் நாயகமவர்கள் வியாக்யான முறையில் சேர்த்துச் சொல்லி இருந்த வார்த்தைகள் திரும்ப ஓதிக் காட்டப் படவில்லை. ஆதலால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமாகச் சேர்த்து வியாக்யானம் செய்த வார்த்தைகளை எழுதி வைத்திருந்தவர்களிற் சிலர் இவ்வியாயான வார்த்தைகளை திரு குர்ஆன் என்றும், பின்னர் அவை மன்ஸூகாக்கப்பட்டு (மாற்றப்பட்டு) விட்டன என்றும் தவறாக நினைத்துக்கொண்டனர்.

திரு குர்ஆன் வேறாகவும், அதனுடைய வியாக்யானம் வேறாகவும் இருக்க வேண்டும். அவை இரண்டையும் ஒன்று கூட்டி எழுதி வைத்தால் பின்னைய சந்ததிகள் அவைகளைப் பாகுபாடு செய்து தெரிந்து கொள்ள முடியாது என்பதை கலீபாக்களும் உணர்ந்து, திருகுர்ஆனையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வியாக்யானத்தையும் ஒருங்கே சேர்த்து எழுதிவைக்கப்பட்டிருந்த பிரதிகளை ஸஹாபிகளிடமிருந்து வாங்கி ஒழித்து விட்டு திருகுர்ஆனில் குர்ஆன் அல்லாத வேறு வார்த்தை எதுவும் எழுதக்கூடாது என்று கண்டிப்பாகத் திட்டஞ் செய்துவிட்டார்கள். அல்ஹம்து ஸூரத்து ஓதி முடிந்தவுடன் சொல்லப்படுகிற 'ஆமீன்' என்ற வார்த்தையையுங்கூட திரு குர்ஆனில் எழுதப்படாது என்று கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்துமிருந்தார்கள்.

ஆனல் பிற்காலத்தில் திரு குர்ஆன் முஸ்லிம்களிடம் பரவி அதில் எவ்விதக் குழப்பமும் சந்தேகமும் ஏற்பட இடமில்லை என்று உறுதிப்பட்ட பின்னர் திரு குர்ஆனில் அரை ஜுஸ்உ, கால் ஜுஸ்உ, முக்கால் ஜுஸ்உ, பிரிவு ஆகியவைகளை அறிவிக்கக் கூடிய அடையாளங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆதலால், மன்ஸூகுத் திலாவத் என்று சிலரால் சொல்லப்படும் ரிவாயத்துகளை ஆதாரமாகக் கொண்டு திரு குர்ஆனின் மீது ஆக்ஷேபனையைக் கிளப்புவது தவறான விஷயமாகும்.

மூன்றுவது ஆதாரத்துக்குச் சமாதானம்

திரு குர்ஆனில் ஸூறத்து அலீ, ஸூறத்து பாத்திமா, ஸூறத்து ஹஸனைன் என்று பல அத்தியாயங்களிருந்ததாகவும், ஹஜ்றத் அலி (றலி) அவர்கள் கலீபா பதவியை வகிக்க வேண்டுமென்பது பற்றியும் அவர்களது மேன்மை சிறப்புகளைப்பற்றியும், திரு குர்ஆனில் பல ஆயத்துகள் இருந்ததாகவும், அவைகளை ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்கள் திரு குர்ஆனிலிருந்து அகற்றி விட்டதாகவும் ஷியா வகுப்பினர் தவறான கூற்றாகும்.

ஷியா வகுப்பு உலமாக்களைச் சேர்ந்த ஷெய்கு ஸதூக் அபூஜஃபர் முஹம்மதுப்னு அலி பாபவிய்யா என்பவர் எழுதிய ஷியா மதக் கொள்கை சம்பந்தப்பட்ட நூலில் "அல்லாஹு சுப்ஹானஹு வ தஆலா நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளிய குர்ஆன் தான் இப்பொழுதும முஸ்லிம்களிடம் இருந்து வருகிறது. இதில் எவ்விதக் கூட்டலும் குறைத்தலும் செய்யப்படவில்லை" என்று எழுதி இருக்கிறார்.

இன்னும், ஷியா வகுப்பினரில் சிறந்த அறிஞரான செய்யிது முர்த்தஜா என்பவர் தம்முடைய "மஜ்மஉல்பயான்" என்ற தப்ஸீரில் "நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் இருந்த குர்ஆன் தான் கொஞ்சமும் வித்தியாசமின்றி இப்

பொழுதும் இருந்துவருகிறது" என்று எழுதி இருக்கிறார். இதே வகுப்பைச் சேர்ந்த காஜீ நூறுல்லா ஷோஸ்தரீ என்பவர் தம்முடைய "கித்தாபு மஸாயிபின் நவாஸிப்" என்ற கிரந்தத்தில் "திருகுர்ஆனில் திருத்தலும் பேதகமும் செய்யப்பட்டிருக்கிறது என்பதாக ஷியா வகுப்பினர் கூறுகிறார்கள் என்று சொல்லப்படும் செய்தி சுத்தத் தவறு என்பதாக எழுதியிருக்கிறார். இதே வகுப்பைச் சேர்ந்த முல்லா ஸாதிக் என்பவர் தம்முடைய "ஷரஹு கில்னி"யில் "இந்த குர்ஆன் இதேவிதம் இமாம் மஹ்தீ அவர்கள் வரும் வரை ஸலாமத்தாக இருந்து வரும்" என்று கூறி இருக்கிறார். முஹம்மது ப்னு ஹஸன் ஆமிலி என்பவரும் ஷியா வகுப்பைச் சேர்ந்த ஒரு பெரியார். இவர் தமது வகுப்பினர் மீது கூறும் இவ்வபாண்டக் கூற்றை அடியுடன் மறுத்திருக்கிறார். ஆதலால், திருகுர்ஆனில் ஸூறத்து அலி, ஸூறத்துபாத்திமா, ஸூறத்து ஹஸனைன் என்ற அத்தியாயங்கள் இருந்தன என்றும், ஹஜ்றத் அலி (றலி) அவர்கள் பால் ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்களுக்கு இருந்த துவேஷத்தால் அவைகளைத் திரு குர்ஆனிலிருந்து எடுத்துப் போட்டார் என்றும் ஷியா வகுப்பினர் கூறுகிறார்கள் என்று கிறிஸ்துவர்களாகிய நீங்கள் கூறுவதற்கு ஆதாரமில்லை. ஆயினும், இவ்விதமான பிரஸ்தாபம் உண்டானதற்குக் காரணம் யாது என்பதை விளக்குவாம்.

ஷியா வகுப்பு உண்டான விபரம்

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பிரதிநிதியாக இருந்து முஸ்லிம்களுக்குத் தலைமை வகிக்கத் தகுந்தவர் யார் என்பதுபற்றி ஹிஜ்ரீ முதலாவது நூற்றாண்டிலேயே முஸ்லிம்களுக்குள் தகராறு ஏற்பட்டுவிட்டது. ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) ஹஜ்றத் உமர் பாறூக் (றலி) ஹஜ்றத் உதுமான் துன்னூரைன் (றலி) ஆகிய மூவரும் கலீபா பதவியை அடைந்தது நியாயமும் ஒழுங்குமாகும். கிலாபத் பதவியானது முஸ்லிம்களின் நிர்மாண சம்பந்தப்பட்டதாகும். ஆதலால், திறமையும், அனுபவமும் உள்ள

வரை இப்பதவிக்கு தெரிந் தெடுத்துக் கொள்ளலாம் என்று முஸ்லிம் பெரும்பான்மையினர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால், ஷீஅயே அலீ (அதாவது அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்களைச் சேர்ந்த கூட்டத்தார்) என்று தங்களைப் பற்றிக் கூறிக் கொண்ட சிறு கூட்டத்தார், "நபித்துவத்தைப்போல் கிலாபத் பதவியும் தனிப்பட்ட ஒரு பெரும் அந்தஸ்தாகும். ஆகவே, இதற்காக முஸ்லிம்கள் ஒருவரைத் தெரிந்தெடுக்க வேண்டியதில்லை. இந்தப் பதவிக்கு வருகிற தலைவர் பாபத்தை விட்டுக் காக்கப்பட்ட மஃஸூமாக இருக்கிறார். நபிமார்களின் பேரில், ஈமான் கொள்ளாவிட்டால் முக்தி (நஜாத்) கிடைக்காதது போல் கலீபாவின் மீது ஈமான் கொள்ளாவிட்டாலும் முக்தி (நஜாத்) கிடைக்காது. எனவே, ஹஜ்றத் அலீ (றலி) அவர்கள் தமது காலத்திய இமாமாகவும், கலீபாவாகவு மிருந்தார்கள். பின்னர், அவாது புதல்வர் ஹஸன் (றலி), அதற்குப் பிறகு ஹுஸைன் (றலி), பிறகு ஜைனுல் ஆபிதீன் (றஹ்), பிறகு பாக்கிர் (றஹ்), பிறகு மூஸா காஜிம் (றஹ்), பிறகு இவருடைய புதல்வர் இவ்விதமாக பன்னிரண்டாவதாக இமாம் மஹ்தீ ஆகியவர்கள் தாம் கலீபா பதவி வகிக்கத் தகுந்தவர்கள். இமாம் மஹ்தீயுடன் கிலாபத் பதவி முற்றுப்பெற்று விடுகிறது. இவர் தற்போது ஸாமிராவின் குகையிலிருக்கிறார். கடைசிகாலத்தில் வெளியாவார்" என்று கூறுகிறார்கள். இவர்களுக்கு இத்னு அஷரிய்யா என்றும் பெயர். இவர்களைத் தவிரவுள்ள ஜைதிய்யா, இஸ்மாயீலிய்யா என்ற ஷியா வகுப்பார் "ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்களைப் பார்க்கினும் ஹஜ்றத் அலீ மேலானவர். ஆதலால், அவருக்கு கிலாபத் பதவி யளித்திருக்க வேண்டும். ஆயினும் ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்களுக்கு கிலாபத் பதவி அளித்தது குற்றமன்று. அவ்வாறு அளித்தது ஜாயிஸ் தான்" என்று கூறினார்கள். எனவே, ஷியா வகுப்பார் முஸ்லிம் பொது ஜனங்களிடம் வித்தியாசப்பட்டு அபிப்பிராய பேதங் கொண்டது கிலாபத் பதவிக்கு அதிக அருகதையுள்ள

வர் யார் என்ற விஷயத்தில்தான். திருக்குர்ஆனில் பேதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதனுலல்ல. தவிர, ஹஜ்றத் அலீ, ஹஜ்றத் பாத்திமா, ஹஜ்றத் ஹஸன், ஹஜ்றத் ஹுஸைன் (றலி யல்லாஹு அன்ஹும்) உள்பட ஹாஷிம் குலத்தவர்களும் திரு குர்ஆனை ஓதிக் கொண்டும் எழுதி வைத்துக் கொண்டு மிருந்தனர்.

ஷியா வகுப்பார் கூறுவதாகக் கிறிஸ்துவர்கள் எடுத்துக் காட்டும் ஸூறத்து அலீ, ஸூறத்து பாத்திமா ஸூறத்து ஹஸனேன் ஆகிய அத்தியாயங்கள் உண்மையில் திரு குர்ஆனில் இருந்திருக்குமாயின், அந்த அத்தியாயங்கள் மேற் கூறப்பட்ட ஹாஷிம் குலத்தார் எழுதி வைத்திருந்த திரு குர்ஆனில் இருந்திருக்கும். அன்றியும் ஹஜ்றத் உதுமான் (றலி) அவர்கள் துவேஷத்தினுல் அந்த அத்தியாயங்களை திரு குர்ஆனை விட்டு அகற்றி யிருந்தால், அதற்குப் பின்னர் கிலாபத் பதவியை வகித்த ஹஜ்றத் அலீ (றலி) அவர்கள் அந்த அத்தியாயங்களைத் திரும்பவும் எழுதி ஒழுங்கு செய்திருப்பார்கள்.

தவிரவும், கலீபா பதவியை வகித்து வந்த ஹஜ்றத் அபூபக்கர், உமர், உதுமான் றலியல்லாஹு அன்ஹும் ஆகியவர்களிடம் சொந்தப் பட்டாளம் இருக்கவில்லை. பிரத்தியேகப் போலீஸ் படை இருக்கவில்லை. அவசியமேற்படும் போது முஸ்லிம் பொது ஜனங்கள் தாம் பட்டாளமாகச் சேர்ந்து பகைவர்களை எதிர்த்து யுத்தம் செய்து வந்தனர். இவ்வித நிலைமையில் இந்த கலீபாக்கள் சூழ்ச்சி செய்து திருகுர் ஆனில் பேதகம் செய்ய முன் வந்திருப்பார்களாயின், அக் காலத்திலிருந்த ஏனைய ஸஹாபிகள் அவர்களை உடனே கிலாபத் பதவியைவிட்டு நீக்கி, தக்கவரை கலீபாவாக நியமித்து விட்டிருப்பார்கள். ஹஜ்றத் அலீ (றலி) அவர்களும் இவ்வாறு செய்யப்படுவதைப் பார்த்துக் கையைக் கட்டிக் கொண்டிருந்து விட மாட்டார்கள். ஆதலின், கிறிஸ்துவர்கள் செய்யும் ஆக்ஷேபனைகளும் தவறு, அதற்காக அவர்கள் காண்பிக்கிற ஆதாரங்களும்

தவறு என்பது வெளிப்படை. எனவே, திரு குர்ஆன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலேயே பரிபூரணமாக எழுதி வைக்கப்பட்டிருந்தது என்பதும், அதில் ஒரு அக்ஷரம் கூடப் பேதகப்படவில்லை என்பதும் தான் மெய்யாகும்.

அத்தியாயம் 3.

திரு குர்ஆனும், பைபிளும்

தௌராத், ஸபூர், இஞ்சில் முதலிய வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் சமாச்சாரங்களையே திரு குர்ஆன் திரும்பக் கூறுகிறது. ஆனால், அந்த வேதங்களில் கூறப்படாத சில செய்திகளை அதிகமாகவும் கூறி யிருக்கிறது. சில இடங்களில் வேதங்களிற் சொல்லப்பட்ட விஷயங்களை மறுத்து அதற்கு எதிராகவும் கூறுகிறது. ஆனால், அந்த வேதங்களைத் திரு குர்ஆன் சத்திய வேதங்களென ஒப்புக்கொண்டு அவைகளைப் புகழுகிறது. இவ்வித நிலைமையில் அவ்வேதங்களில் இல்லாதவைகளை மிகைப்படுத்திக் கூறுவதும்,அவைகளுக்கு மாறாகக் கூறுவதும் தகுமா? என்று கிறிஸ்துவர்கள் கேள்வி கேட்கின்றனர்.

இக்கேள்விக்கு பதில் கூறுவதற்கு முன் திரு குர்ஆனில் முற்காலத்து நபிமார்களினுடையவும், அவர்களது சமூகத்தாரினுடையவும் செய்திகள் பிரஸ்தாபிக்கப் பட்டதன் உண்மைக் கருத்தையும், நோக்கத்தையும் யாம் எடுத்துக் கூறுவது அவசியமென்று நினைக்கிறோம். இவ்விஷயங்களைப் பொதுவாகக் கூறி விட்டு அப்பால் கிறிஸ்துவ சகோதரர்களின் மேற்கண்ட கேள்விக்குப் பதில் கூறுவாம்.

அல்லாஹு தஆலா மக்களுக்குக் கண்களையும், காதுகளையும் கொடுத்திருக்கிறான். இவ்விரண்டையும் கொண்டு

மனிதன் அல்லாஹு தஆலாவின் தெய்வீகத் தன்மையை உணர்ந்து, அவன் நமக்கருளியிருக்கும் அனுக்கிரகங்களை தெரிந்து, அவனுக்கு நன்றி செலுத்தி வழிப்படுவது அவசியமாகும். ஆகவே, நமக்கு எதிரில் இருக்கக்கூடிய சாமான்களையும், நிகழும் நிகழ்ச்சிகளையும் கொண்டு அல்லாஹு தஆலாவின் தெய்வீகத் தன்மையை உணர்ந்து கொள்கிறோம். இத்தன்மை போல் நமது கண்களுக்கு எதிரில் இல்லாத வஸ்துக்களையும், நிகழ்ச்சிகளையும் நாம் கேள்விப்பட்டு அவைகளிலிருந்து பாடங் கற்றுக்கொள்வது அவசியமாகும். ஆகவே, முற்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் நடைபெற்ற சம்பவங்களையும் கொண்டு நாம் உபதேசம் பெற்றுக் கொள்ளாமலும், அவைகளிலிருந்து பாடங் கற்றுக் கொள்ளாமலும் இருப்பதானது, நமது எதிரிலுள்ள வஸ்துக்களையும் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் பார்க்கக் கூடாது என்ற எண்ணத்தால் நமது கண்களை மூடிக் கொண்டு வாளா இருந்து விடுவதற்கே ஒப்பாகும். ஆதலின், முற்காலத்திலிருந்த நபிமார்களினுடையவும், அவர்களது சமூகத்தாரினுடையவும் செய்திகள் திரு குர்ஆனில் பிரஸ்தாபிக்கப்படுவது குற்றமாகாது.

மக்களின் முன்னேற்றத்தையும், சீர்திருத்தத்தையும் கருதி பல பெரியார்களின் ஜீவிய சரித்திரங்களையும், உபதேசங்களையும் அரசாங்கங்களையும் பற்றிய சரித்திர வரலாறுகளை நமது காலத்திலுள்ள படித்தவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால், சரித்திரப் பூர்வமாக நம்மவர் எழுதும் சரித்திரத்தில் நிகழ்ச்சிகளும் சம்பவங்களும் ஆரம்ப முதல் கடைசி வரை வரிசைக் கிரமமாகவும், திரும்பத் திருப்பக் கூறப்படாமலும் இருக்க வேண்டும். ஒரு முறை கூறியவைகளை மறு முறை கூறுவது "கூறியது கூறல்" என்ற குற்றத்தில் வந்து விடுவதாகக் கருதப்படுகிறது. ஆனால், திரு குர்ஆன் முற்காலத்தைய நிகழ்ச்சிகளையும், சம்பவங்களையும் உபதேச முறையில் எடுத்துக் காட்டுவதால் சரித்திராசிரியர்களின் சட்ட திட்

டத்தைக் கவனிக்காமல் வேறு விதமான முறையைக் கடைப் பிடித்திருக்கிறது. அம்முறைகளாவன:—

1. ஒரு வேதம் ஒரு தேசத்தில் அருளப்படுமாயின் முதல் முதலாக அந்த தேசத்து ஜனங்கள் எந்தெந்தச் சம்பவங்களை யும் நிகழ்ச்சிகளையும் தெரிந்திருக்கிறார்களோ அந்த நிகழ்ச்சிக ளிலிருந்தும் சம்பவங்களிலிருந்தும் அந்த ஜனங்களுக்கு எடுத் துக் கூறுவதுதான் அவர்களை நேரான வழியிற் கொண்டு வருவ தற்கான சரியான முறையாகும். இதனை யனுசரித்தே அறபி தேசத்திலுள்ள யூத கிறிஸ்துவர்கள் தெரிந்து கொண்டிருந்த நபிமார்களையும், அவர்களது சமூகத்தாரையும் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. ஆதலால், நபிமார்களிற் சிலரை மாத்திரம் குறிப்பிட்டு விட்டு ஏனைய நபிமார்களைப் பற்றிச் சொல்லாமல் பாரபட்சம் செய்திருப்பதாகக் கருத இடமில்லை.

2. நபிமார்களிலும், நபிமார்களால் நடைபெற்ற நிகழ்ச்சி களிலும் வரிசைக் கிரமத்தைக் கவனிக்கவில்லை. ஏனென்றால், ஜனங்களுக்கு நேர்வழிக்கான முறையைக் காட்டுவது தான் இறைவனின் நோக்கமாக இருந்தது. ஆதலால், அந்தந்த இடத் துக்குத் தக்க சமாச்சாரங்களே சொல்லப் பட்டிருக்கின்றன.

3. மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும் பிர் ஔனுக்கு மிடையில் நடந்த சம்பவம் பலமுறை கூறப் பட்டிருக்கிறது. இவ்வாறு கூறுவது பொருந்தாது என்று சிலர் கருதக் கூடும். விஷயம் அவ்வாறன்று. இஸ்ரவேலருக்கு பிர் ஔன் செய்த அநீதி அக்கிரமங்களையும், அவனை விட்டு இஸ்ரவேலருக்கு ஹஜ்றத் மூஸா (அலை) அவர்கள் விடு தலை அளித்ததையும் சொல்லிக் காண்பிக்க வேண்டும் என்ற இடங்களில் இதற்கு வேண்டிய அளவு மாத்திரம் கூறப்பட்டிருக்கிறது. பிர்ஔனின் அடங்காமையையும், கீழ்ப் படியாமையையும் இறைவனின் தூதரை எதிர்த்ததையும் அறி வித்து அதனால் அவனுக்கு நேர்ந்த கதியை விளக்கி நபிகள் நாயகமவர்களை எதிர்த்து நிற்கும் விரோதிகளும் இறுதியில்

பிர்ஔனைப் போலவே இல்லா தொழிலர் என்பதை அறிவிக்கும் நோக்கத்தில் கூறப்பட்ட இடங்களில் அந்த இடத்திற்கு வேண்டியளவு கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமாக ஒரே சரித்திரம் பற்பல நோக்கத்தில் பற்பல கருத்துகளை அனுசரித்துச் சிறிது விபரமாகவும், சிறிது சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கிறது. இதனால், ஒவ்வொரு இடத்திலும் இந்நிகழ்ச்சிகள் கூறப்படும்போது புதிது புதிதான புத்திமதிகளும் உணர்ச்சிகளும் மகா ஜனங்களுக்கு உண்டாகுவதா யிருக்கிறது.

4. தற்காலத்திலுள்ள சரித்திராசிரியர்கள் தங்களுக்கு மாறாகவுள்ளவர்களின் சரித்திரத்தை எழுதுகையில் சில நல்ல அம்சங்களை மறைத்தும், சில விஷயங்களை மிகைப்படுத்தியும் கூறுவதுண்டு. ஆனால், திரு குர்ஆனில் சொல்லப்பட்ட சரித்திர நிகழ்ச்சிகளில் இவ்விதமான குறைகளெதுவும் நிகழவில்லை யென்பதைப் பிறமத சகோதரர்கள் உணர வேண்டும்.

இதுவரை நாம் கூறிய அம்சங்களை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு திரு குர்ஆனில் சொல்லப் பட்டிருக்கும் விஷயங்களைச் சர்ச்சை செய்தால் இவ்வுண்மை நன்கு புலனாகும். இனி அசல் ஆக்ஷேபனையைக் கவனிப்போம். கிறிஸ்துவ சகோதரர்கள் செய்த மேற்கண்ட ஆக்ஷேபனையில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. அதாவது பைபிளில் கூறப்பட்ட சரித்திரங்கள் திரு குர்ஆனில் குறைவாகவும், சில இடங்களில் அதிகமாகவும் கூறப்பட்டிருக்கின்றன என்பது ஒரு அம்சம். பைபிளுக்கு நேர்மாறாக விஷயங்களைத் திரு குர்ஆன் கூறி பைபிளில் சொல்லப்பட்டதை மறுப்பது இரண்டாவது அம்சம். ஆகவே, முதலாவது அம்சத்தை முதலில் எடுத்துக் கொள்வோம்.

ஆக்ஷேபனை 1

ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு ஷைத்தானை (இப்லீஸை)த் தவிர இதர மலக்குகள் ஸுஜூது செய்த விபரம் பைபிளில் கூறப்படவில்லை. திரு

குர்ஆனில் மலக்குகள் ஆதம் அலை ஹிஸ் ஸலா மவர்களுக்கு ஸுஜூது செய்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இவ் விஷயம் பைபிளில் இல்லாத விஷயமாகும்.

சமாதானம்

பைபிள் பழைய ஏற்பாட்டில் இவ்விஷயம் கூறப்பட வில்லையாயினும், **அப்போஸ்தலனுகிய பவுல் எபிரேயருக்கு எழுதின நிருபம் அதிகாரம் I. வசனம் 6-ல்,**

> "மேலும், தமது முதற் பேறுனவரை உலகில் பிரவேசிக்கச் செய்தபோது "தேவ தூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக் கடவர்கள் என்றார்"

என்று கிறிஸ்துவர்களிடமுள்ள பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆதலால், திரு குர்ஆன் பைபிளில் இல்லாத விஷயத்தை அதிகப்படியாகக் கூறிவிடவில்லை. ஆயினும், பைபிளில் தான் இவ்விஷயத்தைச் சொல்ல வேண்டிய இடத்தில் தெளிவாகச் சொல்லவில்லை என்பது நன்கு தெரிகிறது.

ஆக்ஷேபனை 2.

நோவாவின் பிரளய காலத்தில் ஹஜ்றத் நூஹ் அலை ஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வயது 600 என்றும் அதற்குப் பின்னர் 350 வருஷ காலம் அவர் உயிரோடிருந்ததாகவும், அவருக்கு மொத்தம் வயது 950 என்றும் பைபிளில் பழைய ஏற்பாட்டிலிருந்து தெரியவருகிறது. ஆனல், ஹஜ்றத் நூஹ் (அலை) அவர்களுக்குப் பிரளய காலத்தில் 950 வயது இருந்ததாக திரு குர்ஆன் ஸூறத்து அன்கபூத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, பிரளயம் உண்டான

போது அவருக்கு என்ன வயது இருந்தது என்பதில் பைபிளில் சொல்லப்பட்டதற்கு மாறாக திரு குர்ஆன் கூறுகிறது.

சமாதானம்

திரு குர்ஆனில் ஸூறத்து அன்கபூத்தில் "நிச்சயமாக நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பி வைத்தோம். அவர் அவர்களிடம் ஐம்பது குறைய ஆயிரம் (அதாவது 950) வருஷம் இருந்தார்" என்பதாகக்கூறி இருக்கிறது. பிரளயம் உண்டானபோது ஹஜ்றத் நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு எத்தனை வயது இருந்தது என்பதைத் திரு குர்ஆன் குறிப்பிடவில்லை. அவ்வாறு குறிப்பிட வேண்டிய அவசியமுமில்லை. "அந்த ஜனங்கள் அநியாயஸ்தர்களாக இருக்கும்போது அவர்களுக்குப் பிரளயம் உண்டாயிற்று" என்பதாக மாத்திரம் தான் திரு குர்ஆன் கூறி இருக்கிறது. ஆகவே, பைபிளில் சொல்லப்பட்ட விஷயத்துக்கும் திரு குர்ஆனில் சொல்லப்பட்ட விஷயத்திற்கும் வித்தியாசமில்லை. ஆனால், வயதைக்குறிப்பிட வேண்டிய அவசியமோ அல்லது அவ்வாறு குறிப்பிடுவதால் ஜனங்களுக்குப் பிரயோஜனமோ இல்லை. ஆதலின், அவ்விஷயம் திரு குர்ஆனில் குறிப்பிடப் படவில்லை.

ஆக்ஷேபனை 3.

ஹஜ்றத் நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களின் மக்களனைவரும் மரக்கலத்திலேறிக் கொண்டு பிரளயத்தினால் ஏற்படும் கஷ்டங்களை விட்டுத் தப்பிக் கொண்டார்கள் என்ற விபரம் பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், திரு குர்ஆனில் ஸூறத்து ஹூதின் ஆரம்பத்தில் நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர்களில் ஒருவர் மரக்கலத்தில் ஏறிக்கொள்ள மறுத்துப் பிரளயத்தில் மூழ்கி இறந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் பைபிளில் கூறி இருப்பதற்கு மாறானதல்லவா?

சமாதானம்

நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களை விசுவாசங் கொள்ள மறுத்து,ஜலத்தில் மூழ்கி மடிந்த அவரது பிள்ளை ஹஜ்றத் நூஹு நபியவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல என்று இறைவன் கூறி விட்டதால் அவர் ஹஜ்றத் நூஹு நபியவர்களுக்கு ஸ்தூல புதல்வராகப் பிறந்தாலும் அந்தரங்கத்தில் அவர் ஆத்மார்த்த புதல்வராக இருக்கும் பாக்கியத்தை விட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார். ஆதலால், பைபிளில் கூறப்பட்ட விஷயத்துக்கு திரு குர்ஆனில் சொல்லப்பட்ட விஷயம் மாறானதாக இல்லை.

ஆக்ஷேபனை 4.

ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை பிர் ஔனுடைய புதல்வி புத்திரனாக ஆக்கி வளர்த்தாள் என்பதாக பைபிள் பழைய ஏற்பாடு, யாத்திராகமம், அதிகாரம் இரண்டில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், திரு குர்ஆனிலுள்ள ஸூறத்துல் கஸஸில் பிர்ஔனுடைய மனைவி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களைப் புத்திரனாக ஆக்கி வளர்த்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலும் திரு குர்ஆனுக்கும், பைபிளுக்கும் வித்தியாசமேற்பட்டிருக்கிறது.

சமாதானம்

ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களைப் புத்திரனாக வளர்க்கலாம் என்று பிர்ஔனுடைய மனைவி ஆலோசனை கூறியதாகத் தான் திரு குர்ஆனில் சொல்லப் பட்டிருக்கிறதேயன்றி, பிர்ஔனுடைய மனைவி அவரைப் புத்திரனாக ஆக்கிக் கொண்டதாகச் சொல்லப்படவில்லை. தவிரவும், பிர்ஔனுடைய குமாரத்தி ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களைப் புத்திரனாக வளர்த்தால், பிர்ஔனுவுடைய மனைவி அவரைப் புத்திரன் என்று அழைப்பது குற்றமாகுமா? என்பதைக் கிறிஸ்துவ சகோதரர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். உலகத்

தில் தங்களது மக்கள் பெற்ற பிள்ளைகளைத் தங்களது பிள்ளைகள் என்று கூறுவது சர்வ சாதாரணமான விஷயமாக இருந்து வருகிறது. ஆகவே, பைபிளுக்கு முரணாகத் திரு குர்ஆன் கூறவில்லையென்பது தெளிவு.

ஆக்ஷேபனை 5.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தம்முடைய தகப்பனாரின் விக்கிரகத்தை உடைத்து விட்டார் என்றும், அவருடைய சமூகத்தார் அவரை நெருப்பில் போட்டார்கள் என்றும், அல்லாஹுதஆலா அந்த நெருப்பைக் குளிரச் செய்து விட்டான் என்றும் திரு குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கதை பைபிளில் கூறப்படவில்லை. இக்கதை புத்திக்கு எட்டாத விஷயமாக இருக்கிறது.

சமாதானம்.

பரிசுத்த வேதாகமம் என்று சொல்லப்படுகிற பைபிளில் திரித்தலுக்கும் புரட்டலுக்கும் வயப்படாத பிரதி இல்லை. இரண்டாவதாக ஒருவருடைய சரித்திரத்தில் ஒன்றும் தவறாமல் சகல விஷயங்களையும் பைபிள் கூறி இருப்பதாக பொறுப்பேற்றுக் கொண்டுமில்லை. ஒரே மனிதரைப் பற்றிய செய்திகள் பைபிளில் கூட்டியும் குறைத்தும் சொல்லப்பட்டிருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். மஜூஸிகள் நக்ஷத்திரத்தைக் கண்டு ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வந்ததாக பைபிள், புதிய ஏற்பாடு, மத்தேயு, அதிகாரம் 2 ல் கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் புதிய ஏற்பாட்டிலுள்ள வேறு சுவிசேஷங்களில் கூறப்படவில்லை. இதுபோல் அநேகம் விஷயங்களை நாம் பைபிளிலிருந்து எடுத்துக் காண்பிக்கக் கூடும். இம்மாதிரியாக ஒரு விஷயம் சுவிசேஷங்களில் ஒன்றிரண்டில் மட்டும் கூறப்பட்டு மற்றவைகளில் கூறப்படாமல் இருந்தால் அப்படிப்பட்ட செய்திகள் அனைத்தையும் தவறான செய்திகள் என்று கூறிவிட முடியுமா?

நிற்க, தற்போதுள்ள பரிசுத்த வேதாகமங்கள் என்று சொல்லப்படுகிற பைபிள் பிறரால் திருத்தப்படாமலும் மாற்றப்படாமலும் சரியாகவே இருக்கிறது என்று திரு குர்ஆன் எந்த இடத்திலும் கூறவில்லை. ஆகலின், பரிசுத்த வேதாகமம் எனப்படும் பைபிளில் கூறப்படாத செய்திகளெல்லாம் தவறானவைகள் என்று முடிவு கட்டி விட முடியுமா?

அத்தியாயம் 4.

திரு குர்ஆனும், புத்திக்குப் பொருந்தாத விஷயங்களும்

திரு குர்ஆனில் கூறப்பட்ட சில விஷயங்கள் புத்திக்குப் பொருந்தாத விஷயங்களாக இருக்கின்றன என்று கூறுவதைக் கவனிப்போம். இயற்கைச் சட்டத்துக்கு மாறாகத் தோன்றும் சம்பவங்கள் திருகுர்ஆனில் கூறப்பட்ட சம்பவங்களைப் பார்க்கினும் பைபிளில் மிக மிகப் பெரிய விஷயங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஒரு யுத்தத்தின் போழ்து சனிக்கிழமையன்று சூரியன் அஸ்தமிக்காமல் நின்றது, இஸ்ரவேலரில் உதித்த நபிமார்கள் செய்து காட்டிய அற்புதங்கள், ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்கள் பிசாசுகளை ஓட்டியது, அவைகள் பன்றியின் ரூபமாகிக் கடலில் பாய்ந்து மாண்ட விபரம், (மத்தேயு-அதிகாரம் 8.) ஈஸா நபியவர்களும் அவருடைய ஹவாரீயீன்களான சிஷ்யர்களும் மரித்தவரை உயிர்ப்பித்தது, ஈஸா நபியவர்களை யூதர்கள் (பைபிளின் கூற்றுப்படி) சிலுவையில் அறையும்போது தேவாலயத்தின் திரைகள் மேல் தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியெங்கும் அந்தகாரம் உண்டானது, பூமி அதிர்ந்தது, கல்மலைகள் பிளந்தது, கல்லறைகள் திறந்தது. உயிர்த்தெழுந்து பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டது, (மத்தே—27 அதி

காரம் பார்க்க.) ஆறும் மணியிலிருந்து ஒன்பதாம் மணி நேரம் வரை பூமியெங்கும் அந்தகாரமுண்டானது, சூரியன் இருளடைந்தது, (லுக்கா-அ. 23வ 44-48) முதலிய சம்பவங்கள் பைபிளில் கூறப்பட்டிருக்கின்றன. இவையுக்தி சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களுக்கு மாறாக இல்லையா?

வேதக்காரர்களுக்கு திருகுர்ஆனின் மீதுள்ள பகைமையின் காரணமாக அவர்கள் ஒன்றையும் கவனியாமல் திருக் குர்ஆன் மீதுஆட்சேபனை செய்யத் தொடங்கி விடுகிறார்கள். இவர்கள் செய்யும் ஆட்சேபனை திரு குர்ஆனைத் தகர்க்கிறதோ இல்லை யோ அவர்களுடைய வேதமாகிய பைபிளையே இது முதலில் தகர்த்தெரிந்து விடுகிறதென்பதை இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

நிற்க, புத்திக்குப் பிடிக்காத விஷயமென்று திரு குர் ஆனிலிருந்து எடுத்துக் கூறப்படும் சரித்திர நிகழ்ச்சிகளுக்கு திரு குர்ஆன் ஜவாப்தாரி யன்று, அவைகளை எடுத்துக் கூறும் முறையே பொறுப்பாகும். இனி திரு குர்ஆனில் கூறப்பட்ட சில விஷயங்களைக் கவனிப்போம்.

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை நெருப்பில் போட்டது

ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களை நம்றாத் அரசன் நெருப்பில் போட்டதாகவும், அதில் அவர் கரிந்து போகாமல் க்ஷேமமாக வெளி வந்ததாகவும் திரு குர்ஆனில் சொல்லப்பட்டுளது. இது இயற்கைச் சட்டத்துக்கு விரோதமானது.

ஹஜ்றத் இப்ராஹீம் நபியவர்கள் நெருப்பில் கரிந்து போகாமல் க்ஷேமமாக இருந்தது. இயற்கைச் சட்டத்துக்கு விரோதமான சம்பவமன்று. சில இடங்களில் வீடு முழுதும் நெருப்புப் பற்றி எரிந்து விடுகிறது, அங்குள்ள சாமான்

களும், மனிதர்களும் கரிந்து போகிறார்கள். ஆனால், அவர்களில் சிலர் மாத்திரம் கரிந்து போகாமல் க்ஷேமமாக உயிருடன் வெளி வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் இக்காரண உலகில் பல முறையும் நிகழ்ந்திருப்பதை நாம் தெரிந்து கொண்டே ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் விஷயத்தில் ஆக்ஷேபனைக்கு வருவது தகாத காரியமாக இருக்கிறது.

மலைகளும் பறவைகளும் தஸ்பீஹு செய்த விபரம்

மலைகளும், பறவைகளும் ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களுடன் சேர்ந்து தஸ்பீஹு செய்தன என்று திருகுர்ஆனில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுவும் புத்திக்குப் பொருந்தாத விஷயமாகும்.

ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களுடன் மலைகளும், பறவைகளும் தஸ்பீஹு செய்து நாயனைத் துதித்தன என்பது இவ்வுலகில் நடைபெறாத காரியமன்று. கிணற்றின் மேலிருந்து கொண்டு கிணற்றின் உள் பக்கத்தை நோக்கி நாம் பலமாகச் சப்தம் கொடுத்தால் கிணற்றுக் குள்ளிருந்து நாம் கூறியது போன்ற சப்தம் உண்டாகிறது. இப்படிப்பட்ட சப்தத்துக்கு எதிரொலி என்று பெயர். ஆகவே, இப்படிப்பட்ட சமயத்தில் அந்த மனிதனுடன் கிணறும் சப்தமிடுகிறது என்று ஒருவர் கூறுவாராயின் அது ஆட்சேபிக்கத் தக்கதாக மாட்டாது. அவ்வாறு கூறுவதும் தவறான விஷயமன்று. சங்கீதத்தில் பறவை, மிருகம் ஆகியவைகளுக்கும் இன்பம் ஏற்படுகிறது. பிரயாணம் செய்யும் அறபி ஒட்டகக் கூட்டத்தார் இராக் காலங்களில் பாட்டுப் பாடுவார்களாயின், ஒட்டகங்கள் இந்த இராகங்களால் போதையடைந்து வேகமாக நடக்கின்றன. எனவே, ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களின் பாடல்களைக் கேட்டுப் பறவைகள் தங்கள் சுய உணர்வை இழந்து அவைகள் குதிக்குமாயின் அது புத்திக்குப் பொருந்தாத விஷயமாகுமா?

இப்படிப் பறவைகள் ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலா மவர்க ளின் பாடல்களைக் கேட்டு மதிமயங்கித் துள்ளிக் குதித்ததை அவைகள் தஸ்பீஹ செய்தன என்று கூறி இருக்கக்கூடும் என்று சுலபமாகப் பதில் கூறி விடலாம். ஆயினும், ஆத் மார்த்த இரகசியங்களை உணர்ந்தவர்களுக்கும், தாது வர்க்கம் ஜீவ வர்க்கங்களின் அறிவையும் உணர்வையும் தெரிந்து கொண்டிருப்பவர் களுக்கும் மலைகளும் பறவைகளும் தஸ்பீஹூ செய்கின்றன என்ற விஷயம் புத்திக்குப் பொருத்த மற்றதாகத் தோன்று.

சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களின் சக்திகள்

ஹஜ்றத் சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு ஜின் கள் கீழ்ப்படிந்து கொண்டிருந்தன, அவர் எறும்புகளின் பேச்சு களைத் தெரிந்து கொண்டார், ஸுலைமான் நபி யவர்கள் உயிருட னிருப்பதாக மதித்து ஜின்கள் ஏமாற்ற மடைந்திருந்தன, ஹூத் ஹூத் என்ற பக்ஷி அரசி பல்கீஸைப் பற்றிய தகவலை சுலைமான் நபி யவர்களுக்கு அறிவித்தது, சுலைமான் நபி யவர் களின் தர்பாரிலுள்ள ஒருவர் கண் இமையை மூடி முழிக்கு முன் பல்கீஸ் என்ற அரசியை ஆசனத்துடன் எடுத்து வந் தார், சுலைமான் நபி உலகம் அனைத்துக்கும் அரசராக இருந்தார், காற்று அவருக்குக் கீழ்ப்படிந் திருந் தது. காலையிலிருந்து உச்சிப் பொழுதுக் குள்ளாகவும் அடித் திரும்பியதிலிருந்து மாலைப் பொழுதுக்குள்ளாகவும் ஒரு மாதத் தொலையை அவர் ஆசனத்திலமர்ந்தபடியே பிரயா ணஞ் செய்துகொண்டிருந்தார். கட்டிடம் கட்டும் வேலைகளில் ஹஜ்றத் சுலைமான் நபியவர்கள் ஜின்களை ஈடுபடுத்தி இருந் தார், அந்த ஜின்கள் பெரிய பெரிய வேலைகளைச் செய்தார்கள் என்று திரு குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. இவைகளெல் லாம் புத்திக்குப் பிடிக்காத காரியங்களாகும்.

ஹஜ்றத் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் உலகம் முழுவதற்கும் அரசராக இருந்தார் என்று திருகுர்ஆனில்

எந்த இடத்திலும் கூறப்படவில்லை. பக்ஷிகளும் மிருகங்களும் பேசுவதை உணர்ந்து கொள்வதானது பாமர மக்களுக்கு முடியாத காரியமாக இருந்தாலும், ஆத்மார்த்த உன்னதங்களை அடைவதற்காக உழைத்து அவைகளை அடையும் பாக்கியம் பெற்ற பெரியார்களின் ஆத்மாக்களில் இறைவன் ஒருவிதமான சக்தியை அளித்து விடுகிறான். ஆதலால், அவர்கள் பிராணிகளின் பேச்சுக்களை உணர்ந்து கொள்வது முடியாத காரியமன்று. ஜீவ வர்க்கங்களின் பேச்சுக்கள் என்ன? காதுவர்க்கங்களின் பேச்சுக்களையும் கூட அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். ஆனால், அவைகளின் பேச்சுகள் நம்முடைய பேச்சுக்களைப் போலில்லை. ஹூத்ஹூத் என்பதைக் கொண்டு குறிப்பிட்ட ஒரு பக்ஷியைப் பொருளாகக் கொண்டாலும் இது புத்திக்கு ஒவ்வாத காரியமன்று. புறாக்களிடம் காகிதங்களைக் கொடுத்தனுப்பும் வழக்கம் முற்காலத்தில் இருந்திருக்கின்றது. இதுபோல் ஹூத்ஹூத் என்ற பக்ஷி மினிடத்தில் ஹஜ்றத் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் கடிதம் கொடுத்தனுப்பியிருக்கலாம். ஜின் என்ற வர்க்கம் இருப்பதாகக் கிறிஸ்தவர்களின் வேதத்திலேயே அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, ஜின் வர்க்கம் உண்டா இல்லையா என்பதைப் பற்றி நாம் இங்கு எழுத வேண்டியதில்லை. ஆதலால், ஜின்களை மானேஜர்களாக ஏற்படுத்தி வேலை செய்விப்பதானது புத்திக்குப் புறம்பான விஷயமன்று. முற்காலத்தில் புகைக் கூண்டுகளின் உதவியால் ஜனங்கள் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். இக் காலத்தில் ஆகாய விமானத்தின் மூலம் ஆகாயத்தில் உலகமனைத்தையும் சுற்றி வருகிறார்கள். இவைகளின் உதவியால் பல மாதங்கள் வரை நடந்து செல்லக்கூடிய தொலை தூரத்தைச் சில மணி நேரங்களில் கடந்து விடுகிறார்கள். ஹஜ்றத் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபியாக இருந்ததால் தங்களுக்குள்ள அற்புத சக்தியினால் ஆகாயத்தில் சென்று மாதக்கணக்கான பாதையை நாள் கணக்காகக் கடந்தார்கள் என்று ஒப்புக் கொள்ள இஷ்டமில்லாவிடினும், இப்படிப்பட்ட கருவிகளின் உதவியால் ஹஜ்றத் சுலைமான்

அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆகாயத்தில் ஆசனத்துடன் சென்றார்கள் என்று ஒப்புக் கொள்ளவும் முடியாதா? அக்காலத்தில் இப்படிப்பட்ட கருவிகளைக் கண்டு பிடித்திருக்கக் கூடாதா? ஆதலால், மாதக் கணக்கான பாதையை ஹஸ்ரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் சில மணி நேரத்தில் கடந்தார்கள் என்பது இந்தக் காலத்தில் புதுமையான காரியமன்று.

இக்காலத்தில் நவ நவமானவைகளெல்லாம் புதிதாகக் கண்டு பிடிக்கப் படுகின்றன. டெலிபோன், போட்டோகிராப் முதலியவைகள் முற்காலத்தில் புத்திக்கு எட்டாதனவாகக் கருதப்பட்டன. இக்காலத்தில் அவைகள் சர்வ சாதாரணமாகி விட்டன. நமது புத்திக்கு எட்டாமல் இயற்கைக்கு விரோதமென்று நம்மவரால் கருதப்படுகின்ற எத்தனையோ காரியங்கள் இன்னும் கண்டு பிடிக்கப் படாமல் இருந்து வருகின்றன என்பதை இந்த டெலிபோன், போடோகிராப் முதலியவைகளே நமக்கு சாக்ஷியம் பகர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தக் கருவிகள் முற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டு இடைக் காலத்தில் அவைகள் மறைந்து இருக்கலாம். அக்காலத்தில் இவைகளைக் கண்டு பிடிக்கவே இல்லை என்பதற்கு நம்மிடத்தில் ஆதாரம் ஒன்றுமில்லை. மனிதருக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட புளியங் கொட்டை யத்தனை மூளையிலேயே இயற்கைச் சட்டங்கள் அனைத்தும் அடங்கி விட்டன என்றும், அவைகளில் புலப்படாதவைகள் இயற்கைக்கு மாறானவை என்றும் முடிவுகட்டிக்கூறி விடுவது முட்டாள் தனமாகும். இறைவனின் இயற்கைச் சட்டங்கள் இத்தனைதானென்றும் அவனது தத்துவம் இவ்வளவுதானென்றும் தீர்க்கமாக வரையறுத்துக் கூறுவதற்குத் தகுந்தவாறு மக்களுக்கு அறிவு ஏற்பட்டு விடவில்லை. இயற்கைச் சட்டம் என்று கூறத் தகுந்தவாறு இதுவரை மனிதனால் ஒரு சட்டத்தை வரையறுத்துக் கூறவும் முடியவில்லை. மனிதனும் வரையறுக்கப்பட்டவனாக இருக்கிறான். அவனுடைய தத்துவமும் வரையறுக்கப் பட்டிருக்கிறது. அவனுடைய ஜீவியமும்

வரையறுக்கப் பட்டதாக இருக்கிறது. அவனுடைய அனுபவமும் வரையறுக்கப் பட்டிருக்கிறது. இவ்வித நிலைமையில் எல்லைக் குட்பட்ட வஸ்துக்களைச்சேர்ந்த மனிதன் எல்லைக்குப் புறம்பான வஸ்துக்களைப் பற்றி எங்ஙனம் சட்டம் செய்ய முடியும்? ஆகவே, மனிதன் தனது புத்திக்கு எட்டாத ஒன்றை இயற்கைக்கு விரோதமென்று கூறுவது அவசரப்பட்டுக் கூறுவதாக இருக்கிறது.

மகா அலக்ஜாண்டர், யாஜூஜ் மாஜூஜ்

"மகா அலக்ஜாண்டர் என்பவர் பூமியின் கிழக்குத் திக்கிலிருந்து மேற்குத் திக்கில் சூரியன் கருப்பு ஊற்றில் அல்லது சேற்றில் அஸ்தமிக்குமிடம்வரைச் சென்றார். மகா அலக்ஜாண்டர் பிரம்மாண்டமான சுவர்எழுப்பி இறுதித்தீர்ப்பு நாள் வரை யாஜூஜ் மாஜூஜ்க் கூட்டத்தார் அவ்வழியே வர முடியாதபடி அவர்களுடைய வழியை அடைத்துவிட்டார்" என்று திரு குர்ஆனில் கூறப் பட்டிருக்கிறது. இவ்விஷயங்கள் புத்திக்குப் புறம்பான விஷயங்களாகும். ஏனென்றால், சூரியன் எந்த ஊற்றிலும் சேற்றிலும் அஸ்தமிப்பதில்லை. அது ஆகாயத்திலிருக்கிறது. யாஜூஜ் மாஜூஜ்க் கூட்டத்தார் எவரும் இப்பொழு திருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் அவர்களிற் சிலர் 50 முழ உயரமாக இருப்பதாகவும், வேறு சிலர் ஒரு சாண் உயரத்தி லிருப்பதாகவும், யானையின் காதுகளைப் போல் அவர்களுக்கு மிகவும் அகண்ட பெரிய காதுகள் இருப்பதாகவும், அவர்கள் ஒரு காதை தங்கள் திரேகத்தில் போர்த்திக் கொண்டு, இன்னொரு காதைப் படுக்கையாக விரித்துக் கொண்டு தூங்குகிறார்கள் என்றும் சொல்லப் படுகிறது. பிரம்மாண்டமான அந்தச் சுவர் இப்பொழுது மிருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால், இவை புத்திக்கு எட்டாத விஷயங்களாகும்.

திரு குர்ஆனில் மகாஅலக்ஜாண்டர் என்ற பெயர் சொல்லப்படவில்லை, துல்கர்னைன் எனபவரைப்பற்றி மட்டிலும் விவ

சிக்கப்பட்டிருக்கிறது. இவரைப்பற்றிய விபரத்தை அறிவிப்பது மிகவும் கஷ்டம் என்று வேதக்காரர்கள் நினைத்து நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பரிக்ஷிக்கும் முறையில் துல்கர்னைன் என்பவரைப் பற்றி கேள்வி கேட்டார்கள். அதற்கு, இறைவன் திரு குர்ஆனில் பதிலளித்திருக்கிறான். அதாவது அவர் ஒரு அரசர். அவருக்கு நாம் சகலவிதமான பாக்கியங்களையும் அளித்திருந்தோம். அவர் கிழக்கிலும், மேற்கிலும் சமுத்திரக் கரை வரை பிரயாணம் சென்றார். அங்கு அவருக்கு சூரியன் மூழ்குவது போல் தோன்றிற்று. அங்குள்ள ஜனங்களுக்கு அவர் நேர் வழி காட்டினார். பின்னர், அவர் மூன்றும் முறையாக ஒரு பிரயாணம் சென்றார். இந்தப் பிரயாணத்தில் அவர் ஒரு ஜாதியாரிடம் சென்றார். அந்த ஜாதியார் யாஜூஜ் மாஜூஜ் க் கூட்டத்தாரின் தொல்லையைப்பற்றி அவரிடம் புகார் கூறி, இவர்களைத் தடுப்பதற்காகச் சுவர் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதன்பேரில் அவர் இரும்புத்துண்டுகளினால் சுவர் எழுப்பினார். இதன் மீது தாம்பிரத்தை உருக்கி ஊற்றினார். அந்தச் சுவர் உயரமாக இருப்பதால் அவர்கள் அதில் ஏறவும் முடியாது. அது உறுதியாக இருப்பதால் அதில் அவர்கள் துவாரமிடவும் முடியாது. ஆதலால், ஜனங்களுக்குத் தொந்தரை கொடுத்து கொண்டிருந்த அந்தக் கூட்டத்தார் மறுபடியும் வர முடியவில்லை. இனி ஒரு காலத்தில் அந்த ஜனங்கள் திறந்து விடப்பட்டு அவ்வுயரங்களின் மீதேறி வருவார்கள் என்ற விஷயம் மாத்திரம் தான் திரு குர்ஆனில் சொல்லப் பட்டிருக்கிறது.

அவர் தான் மகா அலக்ஜாண்டர், அவர் எந்த தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார்? யாஜூஜ் மாஜூஜ் என்ற சமூகத்தார் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள்? அக் கூட்டத்தார் இப்பொழுது மிருக்கிறார்களா? அவர்களிருந்தால் அவர்கள் எவ்வித நிலைமையி லிருக்கிறார்கள்? இந்தக் காலத்தில் அவர்களுக்கு என்ன பெயர் சொல்லப்படுகிறது? அந்தச் சுவர் எந்த தேசத்தில் கட்டப் பட்டிருக்கிறது? அந்தச்சுவர் இன்

னமும் இருக்கிறதா? யாஜூஜ் மாஜூஜ் என்ற மேற் கண்டகூட்டத்தார் இனி எந்தக் காலத்தில் வெளிப்படுவார்கள்? அவர்கள் வெளிப்பட்டு என்ன செய்வார்கள்? துல்கர்னைன் என்பவர் எந்த தேசத்து அரசர்? என்ற விபரங்கள் திரு குர் ஆனில் சொல்லப்பட்டில்லை. மேலும், இந்த விபரங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வினைக் கடாவிய வேதக்காரர்களின் கேள்வியில் குறிப்பிடப்படாத விஷயங்க ளாகும். ஆதலால், அவைகளைத் திரு குர்ஆனில் குறிப்பிட வேண்டும் என்ற அவசியம் ஏற்படவில்லை.

இனி உலமாக்கள் துல்கர்னைன் சம்பந்தமான தகவல்களைத் தங்களது வியாக்கியான உரைகளில் சேர்த்திருக்கிறார்கள். இந்தத் தகவல்களில் அவர்கள் திரு குர்ஆனிலுள்ள சமிக்ஞைகளையும், சரித்திரக்காரர்கள் கூறும் விவரங்களையும், சில ஹதீதே ஆஹாதுகளையும் ஆதாரமாகக் கொண்டு தங்கள் அபிப்பிராயங்களைக் கூறி யிருக்கிறார்கள். இவர்கள் கூறிய அபிப்பிராயம் எவ்விதமாக இருந்தா லும், திரு குர்ஆனின் மீது இவ்வாக்ஷேபனைகள் ஏற்படுவ தற்கு இடமே இல்லை என்பது உறுதி. உலமாக்களுடைய அபிப்பிராயங்களைத் திரு குர்ஆனின் அபிப்பிராயம் என மதித்து ஆக்ஷேபனை செய்வது தவறாகும். இது ஒரு பக்கல் கிடக்க, இவ்வாட்சேபனையும் பதில் சொல்ல முடியாத சரி யான ஆக்ஷேபனை என்று கூறுவதற்குமில்லை. ஏனெனில், இப்பொழுதும் இப்புவியில் அநேகம் பிரம்மாண்டமான சுவர் கள் உலக விசித்திரங்களாகத் திகழ்ந்து வருகின்றன. சீனா தேசத்து எல்லைப் புறத்திலுள்ள நீண்ட சுவர்கள், ஜபலே தைபின் சிகரத்தில் கட்டப் பட்டிருக்கும் தலைவாயல், ஆதர்பீ ஜானிலுள்ள மலைகளில் இருக்கும் தலைவாயல்கள் ஆகியவை கள் இன்றும் உலக விநோதங்களாகத் திகழுகின்றன. இந்தச் சுவறுகளைக் கட்டியவர்கள் எவரேனும் அந்நிய சமூகத்தார் தங்கள் நாட்டில் சுலபமாக வந்து பிரவேசித்துத் தொந்தரை செய்வதைத் தடுப்பதற்காகவே இவைகளைக் கட்டியிருக்க

வேண்டும். இவ்வாறு தடுக்கப்பட்ட ஜனங்களில் யாஜூஜ் மாஜூஜ் என்ற கூட்டத்தாரும் ஒருவராக இருக்கலாம்.

ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் மடிப் பிள்ளையாக இருக்கும் போது பேசியது

ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் குழந்தையாயிருந்த காலத்தில், தமது தாயின் மடியில் இருந்து கொண்டு, ஜனங்களிடம் சம்பாஷித்தார்கள் என்றும், களி மண்ணினால் பறவைகளின் உருவங்களைச் செய்து அவைகளின் மீது அவர் ஊதினால், அவைகள் பறவைகளாகிப் பறந்து கொண்டிருந்தன என்றும் திரு குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. இவை புத்திக்கு எட்டாத விஷயங்களாகும்.

ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களைப் பற்றிய நூற்றுக்கணக்கான இதர சமாச்சாரங்களை இன்றுவரை உலகத்திலுள்ள பல கோடிக் கணக்கான கிறிஸ்துவர்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். அவைகளில் அநேகம் விஷயங்கள் புத்திக்கு எட்டாதன போலவே தோன்றுகின்றன. கிறிஸ்துவ சகோதரர்களுக்கு இவைகளெல்லாம் மெய்யென்று நம்ப இடமிருக்கும்போது, தாயின் மடிப் பிள்ளையா யிருக்கும்போது ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் பேசியதும், பறவையைப் போல் உருவம் செய்து அவைகளில் அவர் ஊதியவுடன் அவை பறப்பனவாக ஆகி விட்டதும் அவர்களுக்கு ஆட்சேபிக்கத் தக்க விஷயங்களாகத் தோன்றி விட்டதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்விஷயங்கள் பைபிள் புதிய ஏற்பாட்டின் நான்கு சுவிசேஷங்களில் எதிலும் கூறப்படாதது தான் கிறிஸ்துவ சகோதரருக்கு இவ்விஷயங்களின்மீது நம்பிக்கை ஏற்படாமலிருப்பதற்குக் காரணமாக இருக்கக் கூடும். ஆகவே, பைபிள் புதிய ஏற்பாட்டில் இவைகள் ஏன் கூறப்படவில்லை என்ற காரணத்தைக் கிறிஸ்துவர்கள் தான் சொல்ல வேண்டும். ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் சிஷ்யரும் நான்கு சுவிசேஷங்களில் ஒன்றை எழுதியவருமான யோவான்

என்பவர் தமது சுவிசேஷத்தின் இறுதியில் "இயேசு செய்த வேறு அநேக காரியங்களு முண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். (யோவான் அதிகாரம் 21,வசனம் 25.)" என்று எழுதி இருக்கிறார். ஆகவே, இவரால் எழுதப்படாமல் விடப் பட்டுப் போன செய்திகள் அனந்தமுண்டு என்று பைபிளி லிருந்தே தெரிய வருகிறது. இவ்வாறு விடப்பட்டுப்போன செய்திகளில் இரண்டொன்றைத் திரு குர்ஆன் கூறி இருக்கிறது. எனவே, திரு குர்ஆன் அவைகளைக் கூறியதற்காக அதன்மீது குற்றஞ் சொல்ல முடியாது. அல்லாமலும், கிறிஸ்துவ சகோதரர்களிடம் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் குழந்தைப் பருவத்தைப் பற்றிய இஞ்சில் ஒன்றிருக்கிறது. அந்த இஞ்சிலில் திரு குர்ஆனில் சொல்லப்பட்ட மேற்கண்ட விபரம் சொல்லப் பட்டிருக்கிறது.

அஸ்ஹாபுல் கஹ்பு

அஸ்ஹாபுல் கஹ்பைப்பற்றி திரு குர்ஆனில் சொல்லப்படும் கதைக்கு ஆதாரமில்லை. அறபி நபியானவர் யூதர்கள், கிறிஸ்துவர்கள், மஜூஸியர்கள் ஆகிய ஜனங்களில் பாமரர்களாக வுள்ளவர்களிடம் இக் கதையைக் கேள்விப் பட்டுத் தமது சார்பாக அறபியில் எழுதி வைத்து விட்டார். தவிரவும் அது, தமது கூட்டத்தாரைப்பற்றி அறபிப் பாமர மக்களிடம் பரவி இருந்த கதைகளையும் அவர் கேள்விப் பட்டு அவைகளையும் அறபியில் கோர்வை செய்து கொண்டு அல்லாஹுத ஆலாவிடமிருந்து தமக்கு வஹியின் மூலம் அறிவிக்கப் பட்டதாகக் கூறி இருக்கிறார்.

அஸ்ஹாபுல் கஹ்பு என்பவர்களைப் பற்றிய சம்பவம் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்குப் பின் பல நூற்றாண்டுகள் கழிந்தப் பின்னர் நிகழ்ந்த சம்பவம். ஆதலால், இது தௌராத், ஸபூர், இஞ்சில் ஆகிய வேதங்களில் சொல்

லப் படுவதற்கில்லை. ஆனால், அக்காலத்துக்குப் பின்னர் உள்ளவர்கள் இந்தச் சம்பவத்தைத் தங்கள் நூல்களில் கூறி இருக்கிறார்கள். லார்ட் வில்லியம் மேயர் என்பவர் "கிறிஸ்துவக் கோவில்களின் சரித்திரம்" என்றொரு நூலெழுதியுள்ளார். அப்புத்தகத்தில் இச்சம்பவத்தைப் பிரஸ்தாபித்து இது உண்மையான சம்பவம் என்று உறுதிப்படுத்தி இருக்கிறார். கிளாடிஸ் என்ற கைஸருடைய காலத்தில் அப்ஸஸ் என்ற பட்டணத்திலுள்ள சில கிறிஸ்துவர்கள் அந்த ஊரிலுள்ள ஒரு குகையில் ஒளிந்து கொண்டார்கள் என்றும், முன்னூறு வருஷ காலம் வரை அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள் என்றும், அதற்கப்பால் அவர்கள் நித்திரை தெளிந்து எழுந்தார்கள் என்றும், பின்னர், அக்காலத்திலிருந்த சக்கிரவர்த்தியான கைஸரின் சமூகத்தில் ஆஜரானார்களென்றும், பின்னர் அக்குகைக்குள் சென்று விட்டார்கள் என்றும் மேற்கண்ட புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கிளாடிஸ் என்பவரை அரபிப் பாஷையில் திக்யானூஸ் என்று கூறுகிறார்கள். எனவே, இக்கதைக்குச் சரித்திர சம்பந்தமான வேறு ஆதாரமில்லை என்று கூறுவது தகாது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இக்கதைகளை யூத, கிறிஸ்துவ, மஜூஸிய அறபியர்களிலுள்ள பாமர ஜனங்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்களா? அல்லவா? என்ற விபரம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜீவிய சரித்திரத்தைப் படித்தவர்களுக்கு நன்கு தெரியும்.

பனீ இஸ்ராயீல்கள் எகிப்து தேசத்தை ஆட்சி புரிந்தனரா ?

பிர்அவ்னைச் சேர்ந்தவர்கள் ஜலத்தில் மூழ்கி அழிந்ததற்குப் பின்னர், அவர்களின் தோப்புகளுக்கும், தூரவுகளுக்கும், வீடுகளுக்கும் பனீ இஸ்ராயீல்கள் எஜமானர்களாக ஆக்கப்பட்டனர் என்று திரு குர்ஆனில் கூறப் பட்டிருக்கிறது. ஆனால், பனீ இஸ்ராயீல்கள் செங்கடலைக் கடந்த பின்

னர், ஒரு நாளேனும் எகிப்து தேசத்துக்குத் திரும்பிச் செல்லவே இல்லை. இவ்வித நிலைமையில் பனீ இஸ்ராயீல்கள் பிர்ஔனைச் சேர்ந்தவர்களின் தோட்டங்களுக்கும் வீடுகளுக்கும் எஜமானர்களாக ஆகுவ தெங்ஙனம்? அவர்கள் உண்மையில் எஜமானர்களாக இருந் திருப்பார்களாயின், எகிப்து தேசத்தில் அவர்களுக்கு அரசாங்கம் ஏற்பட்டிருக்கும். ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கூறிய ஒவ்வொரு விஷயங்களையும் மீறி நடந்து கொண்டிருந்த அந்த அடங்காப் பிடாரிகளான இஸ்ரவேல் ஜனங்கள் சில காலம் வரை காட்டில் வன வாசஞ் செய்து கொண்டு, அலைந்து திரிய வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. அவர்களுக்கு எகிப்து தேசத்து அரசுரிமை இருந்திருக்குமாயின் அவர்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்க வேண்டிய நியாயமில்லை. இவர்கள் காடுகளில் 40 வருஷ காலம் அலைந்து திரிந்ததாக திரு குர்ஆனே ஒப்புக் கொண்டிருக்கிறது. "நிச்சயமாக அ(ந்தநகரமான)து அவர்களுக்கு நாற்பது வருஷகாலத்துக்கு ஹறாமாக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் பூமியில் அலைந்து திரிவார்கள்" என்று ஸூறத்து மாயிதாவில் கூறி யிருப்பது பொய்யாமோ? எனவே இதிலிருந்து திரு குர்ஆன் முன்னுக்குப் பின் முரணைக் கூறி இருக்கிறது என்று ருஜுவாகிறது.

இது திரு குர்ஆன் வசனங்களைத் தப்பாக அர்த்தஞ் செய்து கொண்டதால் ஏற்பட்ட ஆக்ஷேபனையாகும். வேறு முபஸ்ஸிர்களில் எவரேனும் இம்மாதிரி வியாக்கியானம் செய்திருப்பாராயின் அவரும் தப்பருத்தம் செய்து கொண்டே அவ்வாறு வியாக்கியானம் செய்திருப்பதாகக் கூறுவோம். திரு குர்ஆனிலுள்ள, ஸூறத்து துகானில் பிர் ஔனைச் சேர்ந்தவர்களைப்பற்றிக் கூறியிருப்பதாவது:—

"எம்மாத்திரம் சோலைகளையும்" அருவிகளையும், வேளாண்மைகளையும், சங்கையான இடத்தையும், அவர்கள் அதில் அனுபவித்துக் கொண்டிருந்த பாக்கியத்தையும் அவர்கள் விட்டு விட்டார்கள்! இவ்விதமாகத் தான் நாம் அவைகளை மற்

றைய கூட்டத்தாருக்குப் பாத்தியமாக்கி வைத்து விட்டோம்.''

மேலும், திரு குர்ஆனிலுள்ள ஸூறத்து ஷுஃராவில் கூறியிருப்பதாவது:—

''சோலைகளையும், பொக்கிஷங்களையும், அருவிகளையும் நேர்த்தியான இடங்களையும் விட்டு நாம் அவர்களை (பிர் ஔனைச் சேர்ந்தவர்களை) வெளிப்படுத்தினோம். இவ்விதமாகவே அவ்வஸ்துக்களுக்கு பனீ இஸ்ராயீல்களை எஜமானர்களாக்கினோம்.''

பிர்ஔனைச் சேர்ந்தவர்கள் விட்டுச் சென்ற அதே வஸ்துக்களுக்கு பனீ இஸ்ராயீல்கள் எஜமானர்களாயினர் என்று மேலே கூறப்பட்ட இந்த இரண்டு ஆயத்துகளிலும் கூறப்படவில்லை. இவை போன்ற வஸ்துக்களை பாலஸ்தீனத்தில் அவர்களுக்கு இறைவன் அளித்து, அவர்களை அவைகளுக்கு எஜமானர்களாக்கி விட்டான் என்று தான் இந்த இடத்தில் கருத வேண்டியதிருக்கிறது. இரண்டு மனிதர்களிடத்தில் இரண்டு வஸ்துக்கள் ஒன்றுபோலிருக்குமாயின் ''உங்களிடத்திலுள்ளது தான் என்னிடத்திலுமிருக்கிறது'' என்று கூறுவது சர்வ சாதாரணமான வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால், யதார்த்தத்தில் ஒருவரிடமுள்ள அதே வஸ்து மற்றொருவரிடமில்லை. அதைப் போன்ற வேறொரு வஸ்து தான் இருக்கிறது என்பது உலகப் பிரசித்தம். இம்மாதிரி கூறும் வழக்கம் அறபிகளிடம் மட்டுமின்றி, அறபியல்லாத எல்லா ஜாதியாரிடத்திலும் இருந்து வருகிறது. நாம் கூறிய இக்கருத்துக்கு ஆதாரவாக இறைவன் தனது திரு மறையில் ஸூறத்து கஸஸின் ஆரம்பத்தில் கூறி இருப்பதைக் கவனியுங்கள். அது வருமாறு:—

''தா ஸீம் மீம். இவைகள் தெளிவான வேதத்துடைய வசனங்கள்........இன்னும் பூமியில் பல ஹீனர்களாக்கப் பட்டிருந்தவர்களின் பேரில் நாம் கிருபை செய்யவும், அவர்களை நாம் தலைவர்களாக ஆக்கவும், அவர்களை நாம் வாரிசுக்காரர்களாக ஆக்கவும், இன்னும் பூமியில் அவர்களுக்கு இடம் பாடாக்கி வைக்கவும் விரும்புகிறோம்''

"பலஹீனர்க"ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தவர்களை அந்த பூமியின் கிழக்கு மேற்குப் பக்கங்களுக்கு வாரிசுக்காரர்களாக ஆக்கினோம். அந்த தேசத்தில் நாம் அவர் களுக்குப் பாக்கத்தைக்கொடுத்தோம்" என றும் மற்றோரிடத்தில் கூறியுள்ளான்.

எனவே, நாம் மேலே எடுத்துக் காட்டிய முதலாவது ஆயத்தில் பலஹீனர்களாக இருந்தவர்களைத் தலைவர்களாக ஆக்கியதும், அவர்களுக்குப் பூமியில் இடமளித்ததும் சொல்லப் பட்டிருக்கிறது. நாம் எடுத்துக்காட்டிய இரண்டாவது ஆயத்தில் பிர்ஔனைச் சேர்ந்தவர்களின் பூமிக்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள பிரதேசங்களை அவர்களுக்குக் கொடுக்கப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. எகிப்து தேசத்தில் அவர்களை எஜமானர்களாக ஆக்குவதாகத் திரு குர்ஆன் கூறவில்லை. ஆதலின், கிறிஸ்துவர்கள் கூறும் ஆக்ஷேபனை செல்லாது. இதுவுமன்றி, திரு குர்ஆன் ஷாம் தேசத்தைத் தான் பனீ இஸ்ராயீலுக்குக் கொடுப்பதாகக் கூறி இருக்கிறது என்று உறுதியாகக் கூறவும் ஆதாரமிருக்கிறது. திரு குர்ஆனில் ஸூறத்து இஸ்ராவில் ஷாம் தேசத்தை பாக்கத்துச் செய்திருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

இந்த ஆயத்திலும் பாக்கத்துச் செய்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ஷாம் தேசத்தைத்தான் திரு குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது என்பது தெளிவு. இமாம் இப்னு கதீர் முதலிய ஆராய்ச்சியாளர்களான முபஸ்ஸிர்கள் இவ்வாயத்துக்கு நாம் கூறிய கருத்துகளைப் போலவே பொருள் கூறி இருக்கிறார்கள். இவர்களை யல்லாமல் வேறு முபஸ்ஸிர்களில் எவரேனும் வேறு விதமாக வியாக்யானம் செய்திருந்தால், அவர்களுடைய வியாக்யானம் திரு குர்ஆன் வேத வசனங்களைக் கட்டுப்படுத்தாது என்பதைக் கிறிஸ்துவ சகோதரர்கள் உணர வேண்டும். ஆனால், கிறிஸ்துவ சகோதரர்கள் செய்யும் ஆக்ஷேபனைகள் யாவும் இப்படிப்பட்ட ஆராய்ச்சி முறையற்ற வியாக்யானங்

களையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் இவ்விடத்தில் மீண்டும் குறிப்பிட விரும்புகிறோம்.

மர்யம் ஸித்தீக்கா ஹஜ்றத் ஹாரூன் (அலை) அவர்களுக்குச் சகோதரியா?

ஹஜ்றத் மர்யம் ஸித்தீக்காவை ஹாரூனுடைய சகோதரி என்று திரு குர்ஆன் கூறி இருக்கிறது. ஆனால், ஹாரூன் என்பவர் ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் சகோதராக இருந்தார். ஹஜ்றத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குப் பல நூற்றுண்டுகளுக்குப் பின்னர்தான் ஹஜ்றத் மர்யம் ஸித்தீக்கா பிறந்தார்கள். ஆகவே, ஹாரூன் அலை ஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மர்யம் ஸித்தீக்கா சகோதரி யாகுவதெங்ஙனம்?

ஹஜ்றத் மர்யம் ஸித்தீக்கா ஹாரூனின் சகோதரி என்ற மாத்திரத்தில் ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சகோதரரான ஹஜ்றத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சகோதரி என்று அர்த்தம் செய்து கொண்டு ஆக்ஷேபனைக்காரர் தமது ஆக்ஷேபனையைக் கிளப்பியிருக்கிறார். இஸ்ராயீலின் சந்ததியினரான யூதர்களில் மூஸா, ஹாரூன், இப்ராஹீம் என்ற பெயருள்ள சாமான்ய ஜனங்கள் இருந்ததில்லையா? மூஸா, ஹாரூன், இப்ராஹீம் போன்ற நபிமார்களின் பெயர்கள் வைக்கப்பட்ட சாமான்ய ஜனங்கள் எத்தனையோ பேர் யூதர்களில் இருந்தார்கள் என்பதை ஆக்ஷேபனைக்காரர் உணரவேண்டும். அவர் ஆக்ஷேபனை செய்வதற்கு முன்னர், ஒரு யூதரிடம் இவ்விஷயங்களைப்பற்றி விசாரித்திருப்பாராயின், அவர் ஆக்ஷேபனை செய்யவே முன் வந்திருக்க மாட்டார். ஹஜ்றத் மர்யம் ஸித்தீக்காவுக்கு ஹாரூன் என்ற பெயருள்ள ஒரு சகோதரர் இருந்தார் என்ற விபரத்தை ஆக்ஷேபனை கூறுகிறவர்கள் உணர்வார்களாக.

இஸ்ரவேலர் காளை மாட்டை வணங்கியது

ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்குப் பின் ஸாமிரி என்பவர் காளைக் கன்றின் உருவத்தைச் செய்து இஸ்ரா

வேலருக்கு அளித்ததாகவும், அதைச் சிலர் வணங்கிக் கெட்டுப் போனதாகவும் திரு குர்ஆன் கூறுகின்றது. ஆனால், காளைமாட்டை ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்து கொடுத்ததால்தான் மூஸா அலைஹிஸ் ஸலா மவர்களுக்குக் கோபமேற்பட்டது என்று தௌராத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, இவ்விஷயத்தில் திரு குர்ஆனும் தௌராத்தும் மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கூறி இருக்கின்றன என்பதை முஸ்லிம்கள் கவனிக்க வேண்டும்.

யூதர்கள் கெட்ட எண்ணத்தினாலோ அல்லது தவறாகவோ அல்லது ஒரு கக்ஷிச் சார்பாகவோ தவறான கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் தௌராத் முதலிய வேதங்களில் சேர்த்து எழுதி விட்டார்கள் என்று திரு குர்ஆன் முதலிலிருந்தே கூறி வருகிறது. தவிரவும் திரு குர்ஆன் அருளப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்து வருகிறது. முற்காலத்திய வேதங்களில் தவறாக எழுதப்பட்டவைகளைச் சீர்திருத்துவதும் திரு குர்ஆனின் ஒரு வேலையாகும். எனவே, தௌராத்தில் ஹஜ்றத் ஹாரூன் அலைஹிஸ் ஸலாமவர்கள் காளைக் கன்றை வணங்கும்படிச் செய்தார்கள் என்று எழுதப்பட்டிருப்பது தவறு. ஸாமிரி என்பவன்தான் அவர்களுக்குக் காளைக் கன்றைச் செய்து கொடுத்துச் சிலரை வழிதவறச் செய்தான் என்று திரு குர்ஆன் கூறி, நபிமார்களின் மீது யூதர்கள் கட்டிவைத்த பொய்க் குற்றச் சாட்டுகளை மறுக்கிறது. ஹஜ்றத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாமவர்கள் விஷயத்தில் மாத்திரமில்லாமல் ஏனைய நபிமார்கள் விஷயத்திலும் கூட பைபிள் தவறாகவே சாட்சியம் கூறுகிறது.

ஹஜ்றத் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் விக்கிரக ஆராதனை செய்ததாகவும், ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒரியாவினுடையமனைவியான ஸப்உவின் புதல்வியைவிபசாரம் (இவர்தான் சுலைமான் நபியவர்களின் தாயார்) செய்ததாகவும், ஹஜ்றத் லூத்அலைஹிஸ்ஸலாமவர்கள் மதுபானத்தை அருந்தி

விட்டுத் தம்முடைய புதல்விகளுடன் வியபிசாரம் செய்து மக்களையைப் பெற்றதாகவும், ஆதம் அலைஹிஸ்ஸலாமவர் களை இறைவன் சிருஷ்டித்து விட்டுப் பின்னர் அதற்காகப்பச்சா தாபப் பட்டதாகவும், வானங்களையும் பூமியையும் இறைவன் சிருஷ்டித்துக் களைப்படைந்து விட்டதாகவும், ஹஜ்றத் யாக் கூப் அலைஹிஸ்ஸலாமவர்களுடன் இறைவன் குஸ்தி செய்த தாகவும், மலக்குகள் ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களிடம் வந்து உண வருந்தியதாகவும், அல்லாஹுதஆலாவுக்கு பஞ்சைப் போல் வெண்மையான தாடி இருப்ப தாகவும், இன்னும் அநேகவிதமாக வெல்லாம் பைபிளில் எழுதி வைத்திருக்கிறார்கள். இவைகளை மறுத்து உண்மை யான விஷயங்களை மக்களுக்கு அறிவிக்கவே திரு குர்ஆன் வந்தது என்பதைக் கிறிஸ்துவ சகோதரர்கள் உணரவேண்டும்.

நாயகம் (ஸல்) அவர்களுக்கு அற்புதங்களில்லையா?

அநேகம் நபிமார்கள் செய்து காட்டிய அற்புதச் செய்கை கள் திரு குர்ஆனில் கூறப் பட்டிருக்கின்றன. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்ததாக ஒரு அற்புதம் கூட திரு குர்ஆனில் கூறப்பட்டில்லை. தவிரவும், அவருடைய சமூகத்தார் அவரிடம் அற்புதச் செய்கைகளைக் காண்பிக்கும்படி கேட்டும் அவர் அவ்வாறு காண்பிக்கவில்லை. எங்களுடைய பைபிளில் கர்த்தர் செய்த அநேகம் அற்புதங்கள் எழுதப் பட்டிருப்பது மல்லாமல் அவருடைய சிஷ்யர்களும் கூட பல்வேறு அற்பு தங்களைச் செய்த விபரமும் கூறப் பட்டிருக்கிறது.

இயற்கைக்கு மாறான அநேகம் காரியங்களை நபிமார்கள் செய்து காண்பித்திருக்கிறார்கள். நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அநேக அற்புதங்களைச் செய்து காண்பித் திருக்கிறார்கள். இவைகளைப் பற்றிய விபரம் திரு குர்ஆனிலும், ஹதீதுகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த அற்புதச் செய்கைகள் இல்லை என்று திரு குர்ஆனில் கூறப் பட்டிருப்பதாகக் கிறிஸ்

துவ சகோதரர்கள் நினைத்துக் கொண்டிருப்பதும், அவ்விதம் பிரசாரம் செய்து கொண்டிருப்பதும் தவறு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்து காட்டிய அநேகம் அற்புத நிகழ்ச்சிகளைத் திரு குர்ஆனிலிருந்தே யாம் எடுத்துக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், அதற்கு முன் அற்புதச் செய்கைகள் என்றால் என்ன? அவைகளில் எத்தனை வகையுண்டு? அவைகளைச் செய்து காண்பிப்பது நபியாக இருப்பவருக்கு அவசியமா? இதனாலேற்படும் பயன் யாது? என்ற விபரங்களைச் சிறிது விவரிப்பாம்.

நபிமார்கள் அல்லாஹு தஆலாவினால் அனுப்பப் பட்ட உண்மையானவர்கள் தாம் என்பதை ருஜுப்பித்துக் காண்பிப்பதற்காகவும், தாங்கள் கூறும் உபதேசங்கள் மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருக்கின்றன என்று பாமர மக்களுக்கு நம்பிக்கை யுண்டாகுவதற்காகவும் மனித சக்திக்குப் புறம்பான சில செய்கைகளை நபிமார்கள் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட செய்கைக்கு அறபி மொழியில் முஃஜிஸா என்று பெயர். தமிழில் அதனை அற்புதம் என்று கூறுகிறார்கள்.

ஆனால், மனித சக்திக்குப் புறம்பானவைகளே போல் தோன்றுகிற சில காரியங்களை நபிமார்கள் மட்டுமின்றிச் சாமான்ய ஜனங்களும் செய்கிறார்கள். சாமான்யரில் சில துஷ்டரும் கூட இப்படிப்பட்ட செய்கைகளைச் செய்வதுண்டு மந்திரவாதிகளும் இவ்வாறு செய்கிறார்கள். இவர்களுக் கிடையிலுள்ள பாகுபாட்டைச் சாமான்யர் அறிந்து கொள்ளாமல் மத விஷயங்களிற் தடுமாற்ற மடைகின்றனர். இத்தகைய துஷ்டர்களும், மந்திர வாதிகளும் செய்யும் இச்செய்கைகளைச்சில நிரீஸ்வர வாதிகள் ஆதாரமாகக் கொண்டு நபிமார்களை மறுதலிக்க முற்பட்டு விடுகிறார்கள். ஆதலால், இதிலுள்ள வித்தியாசங்களையும் இவ் விவாதத்தில் கூற வேண்டியதாக இருக்கிறது.

மனிதச் செய்கைக்குப் புறம்பானவைகளை நபிமார்கள் செய்வார்களாயின், அவைகளுக்கு அறபியில் முஃஜிஸா என்று பெயர். இப்படிப்பட்ட செய்கைகள் நபிமார்களைப் பின்பற்றிய பெரியார்களால் செய்யப்படுமாயின் அவைகளுக்குக் காராமத்து என்று பெயர். இவ்விதமான செய்கைகள் நபிமார்களுக்கு நபிப் பதவி கிடைப்பதற்கு முன் அவர்களால் செய்யப் பட்டிருக்குமாயின் அவைகளுக்கு இர்ஹாஸ் என்று பெயர். இப்படிப்பட்ட செய்கைகளை நபிமார்களைப் பின்பற்றும் சாமான்யர்கள் செய்வார்களாயின் அவைகளுக்கு மஊனத் என்று பெயர். இவ்விதமான செய்கைகளைக் காபிரானவர்கள் செய்வார்களாயின் அவைகளுக்கு இஸ்தித்ராஜ் என்று பெயர். ஆனால், இவ்விதமான அற்புதச் செய்கை உண்மையில் காபிர்களால் செய்யப்படுவதில்லை. இதற்குமுன் செய்யப் பட்டதும் கிடையாது. ஆனால், சாதாரணமாக யாவருக்கும் தெரியக்கூடிய விதமாக அச்செய்கை நிகழ்வதற்குள்ள முக்கிய காரணம் வெளிக்குத் தோன்று வதில்லை யாதலால், இதைச் சாமான்ய ஜனங்கள் அற்புதச் செய்கை என்று நினைக்கின்றனர். உண்மையில் இவை அற்புதச் செய்கைகளாக இல்லாமல் தந்திரச் செய்கைகளாகவே இருக்கின்றன.

எனவே, காபிரானவர்கள் அதாவது அல்லாஹுதஆலாவையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் அங்கீகரிக்காமல் இருக்கிற முஸ்லிம் அல்லாதார் அற்புதச் செய்கைகளேபோல் செய்து காட்டும் அபூர்வச் செய்கைகளுக்கும் நபிமார்களால் நிகழ்ந்திருக்கிற அற்புதச் செய்கைகளுக்கும் நபிமார்களால் நிகழ்ந்திருக்கிற அற்புதச் செயல்களுக்குஞ் பளிங்கிற்கும் வைரத்துக்கு மிடையிலுள்ள வித்தியாசமுண்டு. முத்து வியாபாரிகள் உண்மையான வைரத்தையும், பளிங்கியையும் பாகுபாடு செய்வதுபோல், பொது ஜனங்கள் நபிமார்களின் முஃஜிஸாவையும், காபிரானவர்கள் செய்கிற அபூர்வ காரியங்களையும் பிரித்தறிந்து கொள்ள முடியாது. ஆனால், காபிரானவர்கள் அபூர்வச் செய்யை செய்தபோதிலும் விஷயமுணர்ந்தவர்கள்,

அந்தச் செய்கையினால் அவர்களைப் பெரிய மனிதரென்றோ, நபிமார்களின் அந்தஸ்திலுள்ளவ ரென்றோ, அவருடைய நட்பினால் மக்கள் நேரான வழியை அடையலாம் என்றோ, சிறந்த ஒழுக்கங்களைப் பெறலாம் என்றோ கருதமாட்டார்கள். அப்படிப்பட்ட பேர்வழிகள் அந்தச் செய்கையை செய்து காட்டி, தமக்கு நபித்துவம் கிடைத்திருப்பதாக தாவாச் செய்வாராயின் உடனே அவர் அவமானமும் கேவலமு மடைவதற்கான வழியை இறைவன் ஏற்படுத்தி விடுகிறான். தவிரவும் அப்படிப்பட்ட பேர்வழிகள் இறுதியில் கேவலமான தண்டனைகளையே அடைய நேரிடுகிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் இவ்வுலகிற் பல நிகழ்ந்திருக்கின்றன. இவைகளை இறைவன் தனது திருமறையில் மாத்திரம் கூறி இருக்கிறான் என்பது இல்லாமல், கிறிஸ்துவர்களாகிய உங்களிடமிருக்கிற பைபிளில், உபகாமம், பதினேழாவது அத்தியாயத்தில்,

> "சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும் வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக் கடவன்.
>
> கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில்,
>
> ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான் அவனுக்கு நீ பயப்படவேண்டாம்"

என்று எழுதப் பட்டிருக்கிறது.

பைபிள் பழைய ஏற்பாட்டின் இவ்வாக்கியங்களிலிருந்து அல்லாஹுதஆலாவின் பெயரால் போலியர்கள் தங்களை நபிமார்கள் அதாவது அல்லாஹ்வின் தூதர்கள் என்று சொல்லிக் கொண்டு ஒரு காரியத்தைச் சொல்லுவார்களாயின் அதை நம்பப்படாதென்றும், அந்தக் காரியம் அப்போலியர் கூறுவது போல் நடைபெறுமலும் நிறைவேறுமலும் போய் விடும் என்றும், இப்படிப்பட்டவர்களை நிராகரிக்கும் விஷயத்தில் அஞ்சப்படாதென்றும், இவர்களுக்குரிய தண்டனை மரண தண்டனை என்றும் குறிப்பிட்டிருக்கிறது. எனவே, போலியர்கள் தங்களை நபிமார்கள் என்று கூறிக்கொண்டு ஒரு அற்புதத்தைச் செய்ய முடியாது என்பது நன்கு தெரியவரும்.

இந்த முஃஜிஸாவானது இரண்டு வகைப்படும். அதாவது பிறவிக் குருடனைத் தீண்டிய மாத்திரத்தில் அவன் பார்வையுள்ளவனுக ஆகி விடுதல், ஒரு மனிதர் அருந்துவதற்குக் கூட போதியதாக இல்லாத பானகம், உணவு ஆகியவைகளை ஒரு பெரிய பந்தி வயிறு நிறம்ப வேண்டிய மட்டிலும் அருந்தும்படியாக ஆக்குவது, சந்திரனைப் பிளக்கச் செய்வது போன்ற அற்புதச் செய்கைகள் ஒருவகை. இப்படிப்பட்ட செய்கைகள் எவ்வாறு நிகழ்ந்தன என்பதற்கான காரணம் ஐம்புலன்களுக்கு எட்டுவதில்லை. இவ்வித நிகழ்ச்சி சாமான்யர்களுக்குத்தான் அதிகப் பிரயோஜனப்படும். இவ்விதமான செய்கைகள் அறிவுள்ளவர்களுக்கு அவ்வளவு பிரமாதமான பலனை அளிக்கமாட்டா. ஏனென்றுல், தந்திரக்காரர்கள் தங்களது சமர்த்தினுல் இவ்விதம் செய்து காட்ட முடியுமென்பதை அறிவுள்ளவர்கள் உணர்ந்திருக்கிறுர்கள். மனிதனுடைய தன்மையில், மனிதனுடைய உணர்ச்சியில், அவனுடைய

எண்ணத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கி விடுவது இரண்டாவது வகையான அற்புதச் செய்கையாகும். இவ்விதமான அற்புதச் செய்கை அறிவுடையோருக்கு அதிகப் பிரயோஜனப்படும். இவ்விதமான செய்கையைத் தந்திரக்காரர்கள் செய்யவும் முடியாது. அவ்விதமாகவே தந்திரக்காரர் ஒருவர் தமது சாமர்த்தியத்தினால் அதை செய்தாலும் அதை நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கும்படியாகச் செய்ய முடியாது.

மனிதருக்கு நேரான வழியைக் காட்டி, அவர்களுடைய ஒழுக்கங்களையும் ஞானங்களையும் சீர்திருத்தி, பரமார்த்திகத் துறையில் மக்களை ஈடுபடச் செய்து, இம்மை மறுமைப் பேற்றுக்கான துறையைக் காண்பிக்கவே நபிமார்கள் ஜனங்களிடம் அனுப்பப்பட்டனர். ஆகவே, அவர்கள் அற்புதங்களைச் செய்து கொண்டிருப்பது அவர்களுடைய பிரதான வேலையன்று. ஆனால், அவசியம் நேர்ந்தாழி இத்தகைய அற்புதச் செய்கைகளைக் காட்டித் தங்களை இறைவனின் தூதர் என்று பொது ஜனங்கள் ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு அறிகுறியாயிருக்கும் பொருட்டு இவைகள் நபிமார்களின் மூலமாகவே வெளியாகின்றன.

ஆகவே, ஒருவர் நபியாக இருக்க வேண்டுமாயின் அதற்காக அவர் அற்புதச் செய்கையை அவசியம் காண்பிக்கத்தான் வேண்டு மென்ற அவசிய மில்லை. ஒருவர் நபியாக இருந்து கொண்டே தனது ஜீவிய காலம் முழுவதிலும் ஒரு அற்புதச் செய்கையைக் கூட ஜனங்களுக்குச் செய்து காண்பிக்காமலிருந்து விடவும் கூடும். தவிரவும், நாம் மேலே எடுத்துக் காட்டிய முதலாவது வகையைச் சேர்ந்த அற்புதச் செய்கைகளைக்கண்டு விசுவாசங் கொண்டவர்கள் ஆத்மார்த்த முன்னேற்றங்களில் அதிகம் பலன் அடைந்திருப்பதாகவும் தெரியவில்லை. தவிர, அப்படியடைந்தவர்களின் உச்ச நிலையும் மிகச் சீக்கிரத்தில் மாறிவிடுவதாகவுமிருக்கிறது. முற்காலத்திலுள்ள நபிமார்கள் காட்டிய அற்புதச் செய்கைக ளெல்லாம் பெரும்பாலும் இம் முதலாவது வகையையே சேர்ந்திருந்தன. இதனால் தான்

அந்த நபிமார்களைப் பின்பற்றியவர்கள் அந்த நபிமார்களுக்குப் பிறகு மேலும் மேலும் அநேகம் படித்தரங்களைக் கடந்து முன்னேற்றங்களை அடையாமல் மிகவும் சொற்ப காலத்துக்குள் தங்களுடைய பழைய நிலைமைக்கு வந்து கொண்டிருந்தனர். இதனால் தான் இஸ்ரவேலரில் அடுத்தடுத்துப் பல நபிமார்களை இறைவன் தொடர்ச்சியாக அனுப்பவேண்டியதுமிருந்தது. ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் அற்புதச் செய்கைகளும் இம்மாதிரியான முதலாவது வகை முஃஜிஸாவாகவே இருந்தன.

ஆனால், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் செய்த அற்புதச் செய்கைகள் பெரும்பாலும் இரண்டாவது வகையைச் சேர்ந்த முஃஜிஸாக்களாகவே இருந்தன. திரு குர்ஆனில் "உங்களுக்குத் திருஷ்டாந்தமிருக்கிறது," என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டிருக்கிற ஆயத் என்ற பதம் இவ்விரண்டாவது வகை முஃஜிஸாக்களையே சுட்டிக் காட்டுவனவாக இருக்கின்றன.

ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நெருப்பில் கரியாமல் க்ஷேமமாக இருந்த விபரம், ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கடல் கடந்த விபரம், ஸாலிஹு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு ஒட்டகை வந்த விபரம், சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆசனத்தில் அமர்ந்து ஒரு மாதம் நடந்து செல்லக்கூடிய தொலை தூரத்தைப் பாதிப் பகலுக்குள் சென்றது, கண்மூடி விழிப்பதற்குமுன் எமன் தேசத்தரசியான பல்கீஸைக் கொண்டு வந்தது, ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் மரித்தவர்களை உயிர்ப்பித்தது, பிறவிக் குருடரைப் பார்வையுள்ளவர்களாக்கியது முதலிய விபரங்கள் திருகுர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறோம். இந்த நபிமார்கள் முன்னிருந்த உம்மத்துகளிடம் அனுப்பப்பட்டவர்கள். ஆகவே, அக்காலத்திலுள்ள ஜனங்களின் நிலைமையையும் தன்மையையும் எடுத்துக் கூறவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட சமயம் அவர்களால் நிகழ்ந்த இந்த அற்

புதச் செய்கைகளையும் சொல்லவேண்டியதாக ஆயிற்று. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றி இம்மாதிரி எடுத்துக் கூறவேண்டிய அவசியம் திருகுர்ஆனில் ஏற்படவில்லை. ஏனென்றால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே திருகுர்ஆன் அருளப்படுகிறது. அப்படிப்பட்ட வேதத்தில் நாயகமவர்களின் அற்புதச் செய்கையையே கூறுவதென்றால் அதற்கு விசேஷமேற்படாது என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அவ்வாறிருந்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் அளித்த அநேகம் அற்புதச் செய்கைகள் இடையிடையே திருகுர்ஆனில் சொல்லப்பட்டு மிருக்கின்றன.

1. திருகுர்ஆன் ஷரீபே நபிகள் நாயகமவர்களின் நிகரற்ற பெரிய அற்புதமாக இருக்கிறது. இதை திருகுர்ஆனும் கூட எடுத்துக் காட்டி யிருக்கிறது. "நம்முடைய அடியாரின் மீது நாம் இறக்கிய இவ்(வேதத்)தில் நீங்கள் சந்தேகிப்பீர்களாயின் இதைப் போன்ற ஒரு அத்தியாயத்தை நீங்கள் (இயற்றிக்) கொண்டு வாருங்கள்" என்று இறைவன் கூறியிருக்கிறான். இம்மாதிரியான ஒரு அற்புதத்தை இன்றுவரை ஒருவரும் செய்ததில்லை.

2. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுககு இறைவன் ஷாஹ்ஸத்ரு செய்திருக்கிறான். அவர்களுடைய கீர்த்தியைப் பிரபலம் செய்திருக்கிறான். இவ்விஷயம் திருகுர்ஆனிலுள்ள அத்தியாயம் நெ. 94ல் சொல்லப் பட்டிருக்கிறது. உலகத்தி லுள்ள எவ்விதக் கல்வியையும் கற்றுக் கொள்ளாதவரும் கற்றறிந்த நிபுணர்களுள்ள ஊரில் வாசஞ் செய்யாதவருமான நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகல ஞானத்துக்கும் தலையூற்றாக இருப்பது மனித சக்திக்குப் புறம்பான விஷய மல்லவோ?

3. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவர் பிறந்த ஊரில் சகல விதத்திலும் தடையும் எதிர்ப்பும் இருந்துங் கூட சில வருஷங்களுக்குள் நாயகமவர்களின் நபித்துவம் அந்த

தேசமெங்கும் பரவி யாவரும் அப்பெருமகரின் சிஷ்யராக மாறுவ தென்பது அற்புதமில்லையா? இது ரபஉதிச்ருக இல்லையா?

4. ஒரே இரவுக்குள் மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹரு மிலிருந்து பைத்துல் முகத்தஸ் என்ற எருசலேமிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குச் சென்று திரும்ப வந்தது அற்புத மில்லையா?

5. இவைகளை யல்லாமல் எதிர் காலத்தில் நடக்க வேண்டிய பல சம்பவங்கள் திருகுர் ஆனில் சொல்லப்பட்டு அவை கள் அவ்விதமாகவே நடைபெற்று மிருக்கின்றன. உதாரண மாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஷ்டப்பட்டுப் பல வகையாலும் அறபிகளால் நெருக்குண்டிருந்த சமயத்தில் "எல்லா மார்க்கத்தைப் பார்க்கினும் இஸ்லாம் மார்க்கத்தைப் பிரபலப்படுத்துவதற்காக அவன் தான் தனது ரஸூலை நேர்வழியைக் கொண்டு அனுப்பினன்" என்று இறைவன் வேத வசனத்தை அருளி நாயகமவர்களின் எதிர்காலத்தையும், அரபி தேசத்தில்இஸ்லாம் மதம் சிறந்து விளங்கி எல்லா மதங்களையும் அது ஜயிப்பதையும் பற்றிக் கூறியபோது அக்காலத்திலிருந்த முஸ்லிமல்லாத அராபியர்கள் கைகொட்டி நகைத்தனர். ஆயினும், பின்னர் அது எவ்வாறு யிற்று? அறபி தேசத்திலிருந்த ஏனைய மதங்களெல்லாம் இஸ் லாத்துக்கு அடங்கி ஒடுங்கி விட வில்லையா?

"மேலும், அல்லாஹ் உங்களில் விசுவாசங் கொண்டு நல்ல காரியங்களைச் செய்தவர்களைப் பூமியில் கலீபாவாக ஆக்குவ தாக வாக்களிக்கிறுன்" என்று தனது திருமறையில் முன் னறிவிப்புச் செய்தது மிகவும் நேர்மையாக நிறைவேற வில் லையா? நபிகள் நாயகமவர்களின் சிஷ்யர்களான ஸஹாபிகளிற் பலர் மிகவும் கம்பீரமான கலீபாக்களாகவும், தேசாதிபதிக ளாகவும், ராஜிய நிபுணர்களாகவும் விளங்கியது இந்த வசனத் திற் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தின் பயனலல்லவோ?

உரோமரும் பாரசீகரும் யுத்தம் செய்து உரோமர் தோல்வியுண்ட விபரத்தைத் திருமறை தெளிவுபட எடுத்துக் கூறி "இப்பொழுது தோல்வியுண்ட உரோமர்சிலவருஷங்களுக்குப் பின்னர் பாரசீகர்களை ஜயிப்பார்கள்" என்று முன்னறிவிப்புச் செய்தது. அதன் பிரகாரம் பின்னர் நடைபெற வில்லையா?

இவை போன்ற இன்னும் பல முன்னறிவிப்புகள் திரு மறையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் நபிகள் நாயகம்(ஸல்)அவர்களின்அற்புதச் செய்கைகளல்லவா? திருகுர்ஆனைப் பொருத்த விஷயங்களைப்பற்றி மட்டும் நாம் இவ்வியாசத்தில் எழுதுவதாக நிர்ணயித்திருப்பதால் இம்மட்டுடன் நிறுத்திக் கொண்டோம். ஹதீது ஷரீபுகளைப் பற்றியும் இவ்வியாசத்தில் எழுதுவதாகவோ அல்லது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றிய முஃஜிஸாக்களை எழுதுவதாகவோ நாம் உறுதி கொண்டிருந்தால் முற்காலத்தைய நபிமார்கள் செய்த அற்புதங்களைப்போல் அதாவது நாம் மேலே பிரித்துக் காட்டிய இரண்டு வகை அற்புதங்களில் முதலாவது வகை அற்புதங்களைப் போல், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நிகழ்ந்த அற்புதச் செய்கைகளை ஹதீது ஷரீபுகளிலிருந்து எடுத்து காண்பித்திருப்போம். ஹதீதுகளில் வந்திருக்கிற அற்புதச் செய்கைகளை ஒவ்வொன்றாக நாம் எடுத்துக் காண்பிப்பதாயின், பைபிள் புதிய ஏற்பாட்டில் ஹஜ்ரத் ஈஸா நபி யவர்கள் செய்ததாக எழுதப்பட்டிருக்கிற அற்புதச் செய்கைகளுக்கு மேல் எத்தனையோ மடங்கு அதிகமான அற்புதங்களை நாம் எடுத்துக் காண்பிக்க முடியும்.

நபிகள் நாயகமவர்கள் அற்புதச் செய்கைகள் காண்பிக்கவே இல்லை என்பதற்கு "முற்காலத்திலுள்ளவர்கள் அற்புதங்களைப் பொய்யென்று கூறி நபிமார்களை நிராகரித்து விட்டது தான் அற்புதங்களை நாம் அனுப்புவதற்குத் தடையாக இருக்கிறது" என்ற கருத்துள்ள திருமறை வசனத்தை ஆதாரமாக கிறிஸ்துவர்கள் எடுத்துக் காட்டுவது திரு குர்ஆன் வசனத்

தைத் தப்பர்த்தம் செய்து கொண்டதனால் தான். இந்த ஆயத்திலிருந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அற்புதங்களை செய்யவில்லை என்று கிறிஸ்துவர்களாகிய நீங்கள் கூறுவது சரியாகாது. அவ்வாறு யூகித்து அதையே சரியென்று வாதிப்பீர்களாயின் இம்மாதிரியான கருத்துள்ள வாக்கியத்தை உங்களுடைய பைபிள் புதிய ஏற்பாட்டிலிருந்து நாமும் எடுத்துக் காண்பிக்க முடியும். மத்தேயு அதிகாரம் 27 வசனம் 39 முதல் 50 முடிய

"அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி ;

தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக் கொள் ; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இரங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்.

அப்படியே பிரதான ஆசாரியாரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி ;

மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத் தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்.

தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன் மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை ரட்சிக்கட்டும் என்றார்கள்.

அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்...........................
....ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு "ஏலீ ஏலீ லாமா சபக்தானி" என்று மிகுந்த சப்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு

என் தேவனே என் தேவனே என் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.

மற்றவர்களோ "பொறு, எலியா இவனை ரட்சிக்க வருவானே, பார்ப்போம்" என்றார்கள்.

இயேசு, மறுபடியும் மகா சப்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார்" என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த வாக்கியங்களிலிருந்து ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களை அற்புதச் செய்கைகளைக் காட்டும்படி யூதர்கள் அறைகூவி அழைத்தார்கள் என்பதும், அதற்கு அவர் ஒன்றும் பதில் கூறவில்லை என்பதும் தெரிய வருகிறது.

இந்த அறை கூவலுக்கு ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒன்றுங் கூறாமல் இருந்ததுடன், பைபிள் வாக்குப்படி "என் தேவனே என்தேவனே என் என்னைக் கை விட்டீர்" என்று மிகுந்த சப்தமிட்டுக் கூவியதாகவும் தெரிகிறது. இவ்வாறு கூவியும் அவர்-பைபிள் வாக்கியப்படி-சிலுவையில் அறைபட்டு ஆவி துறந்ததால் அவரைப் பொய்யான நபியென்றும், அற்புதஞ் செய்து காட்டச் சக்தியற்றவரென்றும், இறைவனால் கைவிடப்பட்டவரென்றும் கூறுவதுதகுமா? என்பதைக் கிறிஸ்துவர்களாகிய நீங்களே சிந்தித்துப் பாருங்கள். இம்மாதிரி கூறுவது தகும் என்று ஒருபோதும் நீங்கள் கூறமாட்டீர்கள். இதுபோல நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விஷயத்திலும் திரு குர்ஆனுக்கு நேரான பொருள் கொள்வதில் உங்களுக்கு என்ன ஆக்ஷேபனை இருக்கிறது?

நிற்க, மக்காவிலுள்ள சில அடங்காப் பிடாரிகள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சில அற்புதங்களைக் காண்பிக்கும்படி பரிகாசமாகக் கேட்டார்கள். அதற்கு மறு மொழியாக மேற்கண்ட திருவசனம் இறைவனாலருளப்பட்டது. இம்மூரியாட்டக்காரர்கள் கேட்ட கேள்விகளை நிராகரித்து "அற்புதச் செய்கைகளை முற்காலத்து நபிமார்கள் காட்டியும் முற்காலத்தி

விருந்த அடங்காப்பிடாரிகள் நபிமார்களைப் பொய்ப்பித்துக் கொண்டு தானிருந்தார்கள். அவர்களைப் போலவே நீங்களும் கேட்கிறீர்கள். அற்புதச் செய்கைகளைக் காண்பித்தாலும் நீங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொய்ப்பிக்கும் விஷம வேலைகளை விடமாட்டீர்கள். ஆதலால், பிரயோஜன மற்ற காரியத்தைச் செய்யமுடியாது என்ற விஷயங்களை மேற்கூறப் பட்ட தெய்வத் திரு வசனம் வற்புறுத்துகிறதே அன்றி நபிகள் நாயகமவர்களுக்கு அற்புதங்களை இறைவன் அளிக்கவே இல்லை என்பதை அறிவிக்கவில்லை. இதைக் கிறிஸ்துவ சகோதரர்கள் நன்கு உணர வேண்டும்.

இனி, ஹஜ்றத் ஈஸா நபியவர்களின் சிஷ்யர்கள் காட்டிய அற்புத நிகழ்ச்சிகளைப் போல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்சிஷ்யர்களானஸஹாபிகளும் காண்பித்திருக்கிறார்கள். அவர்களுக்குப்பின் இற்றை நாள்வரை ஏற்பட்ட நாயகமவர்களின் பக்தர்களிலுள்ள நல்லடியார்களான வலீமார்களும் அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் ஈண்டு விபரிப்பதற்கு இது இடமல்ல வாதலின் விடுத்தனம். இனி ஒரு விஷயம் இவ்விடத்தில் கூறுவது அவசியமாக இருக்கிறது. அவ்விஷயம் கிறிஸ்துவர்களாகிய உங்களது கேள்வியில் வற்புறுத்தப்பட வில்லையாயினும் உங்கள் சகோதரரி லுதித்த சில சயன்சு வாதிகள் அதனை வற்புறுத்தி ஹஜ்றத் ஈஸா நபியவர்கள் செய்த அற்புதங்களுக்குக் கூடார்த்தம் செய்கின்றனர். இவர்களின் பசப்பு வார்த்தைகளைக் கேட்டசில முஸ்லிம்களும் இவர்களின் கூற்றை மெய்யென நம்பி திருகுர்ஆனில் நபிமார்கள் செய்து காட்டியதாகக் கூறப்பட்டிருக்கும் அற்புதச் செய்கைகளுக்கு கூடார்த்தம் செய்யத் தலைப்பட்டு இருக்கிறார்கள். ஆதலின், அச்சந்தேகத்தை நிவாரணம் செய்வதும் இந்தஇடத்தில் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

நபிமார்களின் அற்புதச் செய்கைகள்

நபிமார்களால் செய்யப்படும் அற்புதச் செய்கைகள் மனித சக்திக்குப் புறம்பானவை என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். எனவே, மனித சக்திக்கு மேம்பட்ட இச்செய்கைகள் இயற்கைச் சட்டத்துக்கு விரோதமானவைகள் என்று கருதப்படுகின்றது. இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறுவது சாத்தியமா அல்லது அசாத்தியமா? என்ற வாதம் விஞ்ஞான சாஸ்திரிகளுக்குள் புதிதாக உண்டாகி இருக்கிறது. இதை அசாத்தியம் என்றே சில அரை குறை சயன்சு வாதிகள் கருதுகிறார்கள். நபிமார்கள் செய்த அற்புதங்களைப் ராவிகள் மிகைப்படுத்தி உருவகமாகக் கூறி இருப்பதாகவும் தாவாச் செய்து, அவைகளுக்குக் கூடார்த்த வியாக்கியானமும் செய்கிறார்கள். அவர்கள் கூறும் தாவா வருமாறு:—

ஒவ்வொரு வஸ்துவும் இயற்கை யாகவே உண்டாக்கப் பட்டிருக்கின்றது. ஜலம் அருந்துவதால் தாகவிடாய் தீருகிறது. மண்ணை வாரி வாயில் போட்டுக் கொள்வதால் தாகவிடாய் தீராது. மனிதன் ஜலத்தில் நீந்துவதன் மூலமாக அல்லது படகுகள், கப்பல்கள் மூலமாக அக்கரை ஏறலாம். ஜலத்தின் மேற் பரப்பில் பூமியின் மீது நடப்பது போல் நடந்து அக்கரை சேர முடியாது. மனிதன், மாடு முதலியவைகள் தானாக ஆகாயத்தில் பறக்க முடியாது. இயற்கைச் சட்டம் கடவுளால் உண்டாக்கப்பட்டது. இது சம்பந்தமாக திரு குர்ஆனிலும் அல்லாஹுதஆலா இயற்கைச் சட்டத்தை உண்டாக்கி இருக்கிறான். அதன்படி தான் ஜனங்களை அவன் சிருஷ்டித்திருக்கிறான். "அல்லாஹுதஆலாவின் சிருஷ்டிக்கு எவ்வித மாற்றுதலுமில்லை" என்று கூறி இருக்கிறான். "மலையானது தன்னுடைய இடத்தை விட்டு நகர்ந்து வருகிறது என்று நீங்கள் கேள்விப்பட்டால் அதனை நீங்கள் நம்புங்கள். ஆனால், ஒரு மனிதனின் இயற்கைக் குணம் மாறி விட்டது என்று நீங்கள் கேள்விப் பட்டால் அதனை உண்மை என்று

நம்பாதீர்கள்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. இவ்வித மாகத் திரு குர்ஆனிலும் ஹதீதிலும் தக்க ஆதாரம் வந்திருக் கும்போது பெரும்பாலும் பொய்க் கலப்பும், மிகைப் படுத்திக் கூறுகையும், தப்பருத்தமும் கலந்துள்ள ராவிகளின் சொற்க ளைக் கேட்டு இயற்கைக்கு மாறான அற்புதச்செய்கைகளை நபி மார்கள் செய்தார்கள் என்று நாங்கள் எங்ஙனம் நம்ப முடியும்? இவ்விதமான மூட நம்பிக்கைகளின் மீது உலகம் நடைபெறு வதாக இருந்தால் உலகத்தின் காரியங்களெல்லாம் தலைகீழாக மாறிக் கெட்டுப் போகும். "ஆகாயத்தில் ஆயிரக்கணக்கான ரத கஜதுரகபதாதிகள் போவதை நான் கண்டேன். இதோ சென்று கொண்டிருக்கின்றன, அவைகளை நீங்களும் பாருங்கள்" என்று ஒருவர் கூறினால் அப்படிக் கூறுபவர் பைத்தியக்காரர் என்று கருதப்பட மாட்டாரா? பைத்தியம் பிடித்தவர்கள் பெரும்பா லும் கூகமான வடிவங்களுடன் இம்மாதிரி சம்பாஷணை செய்கிறார்கள். சில சமயங்களில் அவர்களுடன் சண்டை போடுவது போல் பேசுகிறார்கள். சில சமயங்களில் சிநேக மாகப் பேசுகிறார்கள். பின்னர் திடீரென்று அவர்களை அடிப் பதற்காக எழுந்திருக்கிறார்கள். சில சமயங்களில் அந்த உரு வகத் தோற்றங்களின் பேச்சைக் கேட்டுச் சிரிக்கிறார்கள். இவை கள் எல்லாம் பைத்தியக்காரர்களின் செய்கைகளாகும்.

நபிமார்களைப்பற்றி சயன்சு வாதிகள் கூறும் வியாக்யானம்

நபிமார்கள் என்றும், றஸூல்கள் என்றும் சொல்லப்படு பவர்கள் நல்லவர்கள்தான். அவர்களுக்கு சமூகச் சீர்திருத் தம் செய்ய வேண்டும் என்ற எண்ணமும், ஜனங்களுக்கு நன்மை புரிய வேண்டுமென்ற நோக்கமும் மிகப் பலமாக வேரூன்றி விட்டன. இவ்விதமான உணர்ச்சிக்கும், தன்மைக் கும் தான் நபித்துவம் என்றும், ரிஸாலத்து என்றும் அரபி யில் சொல்லப்படுகிறது. இவர்களிலுள்ள இவ்வுணர்ச்சிகள் ஊற்றுக்களைப் போல் குதித் தெழும்பு கின்றன. இவைதான் இல்ஹாமாகவும், வஹியாகவு மிருக்கின்றன.

பைத்தியக்காரனுக்கு அவனுடைய சூகமான நினைப்பு உருவம்போல் தோன்றுவது போல, நபிமார்களுக்கு இருக்கிற உறுதியான அந்த உணர்ச்சி தான் உருவாக அவர்களின் முன் தோன்றுகிறது. இது தான் அவர்களிடம் வருகிற ஜப்ராயீலாகிய தேவ தூதர். இந்த இரகசியத்தையும் சமிக்ஞையையும் அறியாத ஜனங்கள் இதை வஹீ என்று கூறுகிறார்கள். ஸ்தூலங்களுக்குள்ள இயற்கைக் குணங்களுக்குத் தாம் மலக்கு என்று சொல்லப்படுகிறது. இவைகளை நபிமார்கள் பற்பல விதமான பெயர்களை வைத்து "ஜிப்ராயீல்" என்றும், "மீக்காயீல்" என்றும் அழைக்கிறார்கள். இவ்வசுமியத்தை உணராதவர்கள் 'இவர்கள் உண்மையாகவே ஒளியினால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்' என்றுகருதுகிறார்கள். மனிதர்களின் மிருகத்தன்மைகளுக்குத் தான் ஜின் என்றும் பூதமென்றும் கூறப்படுகிறது. நபிமார்கள் இந்தத்தன்மைகளுக்கு இம்மாதிரியாகப்பெயர்வைத்திருக்கிறார்கள். கருத்தை விட்டுப் பதத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுவோர் இதனை உணர்வதில்லை. மனிதன் செய்யும் நல்ல காரியங்களுக்கும் கெட்ட காரியங்களுக்கும் தெய்வச் சட்டத்தின்படி ஏற்படுகிற சுகத்துக்கும் துக்கத்துக்கும் சுவர்க்கம் என்றும் நரகம் என்றும் பெயர். அறபி தேசத்திலுள்ள நம்மவர்களுக்கு ஆசை யுண்டாக்குவதற்காகவும் அவர்களைப் பயங்காட்டுவதற்காகவும் சோலைகள், ஹூர் என்னும் ஸ்திரிகள், மாளிகைகள், அருவிகள், கனிவர்க்கங்கள், நெருப்பு, விலங்கு, சங்கிலி முதலியவைகளால் சுவர்க்கமும் நகரமும் உருவமாக அலங்கரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த உலகம் தான் நரகமாகவும் சுவர்க்கமாகவும் இருக்கிறது. ஜனங்களுக்கு ஆசையும் பயமுமேற்படுவதற்காகப் பரிசுத்தவான்களான நபிமார்கள் இவைகளை உருவகமாகச் சொல்லி இருக்கிறார்கள். நல்ல எண்ணத்தின் பேரில் அவர்கள் இவ்வாறு கூறியதால் அவர்கள் பொய்யுரைத்தார்கள் என்று கூறுவதற்கில்லை. ஜால வித்தைகளினால் இம்மாதிரிகளான அநேகம் சமாச்சாரங்கள் காட்டப்படுகின்றன. மாஞ்செடி உண்டாக்கி, பூ, பழம் முதலியவைகளையும் ஜால

வித்தைக்காரர்கள் காண்பித்து விடுகிறார்கள். உண்மையில் செடியும் பழமும் உண்டாகிறதில்லை. தங்களுடைய ஜால வித்தையின் திறமையில் பாமரர்களின் எண்ணத்தில் மாறுதலை யுண்டாக்கி விடுகிறார்கள். நபிமார்களும் இம்மாதிரி செய்து பாமரர்களை ஏமாற்றினார்கள் என்று சொல்லப்படாதென்பதற்கு என்ன காரணமிருக்கிறது? என்று இந்த அரை குறையான ஸயன்சு வாதிகள் கூறுகிறார்கள்.

சமாதானம்

அல்லாஹு தஆலாவின் இயற்கைச் சட்டம் ஜனங்களின் அறிவுக்குக் கட்டுப்பட்டதல்ல. ஆதலால், நமது கண் பார்வையில் தோன்றுபவைகளை ஆதாரமாகக் கொண்டு விவாதம் செய்வது தகாது. ஏனெனில், மனிதனுடைய அறிவுக்கு ஐம்புலன்களை விட்டுப் புறம்பான விஷயங்களில் சக்தி இல்லை. மனிதர்கள் ஐம்புலன்களுக் குட்பட்டவைகளையேபார்க்கிறார்கள். ஐம்புலன்களுக்குப் புறம்பாக வுள்ளவைகளில் இயற்கைச் சட்டம் எம்முறையிலிருக்கிறதென்பதை மனிதன் தெரிந்து கொள்ள முடியாது.ஐம்புலன்களுக்குள் தெரிந்து கொள்ளத் தக்கவைகளையும் ஒருவன் பரிபூரணமாக தெரிந்து கொண்டிருக்க முடியாது. ஏனென்றால், இவனுடைய சொற்ப காலத்தைய ஜீவிய நாட்களில் அவன் நேருக்கு நேராகப் பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடியவைகள் மிகவும் சொற்பம் தான். இவன் நேருக்கு நேராகப் பார்க்க முடியாமல் கேள்வியின் மூலமாகத் தெரிந்து கொள்ளக் கூடியவைகள்தாம் மிகவும் அதிகம். கேள்வி மூலமாகத் தெரிந்துகொள்ளக் கூடியவைகள் அனைத்தையும் நிஜமென்று நம்பிவிடுவதற்குமில்லை. ஆதலால்,சொற்ப கால அனுபவத்தைக்கொண்டு எல்லா இயற்கை நியதிகளையும் சரிவர உணர்ந்து விட்டதாகக் கூறமுடியாது. மனிதன் உற்பத்தியான காலம் முதல் நாளது தேதிவரை மனிதன் பார்த்த சகலமும், கேள்விப்பட்ட விஷயங்ளனைத்தும் ஒரு புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதாகவும், அப்புத்தகத்திலுள்ள எல்லா விஷயங்களை

யும் ஒருவன் படித்து உணர்ந்து மனனஞ் செய்து விட்டதாக வும், அப்புத்தகத்தில் எழுதப்பட்ட விஷயத்தில் எவ்விதத் திருத்தமும், பிசகும் ஏற்படாமல் யாவும் சரியாகவே இருக்கி ன்றன என்றும் வைத்துக் கொள்வோம். இப்புத்தகத்தை அவன் வாசித்ததால் பல்லாயிரக்கணக்கான வருஷத்தைய அனுபவம் ஏற்பட்டு விட்டதாகவும் ஒப்புக் கொள்வோம். அவ்வாறிருந்தும் 20 ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு நடக் கக் கூடியதை இந்த அனுபவத்தைக் கொண்டு அவன் சரியாக உணர்ந்திருக்கிறான் என்று சொல்ல முடியுமா? எதிர் காலத் தில் இனிமேல் நடைபெறக் கூடிய விஷயங்களை அவன் சரிவர உணர்ந்து கொண்டான் என்று ஒருவரும் உறுதிபாகக் கூறிவிட முடியாது. ஆயினும், சில வருஷத்தைய அனுபவ த்தைக் கொண்டு அவன் பார்த்ததையும் பார்க்காததையும் யூகமாக நினைத்து அபிப்பிராயப்பட்டுச் சொல்வதைத் தவிர அனுபவப் பூர்வமாகக் கண்டு உணர்ந்து சொல்வது இல்லை என்பதை அறிஞர்களும் நிபுணர்களும் நன்கு தெரிந்திருக்கி றார்கள். ஆதலால், சயன்ஸ் வாதிகள் சில சொற்ப கால அனு பவத்தைக் கொண்டு எதிர்காலத்தில்நடக்கும் விஷயங் களைப் பற்றி யூகமாக மதித்துக் கூறும் அபிப்பிராயங்களை அறிவுடைய மக்கள் எவ்வளவு தூரம் மதிப்பார்கள் என்பதை வாசக நேயர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெளிக்குத் தோன்றுகிற ஒரு காரணத்தினால் ஒரு வஸ்து உண்டாகுவதாக வைத்துக்கொள்ளுவோம். இப்படிப்பட்ட வஸ்துஉண்டாகுவத ற்குவெளிக்குத் தோன்றுகிற அந்த ஒரு காரணத்தைத் தவிர, அவ்வஸ்துவின் உற்பத்திக்கு அந்தரங்கத்தில் வேறு ஒரு கார ணமும் இல்லவே இல்லை என்று உறுதியாகக் கூற முடியுமா? நாம் ஒரு வஸ்துவின் உற்பத்திக்கு ஒன்றைக் காரணமாகக் கருதி இருக்கலாம். அந்தரங்கத்தில் நமக்குத் தெரியாத வேறு ஒரு காரணத்தினால் அவ்வஸ்து உண்டாகி இருக்கக் கூடும். பின்னர், வெளித் தோற்றத்தில் நாம் நினைத்திருந்த காரணத் தினால் அவ்வஸ்து உண்டாகாமல் நமக்குத் தெரியாமல் இரு ந்த அகமிய காரணத்தினால் அது உற்பத்தியாகும் போது

அதனை இயற்கைச் சட்டத்துக்கு மாறானது என்று நாம் நினைத்துக் கொள்கிறோம். ஆனால், உண்மையில் அது இயற்கைச் சட்டத்துக்கு உட்பட்டுத்தான் உற்பத்தியாகி இருக்கிறது. ஆதலால், இயற்கைக்கு மாறானது என்று அதனை நாம் கூற முடியாது.

வழக்கமாகவுள்ள காரணங்களால் நிகழமுடியாத ஒருகாரியம் மின்சார சக்தியைப்பார்க்கினும் எத்தனையோமடங்குஅதிக பலம் பொருந்திய நபிமார்களின் ஆத்ம சக்தியின் பலத்தினால் நிகழ்ந்து விடக்கூடும். அல்லது இந்தக் காரணங்களை எல்லாம் சிருஷ்டித்திருப்பவனாகிய முஸப்பிபுல்அஸ்பாபாகிய அல்லாஹு சுபுஹானஹு வதஆலாவானவன் எவ்விதக் காரணமுமில்லாமலே அக்காரியத்தை நிகழும்படி செய்து விடவும் கூடும். இம்மாதிரி இறைவன் செய்வது முடியாத காரியமுமன்று. ஆதலால், எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சயன்சு வாதிகள் கூறுகிற காரணமே இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. இவர்கள் கூறுகிற புறக் காரணங்களைக் கொண்டும், இவையல்லாத வேறு அகக்காரணக்களைக் கொண்டும், எவ்விதக் காரணமில்லாமலும் எக்காரியமும் நிகழலாமென்பது உண்மை. ஆகவே, வழக்கமாகவுள்ள புறக்காரணங்களைக் கொண்டு காரியங்கள் நிகழ்வதுதான் இயற்கைச் சட்டம் என்று சயன்சு வாதிகள் கருதிக் கொண்டிருப்பது சுத்தத் தவறாகும்.

பித்ரத்தும் நேச்சரும் ஒன்றா?

திரு குர்ஆனிலும், ஹதீஸிலும் வந்திருக்கிற பித்ரத் என்றபதத்தை இந்த சயன்சுவாதிகள் தாங்களாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிற 'இயற்கை' என்று கருதிக் கொண்டிருப்பதும் தவறாகும். ஒரு வஸ்துவை எந்த இனத்தில் எந்த வடிவத்தில் இறைவன் சிருஷ்டித்திருக்கிறானோ, அதன் பேரிலேயே அது இருப்பதற்குத்தான் பித்ரத் என்று பெயர். அதாவது பறவை ஐவாய் மிருகமாகி விடமாட்டாது, நக்ஷத்திரம் கிரகம் ஆகியவைகள் கல்லாகவும், மலையாகவும் ஆகி

விட முடியாது. இதுபோல ஒருவருடைய சிருஷ்டியில் ஆதியிலேயே இறைவன் துர்பாக்கியத்தை ஏற்படுத்தி இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம், அப்படிப்பட்டவன் நற் பாக்கிய வானுகான் என்பது தான் பித்ரத் என்றபதத்தின் கருத்தாகும். "அவரை விதைத்தால் துவரை விளையுமா" என்ற பழமொழியை இதற்கு உவமையாகக் கூறுவது பொருந்தும் என்று நினைக்கிறோம். இவ்விதக் கருத்தில் தான் ஹதீது ஷரீபும் வந்திருக்கிறது. எனவே, பித்ரத் என்ற இவ்வரபிப்பதத்தை தத்துவ சாஸ்திரிகள் ஏற்படுத்தி வைத்திருக்கிற நேச்சர் என்று நினைத்துக் கொண்டு அறை குறை சயன்சு வாதிகள் வாதம் செய்து கொண்டிருப்பது சரியன்று. இதுவுமல்லாமல் நேச்சர் என்ற பதத்துக்கு இந்த சாஸ்திர வாதிகள் ஏகமனதான பரிபூரணமான லக்ஷணங் கூற இயலாமலிருப்பதையும் ஞாபக மூட்டுகிறோம்.

சயன்சு ஆராய்ச்சி முற்றுப் பெற்று விட்டதா?

இதல்லாமல் குறிப்பிட்ட ஒரு வஸ்துவுக்குக் குறிப்பிட்ட ஒரு தன்மை இருப்பதற்கு என்ன காரணம் என்பதை இந்த சயன்சினால் இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை. உதாரணமாக ரோஜா புஷ்பத்தில் நறுமணமும் அழகிய தோற்றமும் இருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் சண்பக மலரில் வேறு விதமான குளிர்ந்த வாடைஇருப்பதற்குக் காரணம் என்னவென்பதையும், சூரியனுக்கு உஷ்ண சக்தி ஏற்பட்டதற்குரிய காரணத்தையும், சந்திரனுக்குக் குளிர்ச்சி ஏற்பட்டற்தகுரிய காரணத்தையும் இந்த சயன்சு கண்டு பிடித்துக் கூறவில்லை. இவைகளிலுள்ள இந்தத் தன்மைகளுக்கு மாருக வேறு விதமான தன்மைகளை ஏன் உண்டாக்கவில்லை என்பதற்குரிய காரணத்தையும் கூற முடியவில்லை. இவ்விஷயங்களில் இந்த தத்துவ சாஸ்திரிகள் ஈடுபட்டு இவைகளுக்குரிய அசல் காரணங்களைக் கண்டு பிடிக்க முடியாமற் போனது மட்டுமில்லாமல் "எல்லாவற்றிற்கும் மேலில் ஏதோ ஒரு பிரம்மாண்டமான சக்தி

ஒன்று இருக்கிறது. அந்தச் சக்திதான் இவைகளை எல்லாம் இவ்வாறு ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறது'' என்ற முடிவுக்கு அவர்கள் வரவேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட சர்வ சக்தனை அவ்வல்லோன் மனிதர்கள் தாங்களாக நினைத்து கொண்டிருக்கிற புறக் காரணத்துக்கு மாறாக அவைகளை மாற்றி விடுதல் முடியாத காரியமா? என்பதை நம்மவர் கவனிக்க வேண்டும். அவ்வல்லோன் விரும்புவானாயின் எவ்விதக் காரணமுமின்றி சகலத்தையும் மாற்றிவிட அவனால் முடியுமென்பது திண்ணம்.

இந்தத் தத்துவ சாஸ்திரங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதும், இன்னமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதுமான எல்லா சங்கடங்களும் அல்லாஹு தஆலாவுக்கு உள்ள தத்துவங்களையும் வல்லமைகளையும் தங்களது யுக்திப்படிக்குத் தாங்களாக ஏற்படுத்திக் கொண்டு அதன்பேரில் தங்களுடைய சட்டங்களையும் ஆராய்ச்சிகளையும் செய்ய ஆரம்பித்ததன் பலனேயாகும். இரண்டாவதாக 'நபி' என்ற பதத்துக்கு இவர்கள் அர்த்தஞ் செய்து கொண்டிருப்பதைக் கவனிப்போம். இவர்களுடைய கருத்துப்படி 'நபி' என்பவர் சாமான்ய மனிதராகத்தானிருக்கிறார். ஆனால், அவருக்கு ஒரே ஒரு உணர்ச்சி மாத்திரம் தான் விசேஷமாக ஏற்பட்டிருக்கிறது. பைத்தியக்காரனுக்கும் நபி என்பவருக்கும் இடையில் இவர்களின் கருத்துப்படி சொற்ப வித்தியாசம்தான் இருக்கிறது அதாவது இவர்கள் கூறுகிற கருத்துப்படியுள்ள நபியானவர்தமது சமூக நன்மையைக் கருதி பொய்யுரைக்கலாம் என்று தோன்றுகிறது.

நபித்துவம் என்பதற்கு இம்மாதிரியான பொருள் கொண்டிருப்பவர்களிடம் வங்காளத்திலுதித்த ராம் மோகன ராய் என்பவரும், சீக்கியரின் தலைவரானகுரு நானக்கும், இவர்களைப் போன்ற இன்னும்பலரும் நபியாக இருக்கமுடியும்.இது போல்,பலர் எல்லா தேசங்களிலும் உதிக்கலாம். ஸ்கூல்களில் படிக்கிற பையன்களும் கூட இப்படிப்பட்ட 'நபி'கள் எழுதும்

புத்தகங்களில் நூற்றுக் கணக்கான திருத்தங்களைச் செய்ய முடியும்.

ஆனால் இஸ்லாம் மதத்தில் இறைவனுக்குச் சொல்லப் பட்ட லக்ஷணங்களும்வேறு; 'நபி' என்பவருக்குக் கொள்ளப் படும் கருத்துகளும் வேறு. இந்த அறைகுறை தத்துவ சாஸ்திரிகள் கூறும் கருத்துகளும் தாத்பரியங்களும் வேறு. ஆதலால், இவ்விரண்டுக்குமிடையில் வானத்துக்கும் பூமிக்கு முள்ளவித்தியாசமிருக்கிறது. இவர்களுக்கு இஸ்லாம் மதத்து டன் எவ்வித சம்பந்தமுமில்லை. ஆனால் இவர்கள் தங்களுடைய சுயநலத்துக்காக இஸ்லாம்மதத்தைச் சேர்ந்தவர்களென்று தங் களை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும், தத்துவ சாஸ்திரத்தில் பாண்டித்துவமுள்ள சாஸ்திரிகள் நபிமார்களால் அற்புதங்கள் நிகழுவதை அங்கீக ரிக்கின்றனர். ஆதலால், நபிமார்களின் அற்புதச் செய்கை களுக்கும், ஜால வித்தைக்காரர்கள் செய்யும் மாய வேலைகளு க்கு மிடையில் வித்தியாசமில்லை என்று நினைப்பது முழு மூடத்தனமாகும். பளிங்குக்கும் வைரத்துக்கு மிடையில் உள்ள வித்தியாசத்தைப் பட்டிக்காட்டி லுள்ளவர்கள் உணராம லிருப்பது போலவே அறைகுறையான சயன்சு வாதிகள் நபி மார்களின் அற்புதச் செய்கைகளுக்குப் செப்பிடு வித்தைக் காரர்களின் ஜால வித்தைக்கு மிடையில் உள்ள வித்தியாசத் தைத்தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள். ஆதலால், சயன்சு வாதிகள் என்று தங்களை நினைத்துக் கொண்டு முழு மூடத் தனமாகக் கூறுகிற இவர்களின் கூற்றைக் கவனிக்க வேண்டிய தின்று. யதார்த்தமாக தத்துவ சாஸ்திரத்தைப் பயின்று அதில் ஆராய்ச்சி செய்த நிபுணர்கள் நபிமார்களால் நிகழ்ந்த அற்புதங்களை ஒப்புக் கொள்கிறார்கள் என்பதையும் திரு குர்ஆனில் கூறப்பட்ட நபிமார்களின் அற்புதச் செய்கை களுக்கு எவ்விதக் கூடார்த்தமும் செய்யாமல் அவைகளை அப் படியே அங்கீகரிக்கிறார்கள் என்பதையும் இவர்கள் உணர்வார் களாக.

பதினாறாவது ஆக்ஷேபனை

திருகுர்ஆன் சட்டங்கள் மாற்றப்பட்டனவா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத்து வந்த ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சில சட்டங்கள் நாயகம் (ஸல்) அவர்களின் பிற்காலத்தில் மாற்றப் பட்டிருக்கின்றன என்றும் இவ்விதமான சட்ட திட்டங்கள் திருகுர்ஆனில் சொல்லப்பட்டிருக்கின்றன என்றும் முஸ்லிம் கள் கூறுகிறார்கள். முஸ்லிம்கள் கூறுகிற இவ்விபரங்களை இஸ்லாத்தின் விரோதிகள் சரியாக உணர்ந்து கொள்ளாமல் திருகுர்ஆனின்மீதும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீதும் அல்லாஹுதஆலாவின்மீதும் ஆக்ஷேபனைகள் செய்ய இதை ஒரு சந்தர்ப்பமாக உபயோகப் படுத்துகின்றனர். இது சம் பந்தமாக அவர்கள் செய்யும் ஆக்ஷேபனைகளை அவர்கள் மிக வும் முக்கியமானதாகவும் கருதுகிறார்கள்.

மார்க்கக் கல்வியில் போதிய பாண்டித்துவமில்லாத சில முஸ்லிம் சகோதரர்கள் இவைகளைக் கேட்டு பிரமிப்படைகின் றனர். ஆதலால், இவ்விஷயத்தைச் சிறிது விவரமாக எழுது வாம். இது சம்பந்தமாக பிற மதத்தார் எழுப்பும் ஆக்ஷேபனை இருவிதமாக விருப்பதால் அவை ஒவ்வொன்றிற்கும் தனித் தனியே பதில் கூறுவாம்.

முதலாவது வகை ஆக்ஷேபனை

"திருகுர்ஆனில் முதலில் கூறப்பட்ட சட்டம் பின்னர் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறதென்று முஸ்லிம்களே கூறி யிருக்கிறார்கள். ஆதலால், முஸ்லிம்களின் கடவுளுக்கு தீர்க்காலோசனை இல்லைபோலிருக்கிறது. அதனால்தான் எவ் வித ஆலோசனையுமின்றி முதலில் ஒரு சட்டத்தை இயற்றி விட்டு அந்த சட்டத்தால் உத்தேச பலன் ஏற்படாததைக்கண்டு அதை மாற்றி வேறு புதிய சட்டம் செய்யவேண்டிய அவசியம் முஸ்லிம்களின் கடவுளுக்கு ஏற்பட்டதுபோலும். திருகுர்

ஆனில் இவ்விதமாக மூன்னுக்குப் பின் வித்தியாசமான சட்டங்கள் இருப்பது ஒன்றே திருகுர்ஆன் சத்திய வேதமன்று என்பதற்கடையாளமாக இருக்கிறது."

சமாதானம்

இந்த ஆக்ஷேபனையில் கிறிஸ்துவர்கள் மட்டு மில்லாமல் ஆரிய சமாஜிகளும் கூடச் சேர்ந்து கொள்ளுகின்றனர். இந்த ஆக்ஷேபனையை இன்னும் அதிகக் கேவலமான முறையில் அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். அல்லாஹுதஆலாவின் பரிசுத்தத் தன்மையை இவ்வாட்சேபனை குலைக்கக் கூடியதாக இருக்கிறது. ஆதலால், இதற்குரிய சமாதானத்தை முஸ்லிம்கள் நன்கு கவனித்துப் படித்து உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

திரு குர்ஆனில் நாஸிக் மன்ஸூக் இருக்கிறது என்று முஸ்லிம்கள் கூறுவதை ஆதாரமாகக் கொண்டுதான் பிற மதத்தார் ஆக்ஷேபனை செய்கிறார்கள். நாஸிக் மன்ஸூக் என்ற பதத்துக்குரிய சரியான தாத்பரியத்தை அவர்கள் உணர்ந்து கொள்ளாததுதான் இவ்வாட்சேபனைக்கு முக்கிய காரணமாகும். இந்தப் பதங்களுக்குள்ள சரியான தாத்பரியத்தை அவர்கள் உணர்ந்திருந்தால் இந்த ஆக்ஷேபனை உண்டாகவே இடமில்லை. அதாவது, ஒரு விஷயம் தெரியாமலிருக்கும்போது ஒரு சட்டத்தைக் கூறி விட்டு, அப்பால் விஷயத்தை நன்குணர்ந்த பின், முன்னர் செய்த சட்டத்தை மாற்றி வேறு புதிய சட்டம் இயற்றுவது ஒரு வகை. இதற்கு அறபியில் பத்லு என்று பெயர். இவ்வித முறையில் திரு குர்ஆனில் சட்டம் செய்திருந்தால் பிற மதத்தார் செய்யும் ஆக்ஷேபனை சரியானது என்றே கூறலாம். ஆயினும், இந்த முறையான சட்டம் திரு குர்ஆனில் இல்லாததால் இந்த ஆக்ஷேபனை உண்டாவதற்கு இடமில்லை. ஆனால், திரு குர்ஆனில் சொல்லப்பட்ட 'நாஸிக்' என்ற பதத்துக்கு என்ன அர்த்தம் என்ற கேள்வி இதிலிருந்து உண்டாகலாம். ஆதலின், அதைப் பற்றிச் சிறிது விவரிப்பாம்.

ஒரு வைத்தியர் ஒரு வியாதியஸ்தனுக்கு ஒரு மருந்தைப் பிரயோகம் செய்கிறார். இரண்டு மூன்று நாட்கள் வரை அந்த நோயாளி அம்மருந்தை உட்கொண்டு நோயின் தன்மையில் சில மாறுதலேற்பட்ட பின் அவ்வைத்தியர் அந்த நோயாளிக்குப் பிரயோகம் செய்த மருந்தை நிறுத்தி விட்டு வேறு புதிய மருந்தைப் பிரயோகம் செய்கிறார். இவ்விதமாக இறைவன் முதலில் ஒரு சட்டத்தை இயற்றுகிறான். அச்சட்டம் அமலில் இருக்கிறது, அச்சட்டத்தைக் கடைபிடித்தொழுகியதால் ஜனங்களுக்கிருந்தஆத்ம வியாதியில் மாறுதலேற்பட்டது. பின்னர், அவ்வாத்ம வியாதியிலேற்பட்ட மாறுதலுக் கேற்ப, இறைவன் வேறு புதிய சட்டத்தை வெளியாக்கினான். இவ்விதமுறையில் சட்டத்தில் மாறுதல் செய்வதற்குத் தான் அறபிப்பாஷையில் நஸ்கு என்ற பதம் உபயோகிக்கப்படுகிறது. இவ்விதமான மாறுதலால், இறைவனுக்கு முன்னர் ஒரு விஷயம் தெரியாமலிருந்து அப்பால் அவ்விஷயம் தெரிந்ததற்காகவோ, அல்லது தீர்க்காலோசனை செய்யாமல் தவறுதலாகவோ இறைவன் சட்டத்தை ஏற்படுத்தி விட்டுப் பின்னர் தன்னுடைய தவறை உணர்ந்து அதற்குத் தக்கவாறு வேறு நல்ல சட்டத்தை ஏற்படுத்தியதாகவோ கூற முடியாது. ஏனெனில், நோயாளியின் வியாதி இன்னதென்பதையும், அவ்வியாதியைப் போக்குவதற்கு இன்னின்ன மருந்தை இன்னின்ன விதமாகப் பிரயோகம் செய்ய வேண்டுமென்பதையும் வைத்தியன் முதலில் உணர்ந்து, மருந்தைப் பிரயோகம் செய்வது போல், சகலவற்றையும் உணர்ந்தவனான அல்லாஹு சுபுஹானஹு வதஆலா மக்களுக்கிருந்த ஆத்ம வியாதியை நன்கு உணர்ந்து இன்னின்ன சட்டங்களின் மூலமாக அவ்வியாதியைப் போக்க வேண்டுமென்று முறைப்படி சட்டங்களை இயற்றி இருக்கிறான். ஆதலால், மக்களின் ஆத்ம வியாதியையும், நிலைமையையும் இறைவன் நன்குணர்ந்திருக்கிறான் என்பது நன்கு தெரிய வருகிறது.

தவிரவும், நோயாளிக்கு ஏற்பட்ட வியாதியின் தன்மையை உணர்ந்து அவ்வக்காலத்தில் நிலைமைக்குத் தக்கவாறு

உபயோகிக்காமல் ஒரேவிதமான மருந்தை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை கொடுத்து வந்தால் அப்படிப் பட்ட வைத்தியனை வைத்திய சாஸ்திரம் தெரிந்த திறமையான வைத்தியன் என்று சொல்லாமல் முட்டாள் வைத்தியன், அரை குறை வைத்தியன் என்று சாமான்ய ஜனங்களும் கூறுவர். இது போலவே, இறைவனிடும் சட்டங்களும் கால மாறுபாட்டுக்கும் மக்கள் நிலைமைக்கும் தக்கவாறு வித்தியாசப் பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு சட்டங்களை மாற்றுமல் ஒரே விதமான சட்டத்தையே கடைசிவரை வைத்துக் கொண்டிருப்பதுதான் கேள்விக்கு இடங் கொடுப்பதாக இருக்கிறது. எவ்வாறெனில், மனிதனின் உற்பத்தி முதல் இன்றைய தினம் வரை அவனின் கல்வி, அறிவு, உணர்ச்சி, நாகரீகம் ஆகியவைகளும், கால நிலைமையும் சிறிது கூட மாறுபாடடையாமல் ஒரே விதமாக இருக்கிறது என்று ஒருவரும் கூறமாட்டார்கள். இதில் அநேகம் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன என்பது உலகறிந்த விஷயம். இவ்வித நிலைமையில் கல்வி நாகரீகம் முதலியவைகள் இல்லாதவர்களாக இருந்த சமயத்தில் ஒரு சமூகத்தாருக்கு விதித்த சட்டத்தையே அச்சமூகத்தார் அறிவிலும் நாகரீகத்திலும் முதிர்ந்த பின்னர் அமல் நடத்துவது பொருத்தமாக இருக்குமா? ஒருபோதும் பொருத்தமாக இருக்காது. இதனால்தான் இறைவன் மனிதனின் உற்பத்தி காலம் தொடுத்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலம்வரை இவ்வுலகில் அநேகம் நபிமார்களை அடிக்கடி உற்பத்தி செய்து, அவர்களுக்கு வஹியை அனுப்பிக் கொண்டே இருந்தான்.

ஆரியர்கள் கூறுவதுபோல் அனைத்தும் அறிந்தவனை அல்லாஹு தஆலா மனிதன் உற்பத்தியான ஆரம்பக் காலத்திலேயே அவசியமில்லாத சமயத்தில் நான்கு ரிஷிகளை உற்பத்தி செய்து நான்கு வேதங்களை உற்பத்தி செய்து விட்டான் என்று கருதுவது தான் தவறாகும். இந்த வேதங்களில் மனிதனின் நற்பாக்கியத்தையும், துர்பாக்கியத்தையும்,

பற்றி எவ்விதத் தகவலுமில்லை. ஹலால், ஹராம் ஆகியவை களைப்பற்றியோ கொள்கைகளைப் பற்றியோ வணக்கங்களைப் பற்றியோ எவ்வித விபரமும் கிடையாது. அவைகளை அனுஷ்டிக்க வேண்டிய முறைகளைப் பற்றிய திட்டமும் இல்லை. இதுவுமன்றி, அவ்வேதங்கள் ஒன்றுக்கொன்று வியாக்யானமாகவோ, அனுசரணையாகவோ இல்லை. அவைகளில் சொல்லப்பட்ட சுலோகங்களின் ஒழுங்கு முறையும் சரியாக இல்லை. இவ்வித நிலைமையில் உலகில் மனிதன் பெருகி, அவனுக்கேற்படுகிற புதிய புதிய அவசியங்களுக்கு இந்தப் பழைய சட்ட திட்டங்கள் எவ்விதத்திலும் பிரயோஜனப்படுவனவாக இல்லை. இதிலுள்ள சட்டங்களை மறுபடியும் அனுஷ்டித்துக் கொண்டிருப்பது இற்றை நாளில் பொருத்தமானதாகத் தோன்றுது. ஆதலால், ஆரிய சமாஜிகள் அவ்வேதங்களின் சுலோகங்களுக்கு மிகவும் தூரமான கூடார்த்தங்களைக் கூற வேண்டியதேற்பட்டிருக்கிறது. சர்வசக்தனும் சர்வக்ஞனும் கருணையாளனும் அருளாளனுமான அல்லாஹு சுபுஹான ஹுவ தஆலாவின் தன்மை ஆரியர்களின் கூற்றுப்படி இவ்விதமாக ஏன் இருக்க வேண்டும்? என்பதுதான் நமக்குப் புலப்படவில்லை.

இரண்டாவது வகை ஆக்ஷேபனை

"முற்காலத்து வேதங்களான தௌராத், ஸபூர், இஞ்சீல் முதலிய வேதங்களைத் திரு குர்ஆன் நஸ்குசெய்து மாற்றி விட்டது என்று முஸ்லிம்கள் கூறுகிறார்கள். நபிமார்களின் மூலமாக வந்த தெய்வச் சட்டங்கள் மாற்றப்படக் கூடியனவாக இருக்கின்றனவா?

"வானம் பூமி ஆகியவைகள் அழிந்துபோகும். ஆனால், தௌராத்திலுள்ள ஒரு அக்ஷரமும் அழிந்து போகாது, நான் தௌராத்தைப் பூர்த்தி செய்யவே வந்தேனேயன்றி அதை அழிப்பதற்காக வரவில்லை"

என்று இயேசுகிறிஸ்து கூறினர். ஆனல் அறபி நபியானவர் எல்லாவற்றையும் அழிப்பதற்காகவா வந்திருக்கிறார்?''

சமாதானம்

இந்தக் கேள்வியில் கிறிஸ்தவர்களும் யூதர்களும் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள். ஆரிய சமாஜிகளுக்கு இதில் சம்மந்தமில்லை. இவர்களும் "நஸ்கு" என்ற அறபிப் பதத்தின் உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ளாமல் ஆக்ஷேபனை செய்திருக்கிறார்கள். இக்கேள்வியைக் கேட்பதற்கு முன் இவர்கள் உஸூல் (பிரதம சட்டங்)களை விவரிக்கும் கிரந்தங்களிலொன்றை யேனும் பார்த்தோ அல்லது மார்க்கச் சட்டங்களைப்படித்த ஒரு முஸ்லிம் இடத்தில் இதை விசாரித்தோ இருப்பார்களாயின் இவ்வாட்சேபனையைக் கூற வேண்டிய அவசியமுமேற்பட்டிருக்காது. இதேமாதிரி ஆக்ஷேபனையை கிறிஸ்துவ சகோதரர்களிடம் நாம் மடக்கிக் கேட்கவேண்டிய சிரமமும் ஏற்பட்டிருக்காது. இவர்கள் கேள்வி கேட்பதன் நோக்கம் தங்களுடைய கேள்வியால் முஸ்லிம்கள் திகைப்படைய வேண்டும் என்பதோ அல்லது விஷயங்களை யுணர வேண்டுமென்பதோ இல்லை. ஏதேனும் ஒன்றை ஆக்ஷேபனையாகக் கூறினல் போதும் என்ற நோக்கத்தைத் தவிர வேறு நோக்கம் அவர்களுக்கு இல்லை.

அல்லாஹு தஆலாவையும், அவனுடைய தன்மைகளையும் பற்றிய ஞான அறிவுகளிலும், முற்காலத்து நபிமார்களைப் பற்றிய சமாசாரங்களிலும், நியாயத் தீர்ப்பு நாள் முதலியவைகள் சம்பந்தப்பட்டவைகளிலும் எப்பொழுதும் எந்த வேதத்திலும் மாறுதல் ஏற்படவே இல்லை. இவைகளில் 'நஸ்கு' ஏற்படுவதற்கு இடமே இல்லை. இம்மாதிரியான 'நஸ்கு' ஏற்பட்டதாக முஸ்லிம்கள் கூறவு மில்லை. இவ்விஷயத்தில் தௌராத் மாற்றப் படவுமில்லை; இதர வேதங்களெதுவும் மாற்றப் படவுமில்லை. கிரியை சம்மந்தமான சட்டங்களில் மாத்திரம் 'நஸ்கு' (மாற்றம்) ஏற்பட்டிருக்கிறது.

கிரியை சம்மந்தப்பட்ட சட்டங்களும் இரண்டு வகைப் படும். முதலாவது வகை:—உஸூல் அதாவது அஸ்திவார மான சட்டம். இறைவனை வணங்குதல், தர்மஞ் செய்தல், நோன்பு நோற்றல், இச்சைகளை விட்டுத் தன்னைக் காத்தல், நற்குணங்கள், விபசாரம், கொலை, அக்கிரமம், பொய், விக்கி ரக ஆராதனை போன்ற செய்கைகள் சம்மந்தப்பட்ட விதி விலக் குகள் முதலியவைகள் இம் மூலச்சட்டங்களிற் சம்மந்தப்பட்ட னவா யிருக்கின்றன. இவைகளில் எவ்விதமான மாறுதல்களு மில்லை. இவைகளில் மாறுன விதிகள் செய்யப்பட்டதாக முஸ் லிம்கள் சொல்லவு மில்லை. இவ்விஷயங்களில் எல்லா நபிமார்க ளும் ஏகோபித்த அபிப்பிராய முள்ளவர்களா யிருக்கிறார்கள். எல்லா நபிமார்களுக்கும் அனுப்பப்பட்ட வேதங்கள் ஆதி முதல் ஒரேவிதமான அபிப்பிராயத்தையே கூறி வந்திருக்கின் றன. யாவருக்கும் ஒரே வழியும், ஒரே மார்க்கமுமே இருந்து வருகிறது.

"நூஹு(நபி அவர்களு)க்கு நாம் விதித்ததையும், (நபியே) உமக்கு வஹி அனுப்பப்பட்டதையும், இப்ராஹீ முக்கும், மூஸாவுக்கும். ஈஸாவுக்கும் "நீங்கள் மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், அதில் நீங்கள் பிரிந்துவிடாதீர்கள்'' என்று நாம் வஸிய்யத்துச் செய்ததையும் உங்களுக்கு மார்க்க மாக் கப் பட்டிருக்கிறது (ஸூரத்து ஆஷூரா.)

இவர்களை அல்லாஹு நேர்வழி காட்டி இருக்கிறான் இவர்களுடையநேர்வழியைக்கொண்டு நீர்பின்பற்றும்'' (ஸூரா த்துல் அன்ஆம்)

என்று இறைவன் கூறி இருக்கிறான்.

இரண்டாவது வகை:— சில்லரைச் சட்டவிதிகளில் காலத்துக்கும், அவசியத்துக்கும், மக்கள் நிலைமைக்கும் தக்கவாறு மாறுதல்கள் செய்யப் பட்டிருக்கின்றன. உதார ணத்துக்காக தொழுகை அதாவது வணக்கத்தை எடுத்துக் கொள்வோம். இந்தத் தொழுகையானது ஒரு நபியு

டைய காலத்தில் வெறும் பிரார்த்தனையினாலும், தக்பீர் தஹ்லீல் ஆகிய ஜபங்களினாலும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. கடைசிக் காலத்து நபியான ஸெய்யிதுல் கௌனைன் அவர்கள் காலத்தில் ருக்கூஉ, ஸுஜூது முதலிய செய்கைகள் ருக்னுகளாகவும் முக்கிய கடமைகளாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. "நான் தௌராத்தை மாற்றுவதற்காக வரவில்லை" என்று ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கூறியது முதலாவது வகையான மூலாதாரச் சட்டங்களைப்பற்றியதாகும். இவ்விஷயம் திரு குர்ஆனிலும் இருக்கத்தான் செய்கிறது. உப விதிகளில் ஏற்பட்ட மாறுதல்களை எந்த யூதரும் கிறிஸ்தவரும்—அவர் உண்மையாகவே தௌராத்தையும் இஞ்சீலையும் விசுவாசிப்பவராக இருப்பின்—ஒப்புக்கொள்ளாமலிரார். யூத கிறிஸ்துவ வேதங்களிலும் கூட உப விதிகளில் சில மாறுதல் நிகழ்ந்திருக்கின்றன.

ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் சகோதர சகோதரிகளை மணந்து கொள்வதற்கு மார்க்கச் சட்டம் இடம் கொடுத்தது. மேலும் ஹஜ்றத் இப்றாஹீம் நபியவர்களுக்கு அவரது மனைவியான பீபீ ஸாரா, தகப்பன் வழிச் சகோதரியாக இருந்தார். பைபிள் பழைய ஏற்பாடு ஆதியாகமம் அதிகாரம் 20, வசனம் 12 ல்,

"அவள் என் சகோதரி என்பதும் மெய்தான்; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி, என் தாய்க்குக் குமாரத்தியல்ல; அவள் எனக்கு மனைவியானாள்."
என்று கூறப்பட்டிருக்கிறது.

தகப்பனுக்கு மாத்திரம் பிறந்த சகோதரியை மணந்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்த இந்தச் சட்டம் பின்னர், ஹஜறத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் மாற்றப்பட்டு விட்டது. இவ்வாறு செய்தால் அது வியபிசாரக் குற்றம் என்பதாக நிர்ணயமாயிற்று. பைபிள் பழைய ஏற்பாடு லேவியராகமம். அதிகாரம் 18. வசனம்.

9. "உன் தகப்பனுக்காவது உன் தாய்க்காவது வீட்டிலாகிலும் புறத்திலாகிலும் பிறந்த குமாரத்தியாகிய உன் சகோதரியை நிர்வாணமாக்கலாகாது."
என்று கூறப்பட்டிருக்கிறது.

நூஹு அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் பூமியின் மீது நடக்கிற எல்லாப் பிராணிகளும் புசிக்க அனுமதிக்கப் பட்டிருந்தன என்பது பழைய ஏற்பாட்டில் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆதியாகமம். அதிகாரம் 9-வசனம்.

2. உங்களைப் பற்றியபயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும் ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும். பூமியிலே நடமாடுகிற யாவும் சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும் உங்களுக்குக் கையளிக்கப்பட்டன.

3. நடமாடுகிற ஜீவ ஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்ததுபோல், அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்.

என்று கூறப்பட்டிருக்கிறது.

ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் இம் மிருகங்களிலனேகம் ஹறுமாக்கப்பட்டுவிட்டன. இதன் விபரம் பழைய ஏற்பாடு, லேவியராகமம், அதிகாரம் 11ல் கூறப் பட்டிருக்கிறது.

(2) நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கவேண்டிய ஜீவ ஜந்துக்கள் யாதெனில்,

(7) பன்றியின் குளம்பு விரி குளம்பும் இரண்டாகப் பிரிந்ததுமாயிருந்தும், அசை போடாது. அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்.

(8) இவைகளின் மாமிசத்தைப் புசிக்கவும், இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம்; இவைகள் உங்களுக்குத் தீட்டா யிருக்கக் கடவது.''

என்றும் எழுதி யிருக்கிறது. இதிலிருந்து பன்றியின் மாமிசத்தை புசிக்கக் கூடாது என்று தௌராத் வேதம் கூடக் கட்டளை யிட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள லாம்.

ஹஜ்றத் யாகூப் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் ஒரே தாய்க்கும், தகப்பனுக்கும் பிறந்த இரண்டு சகோதரிகளை விவாகம் செய்து ஏககாலத்தில் மனைவிகளாக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாடு, ஆதியாகமம், அதிகாரம் 29ல் ஹஜ்றத் யாகூப் அலைஹிஸ்ஸலாமவர்கள் ராகேல், லேயாள் என்ற இரு சகோதரிகளை மணம் செய்து ஏககாலத்தில் மனைவிகளாக வைத்திருந்த விபரம் வசனம் 25 முதல் 30 முடிய சொல்லப் பட்டிருக்கிறது. பின்னர், இந்தச் சட்டம் ஹஜ்றத் மூஸா நபி யவர்கள் காலத்தில் மாற்றப்பட்டு விட்டது. பைபிள் பழைய ஏற்பாடு, லேவியராகமம், அதிகாரம் 18, வசனம் 18 ல்,

"உன் மனைவி உயிரோடிருக்கையில், அவைகளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும் பொருட்டு அவளை விவாகம் பண்ணலாகாது'' என்று எழுதப் பட்டிருக்கிறது.

ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் காலத்தில் அநேகம் பிராணிகளின் மாமிசங்களை அருந்துவது விலக்கலாக்கப்பட்டிருந்தது. விருத்த சேதனம் செய்து கொள்ளல், சப்து நாளைக் கௌரவித்தல் முதலியவைகள் கடமையாகவிதிக்கப்பட்டிருந்தன. இவைகளைப்பற்றி அதிகம்தாக்கீதுசெய்யப்பட்டிருந்தது. இவைகள் நித்திய கடமையானவைகளாகவும் ஏற்படுத்தப் பட்டிருந்தன. ஆனால், ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் ஷரீஅத் முழுவதையும் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலா

மவர்களின் சிஷ்யர்களான ஹவாரீயீன்கள் முற்றிலும் மாற்றி விட்டார்கள். விக்கிரகங்களுக்குப் பலியிடப்பட்டவை, உதிரம், குரல்வளை நெறிந்து செத்தவை, வியபிசாரம் ஆகிய நான்கு விதிகள் மட்டிலும் எஞ்சி இருந்தன. சில தினங்களுக்குப் பின்னர் அப்போஸ்தலராகிய பவுல் இவைகளில் வியபிசாரம் ஒன்றைத் தவிர பாக்கி மூன்றையும் மாற்றி விட்டார். பின்னர் வியபிசாரம் செய்தவருக்கு இன்ன தண்டனை என்று நிர்ணயமும் செய்யாமல் விட்டு விட்டதால் அதுவும்ஒரு வகையில் அனுமதி யளிப்பதே போலாகி விட்டது. இதுவுமல்லாமல் பழைய ஏற்பாடு என்று சொல்லப்படுகிற ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் தெளராத்தை அப்போஸ்தலர் அடியுடன் பிரயோஜன மற்றதாக ஆக்கிவிட்டார். இதுவுமல்லாமல் புரோட்டஸ்டன்ட் வகுப்பின் தலைவரான மார்டின் லூத்தர் என்பவர் ஷரீஅத்துக்குக் கட்டுப்படாமலிருக்கவும் கெட்ட செய்கை செய்யவும் கூட இடங்கொடுத்து யாவருக்கும் பாப மன்னிப்பளிக்கப்படுவதாகவும் கூறி இருக்கிறார்.

கிறிஸ்துவ சகோதரர்கள் மீது இவ்விதமான ஆக்ஷேபனைகளைக் கூறும்போது அவர்களுக்கு மறு உத்தரம் கொடுக்க வழியில்லாமற் போவதால் போலிக் காரணங்களைக் கூற ஆரம்பித்து விடுகிறார்கள். அதாவது ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் வெளிக்கிரியை சம்மந்தப்பட்ட மார்க்கமான்து ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் வருகையால் அனுஷ்டிக்கப்படவேண்டிய அவசியமில்லாமலாகிவிட்டது. ஆனல் கொள்கை சம்மந்தமான ஷரீஅத்து அதாவது ஹஜ்றத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாமவர்களைக் கர்த்தராகவும், கர்த்தரின் புதல்வராகவும், உலகத்தின் பாபங்களுககுப் பரிகாரமாகவும் இருக்கிறார் என்று நம்பிக்கை கொள்ளவேண்டும் என்று வியாக்யானம் செய்ய முற்பட்டு விடுகிறார்கள். இம்மாதிரிதான் முஸ்லிம்களும் கூறுகிறார்கள். அதாவது முற்காலத்திலுள்ள ஷரீஅத்துகள் பெயருக்கு மாத்திரமே இருப்பதால் அவைகளைப் பின்பற்றி நடக்கவேண்டிய அவசியமில்லை என்று தான் முஸ்லிம்கள் கூறுகிறார்கள்.

முற்காலத்து மார்க்கங்கள் மாற்றப்பட்டுவிட்டன என்று முஸ்லிம்கள் கூறுகிறதற்கு இதுதான் பொருளாகும். கிறிஸ்துவர்களும் முஸ்லிம்களும் கூறுவதன் கருத்து ஒன்றுகத்தானிருக்கிறது. ஆனால் விஷயத்தை உணர்ந்து கொள்ளாமல் முஸ்லிம்கள் மீது அவர்கள் வீண் ஆக்ஷேபனையைக் கிளப்பி இருக்கின்றனர். உடனே முஸ்லிம்களும் அவர்கள் மீது ஆக்ஷேபனையைத் திருப்புகிறார்கள்.

நாஸிக், மன்ஸூக்

"ஒரு ஆயத்தை நாம் மாற்றி விடுவோமானால் அல்லது மறந்து போகும்படிச் செய்து விடுவோமாயின் அதைப் பார்க்கினும் சிறந்ததை நாம் கொண்டு வருவோம்" என்று திரு குர்ஆனில் சொல்லப்பட்ட வசனத்தை ஆதாரமாகக் கொண்டுதான் திரு குர்ஆனின் மீது இவ்வாக்ஷேபனையைக் கிளப்பி இருக்கின்றனர். திருக் குர்ஆனில் சொல்லப்பட்ட "ஆயத்" என்ற பதத்துக்குள்ள பொருளைச் சரியாக உணர்ந்திருந்தால் இவ்வித ஆக்ஷேபனையைச் செய்ய முன் வந்திருக்கவே மாட்டார்கள். திரு குர்ஆனில் கூறப்பட்ட இப்பதத்துக்கு மொழிபெயர்ப்புச் செய்பவர்கள் "வசனம்" என்று மொழிபெயர்த்து விடுகிறார்கள். இந்த மொழிபெயர்ப்பைப் பிற மதத்தார் பார்க்க நேரிடுவதால் தான் இவ்விதமான ஆக்ஷேபனை செய்ய நேரிடுகிறது. 'ஆயத்' என்ற பதத்துக்கு 'வசனம்' என்று மொழி பெயர்ப்புச் செய்யாமல் "திருஷ்டாந்தம்" என்று மொழி பெயர்ப்புச் செய்திருந்தால் இவ்விதமான ஆக்ஷேபனை செய்யஇடமேற்பட்டிராது. ஆனால், 'ஆயத்' என்ற பதத்துக்கு வசனம் என்றும் திருஷ்டாந்தம் என்றும் இரண்டு விதமான பொருள் இருப்பதால் பிற மதத்தார் அறியாமல் ஆக்ஷேபனை செய்வார்கள் என்பதற்காக ஒரு பொருளை விட்டு விட்டு இன்னொரு பொருளை மாத்திரம் குறிப்பிடுவதென்றால் அது இறுதியில் கிறிஸ்துவ சகோதரர்கள் பைபிளின் உரையில் செய்யும் மாறுபாடுகளைப் போல் பற்பலவிதமான கருத்துகளைக் கொண்ட திரு குர்ஆன்

மொழிப்பெயர்ப்புகள் பிரசுரமாக வேண்டியதேற்படும். ஆதலால், இப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் வசனம் என்றோ, திருஷ்டாந்தம் என்றோ பொருள் செய்யாமல் 'ஆயத்' என்ற அறபிப் பதத்தையே மொழி பெயர்ப்புகளிலும் கொண்டு வந்து அவைகளுக்கடியில் அவைகளைப் பற்றிய குறிப்புகள் எழுதி விட்டால் பிறமதத்தார் அனுவசியமாகத் திரு குர்ஆனின் மீது ஆக்ஷேபணையைக் கிளப்பவோ அதற்கு முஸ்லிம்கள் சமாதானம் சொல்லவோ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. திரு குர்ஆனுக்கு மொழி பெயர்ப்புச் செய்ய முன்வரும் ஆசிரியர்களோ அல்லது அவைகள் பிரசுரம் செய்யப்படும் ஸ்தாபனங்களோ திரு குர்ஆனிலுள்ள அறபிப் பதங்களொவ்வொன்றிற்கும் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டும் என்ற சித்தாந்தங் கொண்டு வேலை செய்வதால்தான் இத்தகைய சங்கடங்கள் நேரிடுகின்றன. ஆகவே அவர்கள் இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதை உணர்வார்களாக.

இதன்றியும், இற்றை நாளில் பிற மதத்தவரல்லாத நம்மவரிலும் கூட சில விஷயமறியாத மக்கள் திருகுர்ஆனின் வழக்குகளிலும், அறபிப் பாஷையிலும் தக்க பயிற்சியின்றி இரண்டொரு அறபிப் புத்தகங்களைப் பயின்றதை மட்டிலும் ஆதாரமாகக் கொண்டு திரு குர்ஆனுக்கு உரை செய்ய முன் வந்து தங்களுக்கு அபாரக் கல்விஞானம் இருப்பதாக காட்டிக் கொள்ளுமுகத்தான் கிறிஸ்துவர்களின் இவ் வாக்ஷேபணையை வேறுவிதமான முறையில் கூறி அதற்குப் பதில் கூறுவதாகப் பாசாங்கு காட்டி திரு குர்ஆனில் 'நாஸிக் மன்ஸூக்' என்பஃதே இல்லையென்று முடிவு கூறவும், இதில் அனுவசியமான பிடிவாதம் காட்டி முஸ்லிம்களுக்குள் பிளவு உண்டாக்கவும் முனைந்து விடுகின்றனர். இப்படிப்பட்டவர்களால் முஸ்லிம் சமூகத்தில் பிளவு உண்டாகிறதேயன்றி மக்களுக்கு நன்மை எதுவும்உண்டாகிறதில்லை. இது சம்பந்தமாகமுஸ்லிம் வேத வியாக்யானிகளில் பற்பல விதமான அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பதுடன், அவர்களின் பலதிறப்பட்ட கருத்துகள்

சரியான அஸ்திவாரத்தில் இல்லை. முஸ்லிம் உலமாக்களிற் பெரும்பாலார் அதாவது ஜூம் ஹூர்கள் 'ஆயத்' என்ற இப்பதத்துக்கு வசனம் என்ற பொருளைச் செய்கிறார்கள். இதற்கு உதாரணமாகத் திரு குர்ஆனிலிருந்து 4-5 சட்டங்களை எடுத்துக் கூறுகிறார்கள். அவைகளாவன:—

1. இஸ்லாம் மதம் ஆரம்பமான காலத்திலேயே திருகுர்ஆனின் சட்டதிட்டங்கள் முற்றிலும் அருளப்படவில்லையாதலால் ஆரம்பகாலத்திலிருந்த சொற்ப முஸ்லிம்களின் பந்துக்கள் ஒரே மதக்கொள்கையுடையவர்களாக இல்லாமல் சிலர் இஸ்லாத்தைத் தழுவியும் சிலர் இஸ்லாத்தைத் தழுவாமலுமிருந்தார்கள். ஆதலின் வாரிசு பாத்தியதையைப் பற்றிய முடிவான சட்டம் பிறப்பிக்கப் படுவதற்கு முன் இறந்துபோன பல முஸ்லிம்களின் சொத்துக்களை எவ்விதம் பாசம் வைத்துக் கொள்ளவேண்டும் என்பது ஜனங்களுக்குத் தெரியாதிருந்ததால் மரித்துப்போகும் தருவாயிலுள்ளவர்கள் தங்கள் பெற்றோர்களும் மற்றோர்களும் தமது சொத்தை எவ்விதமாக அனுபவிக்கவேண்டும் என்பதைப் பற்றி வஸிய்யத்துச் செய்யவேண்டும் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் முஸ்லிம்களின் ஜனக் கூட்டம் பெருகி, வலிமை யடைந்து அவர்களின்பந்துக்களாகவுள்ளவர்களிற் பெரும்பாலர்இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களாக ஆன பின்னர் வாரிசுபாத்திய உரிமை யார் யாருக்கு எவ்வளவு இருக்கிறது என்ற சட்டம் பிறந்தது. இந்த இரண்டாவது சட்டம் முன்னர் இருந்த வஸிய்யத்துச் சட்டத்தை மாற்றி விட்டது என்று கருதுகின்றனர்.

2. ஒரு முஸ்லிம் இறந்துவிட்டால் அவருடைய மனைவிக்கு ஒருவருஷம் வரை அன்னவஸ்திரம் அளிக்கவேண்டும் என்ற கட்டளை முன்னர் கூறப்பட்டிருந்தது. பின்னர், இஸ்லாம்மதம் பெருகி வியாபித்த போது கணவனை இழந்து பரிதபிக்கும் ஸ்திரீக்கு நான்கு மாதம் 10 நாள் வரை அவளது

கணவனின் சொத்திலிருந்து அன்னவஸ்திரம் அளிக்கவேண்டுமென்று கட்டளை பிறந்தது.

3. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம்கள் சொற்பமாக இருந்ததாலும் விரோதிகள் முஸ்லிம்களை அற்பமாக மதித்ததாலும் தங்களைப் பார்க்கினும் பத்துமடங்கு அதிகமாகவுள்ள காபிரான விரோதிகளை எதிர்த்து யுத்தம் செய்ய இறைவன் கட்டளையிட்டிருந்தான். பின்னர் முஸ்லிம்களின் கூட்டம் அதிகமாகப் பெருகி, முஸ்லிம்களின் பலத்தைப் பற்றிய பீதி விரோதிகளின் மனதில் வேரூன்றி விட்டதால் தங்களைப் பார்க்கினும் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் விரோதிகளை எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டும் என்றும் இதற்குக் குறைவாகவுள்ள விரோதிகளைக் கண்டு முஸ்லிம்கள் பயங் கொள்ளலாகாதென்றும் இறைவன் கட்டளை பிறப்பித்தான்.

4. மதீனாவிலிருந்த முனாபிக்குகளான நயவஞ்சகர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உண்மை முஸ்லிம்கள் அதிகமாகப் பேசுவதற்கும் மார்க்கக் கட்டளைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கும் சந்தர்ப்பமளிக்கக் கூடாது என்ற குயுக்தி செய்து நாயகம் (ஸல்) அவர்களுடன் இரகசியம் பேசுவதாகக் கூறி நாயகமவர்களுடன் தனித்து வெகு நேரம் வீணைப் பேசிக் கொண்டிருக்கும் தொழிலை ஆரம்பித்திருந்தனர். இவர்களின் இச்சூழ்ச்சிக்கு இறைவன் இடங்கொடாமல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பேச வருபவர் ஸதக்காக் கொடுக்க வேண்டும் என்ற சட்டத்தைப் பிறப்பித்தான். நயவஞ்சகர்கள் ஸதக்காக் கொடுக்க விரும்பாததால் அவர்கள் அனாவசியமாக நாயகம் (ஸல்) அவர்களின் பிரசார வேலைக்கும், உண்மை முஸ்லிம்களான ஸஹாபிகள் மார்க்கக் கல்வி கற்றுக் கொள்வதற்கும் ஏற்பட்டுக் கொண்டிருந்த இடைஞ்சல் நிவர்த்தியாயின. ஆனால் முஸ்லிம்களின் கூட்டம் வலுவடைந்து பெருகிய பின் இச் சட்டம் அமல் நிறுத்தப்பட்டது.

இவ்விதமாகப் பல உதாரணங்களை ஜும்ஹூரான பெரும்பான்மை உலமாக்கள் எடுத்துக் கூறுகின்றனர். ஆனால், அபூ முஸ்லிம், இமாம் ராஜி போன்றவர்கள் இந்த வசனத்தின் பேரில் குயுக்தியாளர்கள் செய்யும் ஆக்ஷேபனையை யுணர்ந்து 'ஆயத்' என்ற பதத்துக்கு இந்த இடத்தில் 'திருஷ்டாந்தம்' என்ற பொருள் தான் மிகப் பொருத்தமானது என்றும், திரு குர்ஆனில் சொல்லப்பட்ட இவ்வாக்கியத்தில் "அல்" உபயோகிக்கப் பட்டிருப்பதால் திரு குர்ஆனின் சட்டங்கள் மாற்றப்பட்டு விட்டதாக நிச்சயமாகக் கூறுவதற்கில்லை என்றும் வாதிப்பதுடன் ஜும்ஹூர்கள் காட்டும் உதாரணங்கள் மாற்றப்பட்ட சட்டங்களாகா என்றும் கூறுகிறார்கள்.

இவ்விரு சாராரும் கூறுவது வெளிப் பார்வைக்கு அபிப்பிராயபேதம் போல் தோன்றினும் கருத்து ஒன்றேயாகும். பிற மதத்தார் கூறும் ஆக்ஷேபனைக்கு இரு சாராரும் மறுப்புக் கூறுகிறார்களே அன்றி இவ்விருவரும் உண்மையில் பேதகப்பட்டுக் கொள்ளவில்லை. ஆனால், இரு சாராரும் கூறுகிற மறுப்பானது வெவ்வேறு விதமான முறையிலிருக்கிறது என்பதை நம்மவர் உணர வேண்டும். 'நஸக்' என்ற பதத்துக்கும், 'ஆயத்' என்ற பதத்துக்கும் பொருள் கொள்வதிலிருந்து பிற மதத்தார் எழுப்பும் ஆக்ஷேபனைகளுக்கு இரு சாராரும் பதில் கூறி திரு குர்ஆனின் சத்தியத் தன்மையையும் சிறப்பையும் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்கள். 'ஆயத்' என்ற பதத்துக்கு 'வசனம்' என்று பொருள் செய்து ஜும்ஹூர்கள் எடுத்துக் காட்டிய உதாரணங்களை ஆதாரமாகக் கொண்டு எவரும் திரு குர்ஆனை மறுக்கவோ நிராகரிக்கவோ முடியாது. ஏனென்றால் முஸ்லிம்களுக்கு விதிக்கப்பட்ட ஒரு சட்டம் சில காலத்துக்குப்பின் அவர்களின் ஜனப்பெருக்கையும், வலிமையையும், அவர்களுக்கு இருக்கிற அவசியத்தையும் கருதி அமல் நடத்தப்படாமல் நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்டதுடன், காலத்

துக்கும் நோக்துக்கும் தக்கவாறு சட்டம் வந்தது. இதை ஆக்ஷேபனை செய்யவும் முடியாது. இவ்வாறு சட்டமியற்ரு மல் ஆரம்பக் காலச் சட்டத்தையே அமல் நடத்தும்படி வற்பு றுத்துவதுதான் ஆட்சேபகரமானதாகும். அவ்வாறில்லாமல் இறுதிகாலம் வரை யாவரும் அனுஷ்டிக்கத் தகக விபரமான சட்டம் பிறப்பிப்பது ஆக்ஷேபிக்கத்தக்கதாகாது.

பதினேழாவது ஆட்சேபனை

பிரமாணங்களைப் பற்றிய விஷயங்கள்

திருகுர்ஆனில் பல வஸ்துகளைக் குறித்து இறைவன் பிரமாணம் செய்திருக்கிருன். இவ்வாறு பிரமாணம் செய்வ தற்கு யாதுகாரணம்? திரு குர்ஆனை அங்கீகரிப்பவர்களுக்கு இறைவன் இவ்வாறு பிரமாணங்களைச் செய்யவேண்டியதில்லை. திருகுர்ஆனை அங்கீகரிக்காதவர்களுக்கு இவ்வாறு ஆயிரம் முறை பிரமாணம் செய்தாலும் அவர்கள் அதை நம்பப் போவ தில்லை. தவிர அடிக்கடி பிரமாணம் செய்வது, 'அல்லாஹுதஆலா யாவருக்கும் கர்த்தன்; சர்வசக்தன்' என்ற தன்மைக்கும் அவனது பெருமைக்கும் இழிவையுண்டாக்குவதாக இருக்கி றது. மேலும், ஒலிவிய மரம், குதிரை, அத்திப்பழம் முத லிய தாழ்ந்த வஸ்துகளின் பேரில் பிரமாணம் செய்வது அவனுடைய பெருந் தன்மைக்கு மிகவும் பங்கம் விளைவிப்ப தாக இருக்கிறது. தவிரவும் அல்லாஹுதஆலா எவ்வஸ்து களின் பேரில் பிரமாணம் செய்கிருனே அவ்வஸ்துகள் அவனிடத்தில் மதிக்கத் தக்கனவாகவும், கௌரவிக்கத் தகுந்த னவாகவும் இருக்கின்றன என்று ஏற்படுகிறது. இவைகள் எல் லாம் அல்லாஹுதஆலாவினிடத்தில் மதிக்கத் தக்கவைகள் தாளு?

சமாதானம்

திருகுர்ஆன் மக்களுக்கு நேரானவழியைக் காட்டுவதற் காகவே அருளப்பட்டதாதலால் அதில் சொல்லப்பட்ட விஷ

யங்கள் யாவருக்கும் எளிதில் விளங்கக் கூடியனவாகவும், பசு மரத்தாணி போல் பதியக் கூடியனவாகவும் அமைந்திருக்கின்றன. சட்டதிட்டங்களையும், விதி விலக்குகளையும் பற்றிக்கூறும் சிற்சில இடங்களில் தன்னைப் பற்றியும், தன்னுடைய வல்லமையைப் பற்றியும் இறைவன் முதலில் கூறி தெய்வபயம் உண்டாகும்படி செய்துவிட்டு அப்பால் தன்னுடைய ஏவல் விலக்கல்களைக் கூறி இருக்கிறான். சில இடங்களில் மறுமையில் உயிர்ப்பிக்கப்படுவதையும் அவரவர் செய்த நன்மை தீமைகளுக்குக் கேள்வி கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்பதையும் கூறி அதற்கப்புறம் விதிவிலக்குகளைக் கூறி இருக்கிறான். சில இடங்களில் முற்காலத்திலிருந்த நல்லோருக்கும் தீயோருக்கும் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிக் கூறி அதற்கப்புறம் விதிவிலக்குகளைக் கூறி இருக்கிறான். சில இடங்களில் குதிரை, ஒலிவிய மரம், சந்திரன், சூரியன் முதலியவைகளின் மீது பிரமாணம் செய்து அதற்கப்புறம் விஷயங்களை விளக்கிக் கொண்டு போகிறான். சில இடங்களில் தக்க ஆதாரங்களுடன் தர்க்க முறையில் விஷயங்களை விளக்குகிறான். சில இடங்களில் ஜனங்களின் உணர்ச்சிக்கும் வழக்கத்துக்கும் ஒத்த முறையில் விஷயத்தைக் கூறுகிறான். இவ்வாறு பலவித முறையில் இறைவன் தனது கட்டளைகளையும் விதி விலக்குகளையும் கொஞ்சங் கொஞ்சமாகச் சமய சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு வெளிப்படுத்தி இருக்கிறான். இவ்வாறு சாதுரியமான முறையில் வேதத்தை வெளிப்படுத்தியதால் முரடர்களாக இருந்த அரபியர்கள் முழுமனதுடன் திருகுர்ஆன் கட்டளையைகொஞ்சம் கொஞ்சமாகப்பயின்று நாளடைவில்முற்றிலும்தழுவி நடந்தார்கள். ஆனல், தௌராத்முதலிய பழைய வேதங்களைப் பார்த்தால் சில அத்தியாயங்களில் தலைமுறைகளும், சிலஅத்தியாயங்களில் முற்காலத்து நபிமார்களின் வரலாறுகளும், சில அத்தியாயங்களில் இறைவனின் அனுக்கிரகங்களும், சில அத்தியாயங்களில் விதி விலக்குகளும் என்று தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஏக காலத்தில் ஒரே இடத்தில்

அவைகள் கூறப்பட்டதால் பொது ஜனங்கள் அவைகளனைத்தையும் தழுவி நடக்க முடியாமல் போய் விட்டது. இவை தாம் திரு குர்ஆன் அமலில் இருக்கும் வேதம் என்பதற்கும் தௌராத் முதலிய பழைய வேதங்கள் கைவிடப்பட்ட வேதங்கள் என்பதற்குமுள்ள வித்தியாசம். புத்தியுள்ளவர்களும், நியாயஸ்தரும் நாம் மேலே கூறிய விஷயங்களை அங்கீகரிப்பது மல்லாமல் திரு குர்ஆனின் போதனைமுறைதான் பொது ஜனங்களை நேர் வழியிற் றிருப்புவதற்குச் சிறந்த முறை என்று ஒப்புக் கொள்வர். ஆனால், இஸ்லாத்தின் விரோதிகள் இவ்வித நேர்மையைக் கடைப் பிடிப்பதில்லை யாதலால், இவ்விஷயத்திலும் தங்களுக்குள்ள அபிப்பிராய வித்தியாசத்தை அறிவித்து விட்டதால் அதற்குச் சமாதானம் கூறுவது முஸ்லிம்களின் கடமையாகி விட்டது. இன்ஷா அல்லாஹ் றஹ்மானின் நல்லுதவியால் அதற்குத் தக்க சமாதானமும் கூறுவோம்.

அறபி தேசத்து ஜனங்களிடம் ஒரு விஷயத்தைக் கூறும் முன் ஏதேனும் ஒன்றின் மீது பிரமாணம் செய்து கூறினால் அதை வெகு சீக்கிரத்தில் உண்மை என்று ஒப்புக் கொண்டு அதன்படி நடப்பது வழக்கமாக இருந்தது. இன்னமும் அவ்வழக்கம் அங்கு இருந்து வருகிறது. இவ் வழக்கம் அங்கு இருப்பதற்கு இவ்விடத்தில் நாம் ஆதாரம் காட்ட வேண்டிய அவசியமில்லை. நம்முடைய இந்நாட்டிலும்கூட பொது ஜனங்களிடம் இவ்வித வழக்கம் இருந்து வருகிறது. ஒரு மனிதன் பிரமாணமாகக் கூறி விட்டால் அநேகம் ஜனங்கள் அதை உடனே ஏற்றுக் கொள்வரே யன்றி, அதனை நிராகரிப்பதில்லை. இதற்குக் காரணம் பலவுண்டு.

முதலாவது:—நாம் எந்த வஸ்துவின் மீது சத்தியம் செய்கிறோமோ, அந்தவஸ்துவை நாம் அதிகமாக கௌரவித்து மதிப்புச் செய்கிறோம். உதாரணமாக, நம் ஹிந்து சகோதரர்களில் சிலர் 'கடவுள் மீது பிரமாணமாக', 'சாமி ஆணையாக' என்றெல்லாம் கூறுகிறார்கள். இதற்குக் கடவுளையும்

சுவாமியையும் அவர்கள் அதிகமாகக் கௌரவிக்கிறார்கள் என்பதே காரணமாகும்.

இரண்டாவது:—நாம் எந்த வஸ்துவை அதிகமாக நேசிக்கிறோமோ, அந்த வஸ்துவைக் குறித்துப் பிரமாணம் செய்வது. உதாரணமாக, 'என் தகப்பன்மீது பிரமாணமாக', 'என் பிள்ளையின்மீது பிரமாணமாக' என்று கூறுகிறோம். இவைகள் மீது நமக்கு அதிகப் பற்றும் வாஞ்சையும் இருக்கிறது என்பதனால் இவ்விதமாகப் பிரமாணம் செய்கிறோம்.

மூன்றாவது:—நமக்கு இன்றியமையாத வஸ்துகளைக் கொண்டுபிரமாணம் செய்கிறோம். அதாவது 'கண் ஆணையாக' 'அன்னத்தின்மீது பிரமாணமாக' என்று கூறுகிறோம். மனிதருக்குக் கண் உயிர் போன்றதாகவும், கண்ணில்லாவிட்டால் எக்காரியமும் நடை பெறாததாகவும் இருப்பதால் அப்படிப் பிரமாணம் செய்கிறோம்.

நான்காவது:—நமக்கு அதிக லாபந் தரக்கூடியவைகளைக் குறித்து பிரமாணம் செய்கிறோம். 'என் குதிரையின் மீது சத்தியமாக' 'என் தோட்டத்தின்மீது சத்தியமாக' என்றுகூறுகிறோம். இவைகளில் நமக்கு அதிகப் பிரயோஜனம் உண்டாகிறது என்பது இதன் கருத்து.

தவிரவும், சாமான்யமான எல்லாக் காரியங்களுக்கும் நாம் இவ்வாறுபிரமாணம்செய்வதுவழக்கமில்லை. முக்கியமான விஷயமாகஇருப்பதற்காகவும்,நாம்கூறுகிற விஷயத்தை நம்முடன்பேசுபவர் கவனமாகக்கேட்டு அதை நம்பவேண்டும் என்பதற்காகவும் பிரமாணம்செய்கிறோம் என்றஇவ்விஷயம்யாவருக்கும்தெரிந்த விஷயமாகும். எனவே, திருகுர்ஆனில்இறைவன் பிரமாணம் செய்து கூறியவைகள் அன்றிக் கவனிக்கத்தக்க விஷயம் என்றும், முக்கியமான பிரசினைகள் என்றும் நாம் தெரிந்து கொள்கிறோம். இறைவன் திருகுர்ஆனில் பிரமாணம் செய்து கூறியவைகள் விசுவாசங் கொள்ள வேண்டிய விஷயங்களாகவே இருக்கின்றன. ஏகதெய்வ வணக்கம், திருக்குர்

ஆன் உண்மையான வேதம், நபிமார்கள் இறைவனால் அனுப்பப்பட்டவர், நியாயத் தீர்ப்பு நாள் நிச்சயமாக ஏற்படும்; என்ற விஷயங்களைப் பற்றியும் நன்மை செய்தோருக்கு மறுமையில் சுவர்க்கானந்தம் கிடைக்குமென்ற வாக்குறுதி; தீமை செய்தோர் மறுமையில் நரகவேதனை யனுபவிப்பார்கள் என்ற எச்சரிக்கை ஆகியவைகளைப்பற்றியும், மனிதன் இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான் என்ற விஷயங்களைப்பற்றியும் குறிப்பிடு மிடங்களில் திருகுர்ஆனில் பிரமாணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் முக்கியமான விஷயங்களாக இருக்கின்றன என்பதையே இப்பிரமாணங்கள் வற்புறுத்துவனவாயிருப்பதால் அனாவசியமான விஷயங்களுக்காக இறைவன் சத்தியம் செய்யவில்லை. ஆதலால், இந்த அம்சத்தில் திருக்குர்ஆனை ஆக்ஷேபிக்க இடமில்லை.

மனிதர்களாகிய நாம் செய்யும் சத்தியங்களே மேலே கூறியதுபோல் பலவிதங்களாக இருக்கின்றன. இவைகளைப் போலவே சத்தியத்திற் கூறப்பட்ட பொருள்கள் அல்லாஹுதஆலாவினிடத்தில் சிரேஷ்டமானவையாகவோ, மதிக்கத்தக்கனவாகவோ, வணங்கப்படத் தகுந்தனவாகவோ இருக்கின்றன என்பது கருத்தல்ல. அல்லாஹுதஆலா எந்தெந்த வஸ்துகளைக் குறித்துச் சத்தியம் செய்திருக்கிறானோ, அவைகள் அதிகப் பிரயோஜனமுள்ளனவாகவும், இன்றியமையாதனவாகவு மிருக்கின்றன என்பது தான் கருத்து. உதாரணமாக சந்திரன், சூரியன் ஆகியவைகள் மனித வாழ்க்கைக்கு எவ்வளவு பிரயோஜன முள்ளவைகள் என்பது உலகறிந்த விஷயம். இவ்விரண்டு மில்லையாயின், உலகமே இல்லை என்றும், உலகம் பாழடைந்துவிடும் என்றும் கூறுவது மிகைபடுத்திக் கூறுவதாகாது. நிற்க, ஒலிவிய எண்ணெய், குதிரை, அத்திப்பழம் முதலியவைகள் அறபியர்களுக்கு அதிகம் உபயோகமானவைகளாகவுமிருக்கின்றன. ஆதலால் அல்லாஹுதஆலா இவ்விஷயங்களைக் குறித்து வீணாக சத்தியம் செய்தான் என்றுரை கூற இடமில்லை.

இனி இவ்வஸ்துகளைக் குறித்துச் சத்தியம் செய்ததால் இவைகள் அல்லாஹூ தஆலாவுக்கு அதிகம் உபயோகமானவைகள் என்றல்லவோ பொருள் கொள்ள வேண்டியதாக இருக்கிறது என்று கருதக்கூடும். அவ்வாறு கருதுவதற்கும் இடமில்லை. எவ்வாறென்றால், 'உன் தகப்பன் மீது பிரமாணமாக' 'உன் பிள்ளையின் மீது பிரமாணமாக' என்று நமது நாட்டார் சில சமயங்களில் சத்தியம் செய்து கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சத்தியங்களில் சத்தியம் செய்பவருக்கு இப்பொருள்களில் அதிக நேசமும் பாசமும் இருக்கிறது என்று கருதாமல், யாரிடத்தில் சத்தியம் செய்து கூறுகிறோமோ அவரிடத்தில் அந்தப் பொருளுக்கு அதிக நேசமும் பாசமும் பிரயோஜனமும் இருப்பதாகக் கொள்கிறோம். இதுபோல் இறைவன் எங்கெந்த பொருள்களைக் குறித்துச் சத்தியம் செய்தானோ அந்தப் பொருள்கள் மானிடர்களுக்கு அதிகம் பிரயோஜனமானவை என்று தான் கருதத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, திருகுர்ஆனில் இறைவன் கூறிய சத்தியங்களைப் பற்றி ஆராய்ச்சித் திறனும், ஆழ்ந்த அறிவுமுள்ளவர்கள் ஆக்ஷேபனை செய்யாமல் சத்தியத்துக்குப் பின் கூறப்பட்டவைகள் முக்கியமான விஷயங்கள் என்றும், சத்தியத்தில் குறிப்பிடப்பட்ட பொருள்கள் மனிதருக்கு இன்யறிமையாதன என்றும், அதிகப் பிரயோஜனமுள்ளவைகள் என்றுமே கருதுவர். பிடிவாதக்காரர்கள் கூறுவது போலக் கருதமாட்டார்கள். ஆதலால், இஸ்லாத்தின் விரோதிகள் செய்யும் ஆக்ஷேபனைகள் செல்லத்தக்கனவன்று.

பதினெட்டாவது ஆக்ஷேபனை

நபிமார்கள் பாபங்களை விட்டுப் பரிசுத்தமானவர்களா ?

நபிமார்கள் பாபத்தை விட்டுக் காக்கப்பட்ட மஃஸூம்கள் என்று முஸ்லிம்கள் சொல்லுகிறார்கள். ஆனால், திரு குர்ஆனிலோ அல்லது அதற்கு முன்னர் உள்ள வேதங்களிலோ

நபிமார்கள் பாபத்தை விட்டுக் காக்கப்பட்டிருப்பதற்கான சமாசாரங்களைக் காணவில்லை. ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதலாவது நபி என்று கருதப்படுகிறார். ஆனால் அவர் ஷைத்தானின் ஏமாற்றத்தில் சிக்குண்டு, விலக்கப்பட்ட மரத்திலிருந்து புசித்துச் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப் பட்டார். ஹஜ்ரத் இப்ராஹீம் நபியவர்கள் விக்கிரகங்களை உடைத்து விட்டு, பெரிய விக்கிரகத்தின் கழுத்தில் கோடாரியைத் தொங்க வைத்து விட்டார். அவரது சமூகத்தார் வந்து, 'இவ்விக்கிரகங்களை உடைத்தது யார்?' என்று கேட்ட போது அவர், அந்த பெரிய சாமிதான் இதைச் செய்தது என்று பொய் கூறி இருக்கிறார். இன்னும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் இவைகளைப் பார்த்தபோது அவைகள்தாம் தம்முடைய 'றப்பு' என்று கூறி இருக்கிறார். எகிப்து தேசத்து அரசன் அவரிடம் அவரது மனைவியை யார்? என்று விசாரித்ததற்குத் தமது சகோதரி என்று கூறி இருக்கிறார். அவருடைய சமூகத்தார் திருநாள் கொண்டாடிய போது தமக்குச் சீக்கு என்று பொய் சொல்லி வீட்டிலிருந்து கொண்டார்.

"ஹஜ்ரத் மூஸா நபியவர்கள் ஒரு கிப்தியனை அடித்துக் கொலை செய்திருக்கிறார். ஹஜ்ரத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்கள் தகாத முறையில் ஊரியாவுடைய மனைவியான பின்துஸப்அவை அபகரித்திருக்கிறார். இதன் பேரில் மலக்குகள் மனித ரூபத்தில் தோன்றி இவரிடம் பஞ்சாயத்துக் கேட்டு வருவதன் மூலமாக இவரது செய்கை கண்டிக்கப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் முற்காலத்து நபிமார்களின் சரித்திர வரலாறுகளாகும். இவைகளில் அல்லாஹுதஆலாவின் கட்டளைக்கு மீறுதல், பொய் சொல்லுதல், மற்றவைகளைத் தெய்வமென்று சொல்லுதல், பிறர் மனைவி விழைதல், கொலை செய்தல் முதலிய காரியங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவை பெரும் பாபமில்லையா? இவ்விவரம் திருகுர்ஆனிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இனி முஸ்லிம்களின் நபியான முஹம்மது (ஸல்) அவர்களைக் கவனிப்

போம். திருகுர்ஆனில் 4 மனைவியர்களை மணந்துகொள்ள உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. அவர் அதற்கு மாறுகவே இன்னும் பல மனைவியர்களை மணந்திருக்கிறார். அவர் பாப மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று திருகுர்ஆனில் சொல்லப் பட்டிருக்கிறது. இன்னொரு இடத்தில், 'முஹம்மதே! உன்னை நான் வழி தவறியவராகப் பெற்றுக் கொள்ளவில்லையா? பின்னர் உன்னை நான் நேர்வழியிற் சேர்த்தேன்' என்று கூறப் பட்டிருக்கிறது. ஆனால், ஹஜ்ரத் ஈஸா நபியவர்கள் பாபம் செய்ததாகத் திருகுர்ஆனில் எங்கும் கூறப்படவில்லை."

சமாதானம்

இவர்களின் இவ்வாட்சேபனைக்குச் சமாதானம் சொல்லு வதற்குமுன் ஒரு விஷயத்தை நாம் உணர்ந்துகொள்ளவேண் டும். நபிமார்கள் இறைவனின் தூதர்கள்தாம். அவர்கள் ஆத்மார்த்த விஷயங்களில் மற்ற மனிதர்களைப் பார்க்கினும் மிகவும் உயர்ந்த அந்தஸ்திலிருக்கிறார்கள். ஆயினும் அவர் கள் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம். மனித இயற் கையில் இருக்கும் வரை மனித வர்க்கத்துக்குள்ள விசேஷித்த தன்மைகளைவிட்டு அவர்கள் நீங்கி இருக்க முடியாது. பசி, தாகம், கோபம், அன்பு, ஞாபக மறதி ஆகியவைகள் அவர்களு க்கும் இருக்கத் தான் வேண்டும். இந்தத் தன்மைகள் ஒருவ ரிடம் இருப்பது பாபமுமல்ல; குற்றமுமல்ல. இவைகள் நபி மார்கள் மஃஸூமானவர் (அதாவது பாபத்தை விட்டுக் காக்கப் பட்டவர்கள்)என்ற கொள்கைக்கு விரோதமானவைகளுமன்று. முற்காலத்திலுள்ள சில ஜனங்கள் "நபிமார்களாக இருக்க வேண்டியவர்கள் பசி தாகம் முதலிய இந்தத்தன்மைகள் கூட இல்லாதவர்களாக இருக்கவேண்டும்" என்று நினைத்துக்கொ ண்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணவருந்துவதையும் ஜலம் குடிப்பதையும், குடும்பத்துடனிருப்பதையும், பிள்ளை குட்டிகளைப் பெறுவதையும் கண்டு ஆச்சரியமடைந்து இவ்வித மான காரியங்கள் செய்வதை ஆக்ஷேபிக்கவும் செய்தனர். இதற்

குத் திருகுர்ஆன் "உங்களைப்போல் நானும் மனிதன் தான் என்று கூறிவிடும்" எனப் பதில் கூறி இருக்கிறது.

நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் இருந்த நபிமார்களும் மனிதர்கள் தாம். இதையும் திருகுர்ஆன் தெளிவுபடக் கூறி இருக்கிறது. ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் விலக்கப்பட்ட மரத்திலிருந்து புசித்தது அவருடைய மறதியினால் தான். இறைவனின் கட்டளையை மீறவேண்டுமென்ற எண்ணத்தினால் அவர் அவ்வாறு செய்யவில்லை. இதைப்பற்றி திருகுர்ஆனும் "பநஸிய" (அவர் மறந்துவிட்டார்) என்று கூறி இருக்கிறது. இவ்விதமான மறதிக்காகத்தான் அவர் இறைவனால் கண்டிக்கப்பட்டார்.

ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் பொய்யுரைக்கவில்லை; உண்மைக்கு மாறான விஷயங்களைக் கூறவுமில்லை. தமது மனைவியை அவர் சகோதரி என்று கூறியதுகுற்றமல்ல. ஏனென்றால் உங்களுடைய பைபிளிலேயே அவரது மனைவியான சாராள் "அவரது தகப்பன் பெற்ற சகோதரி; தாய் பெற்ற சகோதரி யல்ல" என்று கூறி இருக்கிறது. எனவே சகோதரியை மணந்துவிட்டால் அப்புறம் அவளைச் சகோதரி என்று சொல்லவே கூடாது என்பது சட்டமல்ல. பீபீ சாரா அவர்கள் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குச் சகோதரி முறையாகயுள்ளவராகவும் மனைவியாகவுமே இருந்தார்கள். குட்டிச் சாமிகளை எல்லாம் உடைத்து விட்டுப் பெரியசாமியின் கழுத்தில் கோடாரியை தொங்க வைத்து விட்டுப் "பெரியசாமி தான் குட்டிச் சாமிகளை அவ்வாறு செய்தது" என்று கூறியதானது, தர்க்கம் செய்து விக்கிரக ஆராதனைக்காரர்களுக்குப் புத்தி புகட்டுவதற்குத்தான். 'இவ்விஷயத்தை அந்த சாமியிடம் கேட்டுப் பாருங்கள், தங்களை உடைப்பதை விட்டுத் தங்களைக் காத்து கொள்ளாத இந்த சாமிகள் மற்றவர்களை எங்ஙனம் காப்பாற்ற முடியும்?' என்பதை அவர்கள் உணருவதற்காகவே. ஆதலால், இது பொய் சொன்னதாகக் கருத முடியாது. இவ்விதமாகத் தர்க்க முறையில் விஷயத்தை உணர்த்துவது இக்காலத்திலும் நடைபெறுகிற வழக்கமாகும்.

சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் ஆகியவைகளை அவர் 'தம்முடைய றப்பு' என்று மதித்ததில்லை. ஆனால், விக்கிரகத்தை தொழுபவர்கள் அவைகளை தெய்வங்களென மதித்து வந்ததால் அவர்களைப் பரிகசிக்கும் முறையில் "இதோ (நீங்கள் சொல்கிற) என்னுடைய றப்பு" என்று கூறிவிட்டு அவைகள் அஸ்தமித்தவுடன், "இவைகள் அஸ்தமிக்கின்றன. இவைகளை நான் நேசிக்கிறதில்லை"யென்று தெளிவாகக் கூறி இருக்கிறார். ஆதலின், அவர் அவைகளை தெய்வங்களென்று ஒரு போதும் மதித்ததில்லை.

ஹஜ்றத் இப்றுஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள், "நான் நோயாளியாக இருக்கிறேன்" என்று கூறியதும் பொய்யாகாது. ஏனென்றால், இக்காலத்திலும் கூட நமக்குத் திருப்தியில்லாத ஒரு காரியத்தில் நம்மைச் சம்பந்தப்படும்படி அழைத்தால், நாம் 'எனக்கு உடம்பு நன்றாய் இல்லை' என்று கூறுகிறோம். இது சர்வ சாதாரணமாக எங்கும் கூறும் வழக்கமாக இருக்கிறது. இவ்வாறு நாம் கூறுவதில் ஸ்தூல சுவாத்தியமின்மையை நாம் கருதுவதில்லை. மனம் சரியாக இல்லையென்றே நாம் கருதுகிறோம். நாம் இவ்வாறு கூறுவதை நம்மை அழைக்க வந்தவர்கள், "அவருக்கு இந்த காரியம் இஷ்டமில்லை, ஆதலால்தான் இம்மாதிரி கூறுகிறார். அவரைக் கட்டாயப்படுத்த வேண்டாம் விட்டுவிடுங்கள்" என்று கூறுகிறார்கள். எனவே, தனக்கு இஷ்டமில்லாத ஒரு காரியத்துக்குப் பிறர் அழைக்கும்போது கௌரவமான முறையில் அதை நிராகரிப்பதற்கு இம்மாதிரி கூறுவது வழக்கமாக இருப்பதால் இது பொய் சொன்னதாக ஆகமாட்டாது.

ஹஜ்றத் மூஸா நபி யவர்கள் ஒரு கிப்தியனைக் கொலை செய்த விஷயத்தைக் கவனிப்போம். நன்கு ஆலோசனை செய்து பார்த்தால் மூஸா நபி யவர்கள் கொலை செய்ததாகவே ஏற்படாது. ஏனெனில், கிப்தி வகுப்பைச் சேர்ந்த ஒருவன் பனி இஸ்ராயீல்களில் ஒருவரை அநீதியாகவும் அக்கிரமமாகவும் அடித்துத் தொந்தரை செய்து கொண்டிருந்தான். மூஸா

அலைஹிஸ்ஸலாமவர்கள் அவ்வக்கிரமஸ்தனுக்கு வாய்மொழியாகப் புத்தி கூறினார்கள். அதை அவன் அலட்சியம் செய்து விட்டு மென்மேலும் அந்த பனு இஸ்ராயீலை அடித்துக்கொண்டிருந்தான். மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் இவன் செய்யும் இவ்வக்கிரமச் செய்கையால் கோபமடைந்து அவனது கன்னத்தில் அறைந்தார்கள். இவ்வளவுதான் அவர்கள் செய்தது. அவன் மரித்துவிட்டான். கையினால் கன்னத்தில் அறைவதால் ஒருவர் மரணமடைவது வழக்கமில்லை. ஆகவே அவன் மரித்தது தற்செயலாக நிகழ்ந்த காரியமாகும். இவன் மரித்ததற்கு மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அறைந்தது காரணமல்ல. தற்செயலாக அவனது மரணமும், மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அறைந்ததும் ஒரே காலத்தில் நடைபெற்றது. இவ்வாறு அறைந்தது தங்களுடைய உயர்ந்த அந்தஸ்துக்கு ஏற்றதல்ல என்று கருதி இதற்காக மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தௌபாவும் செய்தார்கள். தவிரவும் அவர்கள் நபியாக ஆவதற்கு முன் பாலிய வயதில் இச்சம்பவம் நிகழ்ந்தது. ஆதலால் நபிமார்கள் பாபத்தைவிட்டுப் பரிசுத்தமானவர்கள் என்ற கொள்கைக்கு இது விரோதமானதன்று.

ஹஜ்ரத் தாவூது அலைஹிஸ்ஸலாமவர்கள் ஊரியாவின் மனைவியான பின்துஸப்உவைப்பற்றிய சம்பவம் நீங்கள் கூறுவதுபோலல்ல. இச்சம்பவத்தில் சில பொய்யான விஷயங்கள் சேர்க்கப்பட்டு வேறுவிதமான முறையில் இது திரித்துக் கூறப்பட்டிருக்கிறது. இதுபோலவே சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் விக்கிரக ஆராதனை செய்ததாகவும், ஹாரூன் அலைஹிஸ்ஸலாமவர்கள் காளைக் கன்றை வணங்கியதாகவும், லூத் அலைஹிஸ்ஸலாமவர்கள் மதுபானம் அருந்தித் தம்முடைய இரு புதல்விகளிடமும் சம்சர்க்கம் செய்ததாகவும், உங்களுடைய வேதப் புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் வேதக்காரர்களிலுள்ள பாதிரிமார்கள் முற்காலத்தில் திருத்திப் புரட்டிய விஷயங்களாகும். இதை புத்தி ஒத்துக் கொள்ளுவது மில்லை; எங்களுடைய திருகுர்ஆனும்

ஒத்துக்கொள்ளவுமில்லை. "நிச்சயமாக இவர்கள் நம்மிடத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவர்களிலும் சிறந்தவர்களிலும் இருக்கிறார்கள்" என்று இவர்களைப் பற்றி திரு குர்ஆன் அறிக்கையிடுகிறது. இந்த ஒரு வாக்கியம் இந்த நபிமார்களைக்குறித்து மேற்கூறப்பட்ட உங்கள் வாதத்துக்குச் சரியான பதிலாகஇருக்கிறது. இவர்கள் பாபத்தை விட்டுப் பரிசுத்தவான்களாகஇருந்தார்கள் என்பதை தெளிவு படுத்துகிறது. இந்தக் கேள்விகள் திரு குர்ஆனின் மீது எற்பட இடமில்லை. இவைகளுக்கு பைபிள் தான் பதில் கூறவேண்டும்.

திரு குர்ஆனில் ஹஜ்ரத் தாவூத் அலைஹிஸ்ஸலா மவகளைப்பற்றி அநேகம் புகழுரைகள் சொல்லப்பட்டிருக்கின்றன 'ஸூரத்து ஸ்வாத்' என்ற அத்தியாயத்தில் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களின் நீதியையும், நேர்மையையும் பற்றிய ஒரு சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது.

> இரண்டு இடையர்கள் தங்களுடைய வழக்கைச் சொல்லுவதற்காக அக்காலத்தில் ஹஜ்ரத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களின் வீட்டிற்குள் சுவர் எறிக் குதித்து வந்தார்கள். இதனால், தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குக் கொஞ்சம் பயமேற்பட்டது. ஏனென்றால் அக் காலத்தில் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களின் அக்கம் பக்கத்திலுள்ள பிரதேசங்களில் இருக்கிற அரசர்களுடன் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்விதமான காலங்களில் பகைவர்கள் அகால வேலைகளில் வீடுகளில் புகுந்து கொலை செய்வது வழக்கமாக இருந்தது.

வழக்குச் சொல்ல வந்த இடையர்கள் சாமான்ய ஜனங்களாக இருந்ததால், அரசர்களிடம் எவ்வாறு பேச வேண்டும் என்ற முறை தெரியாமல் "பயப்படாதே! நீதி செய், அநீதி செய்யாதே" என்பன போன்ற வாக்கியங்களைக் கூறினார்கள்.

அரச தர்பாரில் இவ்வாறு கூறுவதால் அரசர்களுக்குக் கோபம் வருவது வழக்கம். அகால வேளையில் அனுமதியின்றி சுவர் ஏறிக் குறித்து வந்ததற்காகக் கடுந் தண்டனை விதிப்பது வழக்கம். ஆனால், தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்கள் அரசராக இருந்ததுடன் நபியாகவுமிருந்ததால் அவ்விடையர்கள் செய்த இத்தவறுகளை மன்னித்ததுடன் பொறுமையுடன் அவர்களின் வழக்கை விசாரித்து நீதி செய்தார்கள். தவிரவும், தம்முடைய பொறுமையை இறைவன் சோதித்ததை ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்கள் உணர்ந்து அவனுக்கு நன்றி செலுத்தி ஸஜ்தா செய்தார்கள். இதனையொட்டி ஆண்டவன் தாவூது நபி அலைஹிஸ்ஸலா மவர்களுக்குக் கடாக்ஷம்செய்தான். இது தான்உண்மை விவரம். இதைச் சரித்திரக்காரர்கள் வேறு வித மானபொருள் கொடுத்து ஒரு கதையாகக் கட்டி விட்டார்கள்.

ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்கள் சம்பந்தமான ஆக்ஷேபனைக்குச் சமாதானம்

திரு குர்ஆனின் கட்டளைக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீறி நான்குக்கு மேற்பட்ட ஸ்திரீகளை விவாகம் செய்தார்கள் என்று இஸ்லாத்துக்கு எதிராக வுள்ளவர்கள் செய்யும் ஆக்ஷேபனையில் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்துக்குக் குறைவை யுண்டுபண்ணும் முறையில் நாயகம் (ஸல்) காமவெறிகொண்டவர்களென்றும்,கணக்கற்ற மனைவிகளைவைத் திருந்தார்கள் என்றும், காம இச்சையின் காரணமாக ஹஜ்றத் ஜைது (றலி) என்ற ஸஹாபிக்கு மனைவியாக இருந்த ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்களின் மீது உள்ளூற காதல் கொண்டிருந்ததாகவும் குற்றஞ் சாட்டுகிறார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாபம் செய்தவர் என்று எடுத்துக் காட்டுவதற்கு, நீர் இஸ்திஃபார் செய்யும்' என்ற ஆயத்தை ஆதாரமாக எடுத்துக் கொண்டு நாயகமவர்கள் தமது எதிரிகளை இரக்கமற்று வெட்டி வீழ்த்து வித்தார்கள் என்றும், பகைவர்களின் பொருள்களைக் கொள்ளை அடித்தார்கள் என்றும், குழந்தை

களையும் பெண்களையும் அடிமைகளாக ஆக்கினார்கள் என்றும் கூறி, திரு குர்ஆன் யுத்தம் செய்யத் தூண்டுவதாகவும் அடிமை வழக்கத்தை ஆதரிப்பதாகவும் கூறுகிறார்கள். இது சம்பந்தமாக மார்க்கப் பற்றுள்ள கிறிஸ்துவர்கள் விதம் விதமான நூல்களையும் எழுதி வெளியிடுகின்றனர். ஆனால், ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின்மீதும் அவர்களது அன்னையின்மீதும் யூதர்கள் சுமத்தியிருந்த படர்களையும் அபாண்டங்களையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறுத்து ஹஜ்றத்மர்யம் ஸித்தீக்காவின் பரிசுத்தத் தன்மையையும் ஹஜ்றத் ஈஸா (அலைஹி) அவர்கள் உண்மையான நபியென்பதையும் உலகில் நிலை நிறுத்தினார்கள்; இவ்விருவர்களைப்பற்றியும் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வித சாக்ஷியம் கூறியதால் இன்று வரை யூதர்கள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கோபமடைந்திருக்கிறார்கள். கிறிஸ்துவ சகோதரர்களுக்கு இஸ்லாம் செய்த இப்பேருதவிக்கு இவர்கள் இம்மாதிரி நூல்கள் எழுதியும் பிரசங்கம் செய்தும் திருகுர்ஆனின் மீதும் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் செய்யும் அனாவசியமான ஆதார மற்ற, அபாண்டமான இவ்வாக்ஷேபனைகள் கைம்மாறு போலும். கிறிஸ்துவர்கள் நியாயமான முறையில், உண்மையை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் ஆக்ஷேபனை செய்வதில் நமக்கு ஒன்றும் பொல்லாப்பு இல்லை. ஆனால் உண்மையை மறைத்து, வேண்டுமென்றே அபாண்டங்களையும் படர்களையும் கூறுவது தான் நமக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. எவ்வாறாயினும் கேள்வி பிறந்து விட்டதால் அதற்குக் சமாதானம் சொல்லவேண்டியது நியாயமாகும். ஆதலால் நமக்கு தெரிந்த வரையில் இதற்குப் பதில் கூறுவோம். இதில் இன்னொரு முக்கிய விஷயமும் கவனிக்கத் தக்கதாகும். நம்முடைய இவ்வியாசம் திருகுர்ஆனைப் பொறுத்ததேயன்றி நாயகம் (ஸல்) அவர்களைப் பொருத்ததல்ல. ஆயினும் நாயகமவர்களின்மீது செய்யும் ஆட்சேபனை திருகுர்ஆனின்மீதே செய்யும் ஆக்ஷேபனையாக இருப்பதால் வாசகர்களுக்கு விஷயம் விளங்கும் பொருட்டு நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்த முறையிலேயே

இவ்வியாசத்தில் பதிற் சொல்லக்கூடும். இந்தப் பதிலானது திருகுர்ஆனின் மீதுள்ள ஆக்ஷேபனைக்குஞ் சமாதானமாகும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

நாயகம் (ஸல்) அவர்களின் ஏகபத்தினி விரதம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மைப் பார்க்கினும் 15 வயதுக்கு அதிகமாகவுள்ள ஒரு ஸ்திரீயை மணந்து தமது 50 வயது வரை ஏகபத்தினி விரதத்தை அனுஷ்டித்து வந்தார்கள். இதனை எல்லா சரித்திரககாரர்களும் ஏகமனதாக ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள். இதல்லாமல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பிடமான மக்காபுரியில் உள்ள குறைஷித் தலைவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அழகிய கன்னிகைகளை அளிப்பதற்குத்தயாராகவுமிருந்தார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பிரசாரத்தை ஆரம்பித்த காலத்தில் மக்கத்துக் குறைஷியர்கள் இவ்விஷயத்தை நாயகம் (ஸல்) அவர்களிடம் அறிவிக்கவும் செய்தனர். பாலிய வயதிலேயே தான் ஸ்திரீகளின் மீது இச்சைகளுண்டாவது சர்வ சாதாரணமான வழக்கமாக இருந்து வருகிறது. இந்தக் காலத்தில் ஏகபத்தினி விரதம் கொண்டிருந்த நாயகம் (ஸல்) அவர்கள் தமது பிறப்பிடத்துக்கு வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள மதீனா என்னும் சிறு பட்டினத்துக்குச் சென்ற பின்னர் 50 வயதுக்கு மேற்பட்டு காம விகாரங் கொண்டு பல ஸ்திரீகளை மணந்தார் என்று கூறுவதை புத்தி எங்ஙனம் ஒப்புக் கொள்ளும் என்பது தான் விளங்கவில்லை. அதிலும், அப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வேஷத்தில் இருந்து கொண்டு முஸ்லிம்களையும், நாயகம் (ஸல்) அவர்களையும் தொந்தரை செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்த நய வஞ்சகர்களான முனாபிக்குகளின் மத்தியில் இவ்வாறான காம விகாரச் செய்கைகளில் ஈடுபட்டால் அக் கூட்டத்தார் இதைப்பற்றி புரளி செய்யாதிருப்பார்களா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நிலைமையில் மதீனாவுக்குச் சென்றார்கள்? அப்பொழுது

நாயகம் (ஸல்) அவர்களுக்கு எத்துணை எதிர்ப்புகளிருந்தன? என்பதைத் தெரிந்தவர்கள் கிறிஸ்துவர்களின் இக்கூற்றுக்குக் கொஞ்சமும் செவிசாய்க்க மாட்டார்கள் என்பது திண்ணம்.

கிறிஸ்துவர்கள் ஆதாரமாகக் கொள்ளும் திருமறை வசனமும், ஆதாரமற்ற கட்டுக் கதையும்

இக்குற்றச் சாட்டுக்கு முன்னர் ஹஜ்றத் ஜைது (றலி) அவர்களுக்கு மனைவியாக இருந்த ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்களை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்னர் மணம் புரிந்ததைச் சான்றாக எடுத்துக் காட்டுகின்றனர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்றத் ஜைது (றலி) அவர்கள் வீட்டுக்குச் சென்றபோது அவரது மனைவியார் நிர்வாண மாக ஸ்நானஞ் செய்து கொண்டிருந்ததை நாயகம் (ஸல்) அவர்கள் பார்த்து காதல் கொண்டதாகவும், ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்களும் இதற்குச் சம்மதப்பட்டுத் தமது மணாள ரான ஹஜ்றத் ஜைது (றலி) அவர்களிடமிருந்து விவாக பந்தத்தை ஒழித்துக் கொள்வான் வேண்டி அவ்வம்மையார் தன்மணாளருக்குக் கீழ்ப்படியாமலிருந்து இறுதியாக விவாக விலக்குப் பெற்றுக் கொண்டதாகவும் பின்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வம்மையாரை மணந்து கொண்டதாக வும் கூறுகின்றனர். இக்கூற்றுக்கு ஆதாரமாக "உமது மனத்தில் அவ்வெண்ணத்தை நீர் மறைத்துக் கொண்டிருந்தீர், அதை அல்லாஹ் வெளிப் படுத்து பவனாக இருக்கின்றான். இன்னும் நீர் ஜனங்களுக்கு பயப்படுகிறீர். ஆனால் அல்லாஹ்—அவனை நீர் பயப்படுவதற்கு—அதிகம் உரிமையுள்ளவனாக இருக்கிறான்" என்ற திருமறையின் வாக்கியத்தையும், இன்னுஞ்சில ரிவாயத்துகளையும் மேற்கோள் காட்டுகின்றனர்.

ஆனால், இந்த ஆயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காதல் சம்பந்தமான சமிக்ஞை கூட இல்லை என்பதை யாவரும் நன்கு அறியலாம். திரு குர்ஆனிலிருந்து மேற்கோள் காட்டும் மேற்படி வசனத்துக்கு அவர்கள் கூறுகிற கருத்து

இல்லை. இந்த ஆயத்தின் கருத்தை நாம் விவரிப்பதற்கு முன் உண்மைச் சமாசாரத்தைச் சுருக்கமாக விளக்குவோம்.

ஹஜ்றத் ஜைது (றலி) ஹஜ்றத் ஜைனப் (றலி)

ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தகப்பனுடன் பிறந்த அத்தைமகளான மைத்துனியாவார்கள். ஹஜ்றத் ஜைது (றலி) அவர்கள் நபிகள் நாயகமவர்களின் சொந்த ஊழியராக இருந்ததுடன், நாயகமவர்களின் தத்துப் புத்திரர் என்று ஜனங்களால் கருதப்பட்டும் வந்தவர். நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவர்பால் முழுக் கருணையும், அன்புமிருந்தது. நாயகம் (ஸல்) அவர்களே சிபாரிஷ் செய்து, முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு தமது குடும்பத்திலேயே பெண் தேடி இவருக்கு விவாகம் செய்வித்தார்கள். குறைஷியர்கள் தங்கள் குலப் பெண்ணை வேறு குலத்தவருக்குக் கொடுப்பது வழக்கமில்லை. ஜைது (றலி) என்பவர் குறைஷியரல்லர். சிறு வயதிலேயே கைதியாகப் பிடித்து வரப்பட்டு அடிமையாக்கப்பட்டவர். நாயகம் (ஸல்) அவர்கள் இவரை அடிமையினின்று விடுவித்துத் தந்தைக்குப் பதிலாக இருந்து வளர்த்துப் பாதுகாத்தார்கள். ஆதலால், நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லுக்காக குறைஷிக் குலத்தில் ஹாஷிம் கிளையில் உதித்த இந்த அம்மையாரை விவாகம் செய்து கொடுத்தார்கள். ஆயினும், குறைஷியர் உயர் குலத்தவர் என்ற எண்ணம் அறபியர்களுள் இருந்து வந்ததால் தம்பதிகளிருவருக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருவருக்கும் பொதுவாக இருந்து உபதேசம் செய்து பிணக்குகளைத் தீர்த்து வைத்துக் கொண்டிருந்தார்கள். இறுதியாக ஹஜ்றத் ஜைது (றலி) அவர்கள் விவாக விலக்குச் சொல்லி விடுவதாகவும் கூறினார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டாமென்று ஹஜ்றத் ஜைது (றலி) அவர்களுக்கு உபதேசித்தார்கள். ஆதலால் ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்களை விவாக விலக்கு சொல்வது நின்றது. ஆயினும், தம்பதிகளிருவருக்கும் ஒத்

துக் கொள்ளாததால் இருவரும் பிரிந்து விடுவது அவசியமாக வே ஆகி விட்டது.

ஹஜ்றத் ஜைனபை (றலி) நாயகம் (ஸல்) அவர்கள் விவாகம் செய்த காரணம்

அறபிகளில் கண்ணியம் பொருந்திய குறைஷிக் குலத்து ஹாஷிம்கிளையைச் சேர்ந்த ஸ்திரீயைத் தமது சொல்லுக்காக வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவருக்கு விவாகம் செய்து கொடுத்ததில் இவ்வாறான சம்பவம் நிகழ்ந்ததால் அக்குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு அவமானம் நேர்ந்ததாகக் கவலைப்படுவார்களோ, அந்தப் பெண்ணுக்கும் அருந்துயரமுண்டாகுமோ என்று சிந்தித்துப்பார்த்து இதைப் பரிகரிப்பதற்குச் சரியான வழி என்னவென்று கவனித்தார்கள். ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்களைத் தாமே விவாகம் செய்து கொள்வது தான் ஏற்ற முறை என்ற முடிவுக்கு நாயகம் (ஸல்) அவர்கள் வந்தார்கள். ஆயினும் தத்து புத்திரன் மனைவியை மணந்துகொள்வது சம்மந்தமாகத் திரு குர்ஆன் தெளிவாகக் கூறவில்லையாதலால் ஜனங்கள் அதை இழுக்காகக் கூறுவார்கள். இவ்வாறான மணம் இறைவனுக்குத் திருப்தியாக இருக்குமா என்று மனத்தினுள் நினைத்துச் சிந்தனை செய்து கொண்டிருந்தார்கள். இதை இறைவன் மேற்கண்ட வேத வசனத்தில் "உமது மனத்தில் அவ்வெண்ணத்தை நீர் மறைத்து வைத்திருக்கிறீர்; அதை அல்லாஹ்வெளிப்படுத்துகிறவனாகஇருக்கிறான். இன்னும் ஜனங்களை நீர் அஞ்சுகிறீர். அல்லாஹ்-அவனைத் தான் நீர் அஞ்சுவதற்கு—அதிகம் உரிமையுள்ளவன்" என்று தத்துப் புத்திரன் மனைவியை விவாகம் செய்யப்படாது என்ற சட்டமில்லை என்றும், தத்து புத்திரன்உண்மையான மகனாகிவிடமாட்டான் என்றும் 'இந்த எண்ணத்தை நீர் மறைத்துக் கொண்டிருப்பதை அல்லாஹு தஆலா வெளிப்படுத்துகிறான்' என்றும் ஜனங்கள் இழுக்காகப் பேசுவதைப் பற்றித் கவலை கொள்ள வேண்டியதில்லையென்றும், அல்லாஹு தஆலாவை அஞ்சுவது தான் மிகவும்

நேர்மையானது என்றும் இவ்வாயத்தில் சுருக்கமாகவும், சமிக்ஞையாகவும் அறிவித்துள்ளான். இவ்வேத வசனம் வெளியான பின்னர், நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்றத் ஜைது (றலி) அவர்களால் விவாகம் விலக்குச் சொல்லப்பட்ட தமது மைத்துனியை விவாகம் செய்து கொண்டார்கள். இவ்விவாகத்தால் குறைஷியருக்கும் திருப்தியும் சந்தோஷமு மேற்பட்டது. தத்து புத்திரன் சொந்தப் புத்திரனாகமாட்டான். சொந்தபுத்திரன் மனைவியைதான் மணம் செய்து கொள்ளக்கூடாது; தத்துப்புத்திரன் என்பது இஸ்லாமிய ஷரீஅத்தில் சட்ட முறையில் ஒப்புக் கொள்ளப்பட்டதல்ல என்ற விபரமும் உலகத்துக்கு வெளிப்படையாக இவ்விவாகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது. ஆகவே குரோத மனப்பான்மை கொண்ட கிறிஸ்துவர்கள் இந்த ஆயத்துக்குக் கற்பனையாகப் பொருள் செய்து கொண்டு ஆக்ஷேபனையைக் கிளப்புவது சரியன்று.

பலதார மணம்

"நான்கு பேர்களுக்குமேல் அதிகமான மனைவிகளை ஏக காலத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற சட்டத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீறினார்கள்" என்று குறைகூறுவது தகாது. இந்தச் சட்டம் ஏனைய எல்லா முஸ்லிம்களுக்கும் விதிக்கப்பட்ட சட்டமாகும். இதில் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டுப்படுத்தப்படவில்லை. இவ்விபரத்தை திருகுர்ஆனிலேயே இறைவன் குறிப்பிட்டிருக்கிறான். எனவே, நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் கட்டளைக்கு உட்பட்டே நான்குக்கு மேற்பட்ட மனைவியர்களை ஏக காலத்தில் வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆதலின், நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுக்கு மட்டிலும் ஒரு சட்டமும், மற்றவர்களுக்கு ஒரு சட்டமும் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்று பிற மதத்தார் குறைகூற இடமில்லை.

இறைவன் இச்சட்டத்தில் நாயகம் (ஸல்) அவர்களை கட்டுப்படுத்தாமல் விலக்கி வைத்ததற்கு யாது காரணம் என்பதைத் தெரிந்துகொள்ள முயலுவது தான் இவ்விடத்தில் முக்

கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயமாகும். ஸ்திரீகளுக்குரிய பிரத்தியேகமான மஸ் அலாக்க[illegible] ஹைலு, நிபாஸ் போன்ற மார்க்க சம்பந்தமான பிரசினைகளை) ஸ்திரீகள் அந்நிய ஆடவர்களிடம் நாணமில்லாமல் தாராளமாக வாய்விட்டுக் கூற மாட்டார்கள். தங்களைப்போன்ற ஸ்திரீகளிடம் அவர்கள் அவைகளை கூறுவது பெண் இனத்துக்கே இயற்கையாக ஒரு அம்சமாக இருந்து வருகிறது. ஆதலால் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்விஷயங்களைத் தாராளமாகக் கூறித் தக்கபதில்களைத் தெரிந்து மற்றவர்களுக்கு அறிவிப்பதற்காக ஸ்திரீ பிரசாரகர்கள் அவசியமாக இருந்தது. தவிரவும், ஸ்திரீகளுக்குரிய விஷயங்களையும், அவர்களின் தன்மைகளையும் தவறுமல் உணர்ந்து சரியாக அறிவிக்க வேண்டுமாயின் பலதாரப்பட்ட வகுப்பு ஸ்திரீகளுடனும் பழகினுல் தான் நன்கு புலனுகும்.

மேலும், மக்காவிலுள்ள முஸ்லிம் ஸ்திரீகள் சகலத்தையும் துறந்து ஹிஜ்றத்துச் செய்து நாயகம் (ஸல்) அவர்களை நம்பி மதீனுவுக்கு வந்து விட்டதால் அந்த ஸ்திரீகளைப் போஷித்துப் பரிபாலனஞ் செய்யும் பொறுப்பு நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்தது. தவிரவும் பல குலத்திலும் பெண் கொள்வதால் பந்தத்துவம் அதிகமாவதுடன் அந்தந்த குலங்களின் ஆதரவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏற்படுகிறது. இத்தியாதி காரணங்களால் இறைவன் திரு குர்ஆனில் நான்கு மனைவியர்களை ஏக காலத்தில் வைத்துக் கொள்ள முஸ்லிம்களுக்கு அனுமதி யளித்ததில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கட்டுப்படுத்தவில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தக் காரியத்தையும் யாவருக்கும் முதலில் செய்து அதைக் கிரியாம்சையில் காட்டுவது வழக்கம். இவ்வித நிலைமையில் நான்கு மனைவியர்களுக்குமேல் ஏக காலத்தில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று நாயகம் (ஸல்) அவர்கள் பிறருக்குக் கட்டளையிட்டுத் தாங்கள் மட்டும் அவ்வாறு நடந்துகொள்ளாமலிருந்திருந்தால் அக்காலத்திலுள்ள ஆரம்ப முஸ்லிம்கள் அதற்குக் கட்டுப்

பட்டு நடக்க ஒருபோதும் சம்மதித்திருக்க மாட்டார்கள். ஆனால், இறைவன் திருகுர்ஆனிலேயே நாயகமவர்களை இச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பதை விட்டு விலக்கிவிட்ட தால் யாவரும் இதனை ஏற்று அதன்படி நடந்தார்கள். தவிர அக்காலத்திலுள்ள ஆரம்ப முஸ்லிம்கள் மூடத்தனம் நிறைந்த வர்களாக இருக்கவுமில்லை. அந்த முஸ்லிம்கள் உலகத்தி லுள்ள அநேகம் பெரிய ஏகாதிபத்தியங்களை ஜெயித்து வாகை மாலை சூடியவர்கள். கல்வி கேள்விகளில் சிறந்த நிபுணர்களாக இன்று போற்றப்படுகிறார்கள். ஆதலால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுக்கென்று ஒரு சட்டத்தையும் மற்ற வர்களுக்கென்று ஒரு சட்டத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந் தால், அவர்கள் அதைப் பகிரங்கமாகக் கண்டித்திருப்பார்கள். அவர்களனைவரும் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையில் சிறிதும் பிறழாமல் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னரும் நடந்துகொண்டது ஒன்றே நாயகம்(ஸல்) அவர்கள் திரு குர் ஆனின் கட்டளைக்குச் சிறிதும் மாறாமல் நடந்து வந்தார்கள் என்பதை ருஜுப்பிக்கிறது.

திரு குர்ஆன் பலதார மணத்தை அனுமதிப்பதைப்பற் றிக் கவனிப்போம். ஏற்கனவே, நாம் முன் ஒருசமயம் எடுத் துக் காட்டியது போல் இப்ராஹீம், இஸ்ஹாக், யாக்கூப், தாவூது, சுலைமான் (அலைஹிமிஸ்ஸலாம்)முதலியநபிமார்களும் பலதார மணம் செய்தவர்களாகவே இருக்கிறார்கள், இவர்களை பைபிள் நிராகரிக்கவில்லை. கிறிஸ்துவர்களும் இவர்களை அல க்ஷியம் செய்யவில்லை; இவர்களைக் கேவலமாகப் பேசவுமில்லை. பலதார மணம் செய்யக்கூடாது என்று அந்த வேதத்தில் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கவுமில்லை. ஹஜ்றத் தாவூத் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு 100 மனைவியர்களிருந்ததாக வேதாகமங்கள் கூறுகின்றன. இவருக்கு அருளப்பட்ட வேத வசனங்களை எடுத்து கிறிஸ்துவர்கள் தங்களது வணக்க கா லங்களில் வெகு உருக்கமாக படிக்கிறார்கள். தவிரவும், இவ ரது வம்சத்தில் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் பிறந்ததாகக் கூறிச் சந்தோஷமும் அடைகிறார்கள். ஆதலின், யூத கிறிஸ்

துவ சகோதரர்கள் இவ்விஷயத்தில் ஆக்ஷேபனை செய்வது நியாயமன்று. இதுபோல ஸ்ரீ கிருஷ்ணன் ஹிந்துக்களால் கடவுள் அவதாரம் என்று மதிக்கப்படுகிறார்; அவரது கீதை ஹிந்துக்களால் வேதம்போல் மதிக்கப்படுகிறது. இவரும் பலதார மணத்தை அனுமதித்தவர் தான். ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்திரீகளுக்குக் கணவனாக இருந்தவர். இவரது லீலைகளைப் பற்றி இங்கு விரிவாக எழுத வேண்டியதில்லை. இவ் விஷயம் யாவருக்கும் தெரிந்த தொன்றாகும்.

இவர்களைத் தவிர ஒவ்வொரு சமூகத்தாரும் பலதார மணத்தை அனுமதித்துத்தானிருக்கின்றனர். ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னிருந்தே நாளது வரை பலதார மணம் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது. இவ்வாறு பலதாரமணத்தைச் செய்தவர்களை ஜனங்கள் வெறுப்பதுமில்லை; நிந்தனை செய்வதுமில்லை. ஆதலால், மதச் சட்டப்படி பலதாரமணம் எங்கும் இருந்து கொண்டு தானிருக்கிறது.

ஹஜ்றத் ஈஸா (அலைஹி) அவர்கள் இக்குவலயத்தில் வெகு சொற்ப காலம் தானிருந்தார்கள். அவர்களும் 60 அல்லது 70 வயது வரை இருந்திருந்தால் அவரும் விவாகம் செய்து கொண்டுதானிருப்பார். இவருக்குப் பின்னர் இவரது சிஷ்யர்கள் பலநாடுகளிலும் பிரயாணம் செய்வதிலேயே தங்கள் வாழ்நாட்களைக் கழித்திருக்கிறார்கள். பலப்பல கஷ்டங்களை ஆங்காங்கு அனுபவித்தார்கள். ஆதலால், கிறிஸ்துவப் பாதிரிமார்களில் மணம்செய்து கொள்ளாமல் பிரம்மச்சாரியாக இருப்பது ஒரு வழக்கமாக ஏற்பட்டுவிட்டது. கிறிஸ்துவப் பொது ஜனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை ஏக காலத்தில் வைத்துக் கொள்வதைக் குறைவாகக் கருத ஆரம்பித்து விட்டார்கள். இது கிறிஸ்துவர்களில் மத சம்பந்தமான சட்டமாக இல்லை; பழக்கத்தில் வந்த வழக்கமாக இருக்கிறது.

தவிரவும், இஸ்லாம் மதம் பலதார மணத்தை அனுமதித்தாலும் அதைக் கட்டாயம் செய்து கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யவுமில்லை; ஜனங்களைத் தூண்டவு

மில்லை. கூடுமானால் ஒரே மனைவியை மாத்திரம் வைத்துக் கொள்ளவும், அவசியமேற்படின் பல மனைவியர்களையும்—நீதியாக நடத்த இயலுமாயின்—மணந்து கொள்ளலாம் என்று அனுமதித்ததுடன், பல மனைவியர்களுக்கிடையிலும் நீதி செய்வது கஷ்டமான காரியமாகும்; ஆகலால், ஒரே மனைவியை வைத்துக் கொள்வது தான் உத்தமம் என்றும் ஆலோசனை கூறி இருக்கிறது.

பலதார மணத்தை இஸ்லாம் ஆதரித்தாலும் அதற்கு வரையறை யில்லாமல் ஒருவர் நூற்றுக்கணக்கான ஸ்திரீகளை ஏககாலத்தில் மணந்து கொண்டிருக்க அனுமதிக்கவில்லை. மிக்வும் குறைந்த எண்ணிக்கைக்குள், அதாவது நான்கு மனைவிகளுக்கு மேல் அதிகம் உதவாது என்று கட்டுத் திட்டம் செய்து விட்டது.

தவிரவும், சமத்துவம், சம உரிமை, என்ற எண்ணத்தை மனதில் நினைத்துக் கொண்டு அதை எவ்விதத்தில் உபயோகிக்க வேண்டும் என்ற விஷயத்தை உணராமல், பழக்க வழக்கம் என்ற இருளுக்குள் அகப்பட்டிருக்கிற பகுத்தறிவாளர், "ஒரு ஆடவர் பல மனைவியர்களை ஏக காலத்தில் வைத்துக் கொண்டிருப்பது நியாயமாக இருந்தால் ஒரு ஸ்திரீ பல ஆடவர்களை ஏககாலத்தில் மணந்து கொண்டிருப்பது நியாயம்" என்று தர்க்கம் செய்யலாம். ஆனால், நேர்மையான பகுத்தறிவும், நிதானமான புத்தியும் உள்ளவர்கள் இந்த வாதத்தை நீதியான வாதம் என்று கருத மாட்டார்கள். ஏனெனில், ஸ்திரீ புருஷர்கள் இருவருடைய தேகஅமைப்பு வெவ்வேறாகவே இருக்கிறது. ஸ்திரீயைப் பார்க்கிலும் புருஷர்கள் தேகவலிமையும் துணிச்சலும், அஞ்சா நெஞ்சமும், ஒரு காரியத்துக்காகத் தங்களது உயிரையே தியாகம் செய்யக் கூடிய உணர்ச்சியுமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; ஸ்திரீகளின் இயற்கையில் இவ்விதத்தன்மைகள் கிடையாது. அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இவ்வித உணர்ச்சி ஆடவர்களுக்கிருப்பதைப்போல் இல்லை யென்பது உலகப்பிரசித்தம். ஆதலால் ஆடவரும்

பெண்டிரும் சமஉரிமையுள்ளவர்கள் என்பது இவ்விஷயத்தில் பொருந்தாது. ஸ்திரீகளைக் காப்பாற்றுவதும் அன்னவஸ்திர மளிப்பதும் ஆடவர்களாலேயே நடைபெற்று வருவதால், ஆடவர்கள் ஸ்திரீகளுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆதலால், திருகுர்ஆன் பலதாரமணத்தை அனுமதித்தது தவறல்லவென்பது நிதரிசனம்.

ஜிஹாது

இஸ்லாத்தின் விரோதிகள் கூறும் பெருங் குறைகளில் 'ஜிஹாது செய்யும்படி வேதம் கட்டளையிட்டிருக்கிறது' என்பதும் ஒன்று. "இஸ்லாத்துக்கு விரோதமானவர்களைக் கண்ட இடத்தில் வெட்டும்படி திருகுர்ஆன் கட்டளையிடுகிறது; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவரது சிஷ்யர்களும் வாள் வலிமையால் தான் உலகத்தை ஜெயித்து இஸ்லாத்தைப் பரப்பினார்கள்; இஸ்லாத்தில் ஏதேனும் நன்மை இயற்கையிலேயே இருப்பதாகத் தெரிந்து ஆதி காலத்தில் ஒருவரும் இஸ்லாத்தைத் தழுவவில்லை என்று கூறி இஸ்லாமும் திருகுர்ஆனும் முரட்டுத் தனத்தைத் தான் போதிக்கின்றன; அன்பு சாந்தம் கருணை ஆகியவைகளைத் திருகுர்ஆன் போதிக்கவில்லை" என்று இஸ்லாத்தின் விரோதிகள் கூறுகின்றனர்.

தற்காப்பு யுத்தம் செய்வதைப்பற்றி திரு குர்ஆனில் சட்டமியற்றப்பட்டிருக்கிறது; யுத்த தர்மங்களைப் பற்றியும் விவரித்து கூறப்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால், வாள் வலிமையினால் இஸ்லாம் பரத்தப்பட்டது என்றும், திரு குர்ஆன் இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறது என்றும் கூறுவதை ஒருக் காலமும் முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ள முடியாது. வாள் வலிமையால் இஸ்லாம் பரவவில்லை என்பதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்றத் செய்த சம்பவமானது உலகம் முடியும் வரையுள்ள நித்திய சாக்ஷியமாக இருக்கிறது. எவ்வாறென்றால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் வசித்துக் கொண்டிருந்த காலத்தில் மிகவும் பொறுமையாகவும், அன்பான முறையிலும் இஸ்லாமி

யப் பிரசாரம் புரிந்துவந்தார்கள். ஆனால், மக்கத்துக் குறைஷியர் இப்பிரசாரத்துக்கு எதிர்ப் பிரசாரம் நேரிய முறையில் செய்யாமல் புஜபல பராக்கிரமத்தால் செய்ய ஆரம்பித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் முஸ்லிம்களையும் சொல்லொணாத் துன்புத்திற்குள்ளாக்கினர். இறுதியாக நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்துவிடவும் கூடிப்பேசினார்கள். மக்கத்தாரிடம் இனிப் பிரசாரம் செய்து கொண்டிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தபின் ஹிஜ்ராத்துச் செய்து வேறிடங்களிற் சென்று தங்களது சத்திய இஸ்லாத்தின் கட்டளைப்படி நடந்து கொள்ள இறைவன் அனுமதி யளித்தான். இதன் பேரில் சகிக்க முடியாத கஷ்டங்களை அனுபவித்து வந்த சில முஸ்லிம்கள் அபிஸீனியா நாடு சென்று குடியேறினர். இவர்களை இத்தேசத்திலும் குடி யிருக்க விடலாகாதென்று இத்தேசத்தரசரிடம் மக்கா வாசிகள் புகார் கூறினர்.

பின்னர், நாயகம் (ஸல்) அவர்களையும் ஹிஜ்றத்துச் செய்து மதீனாவிற் குடியேறுமாறு இறைவன் கட்டளையிட்டான். நாயகம் (ஸல்) அவர்களும் அக் கட்டளைப்படி மதீனாவிற் குடியேறினார்கள். அவ்வூரிலிருந்து நாயகம் (ஸல்) அவர்களையும், ஏனைய முஸ்லிம்களையும் வெளியேற்றிவிட வேண்டுமென்ற நோக்கங் கொண்டு மதீனாத் தலைவர்களுக்கு மக்கா வாசிகள் பயமுறுத்தல் கடிதங்கள் எழுதியதுமல்லாமல், மதீனா வாசிகளுக்குச் சொந்தமான ஒட்டகைகள், பேரீத்தம்பழங்கள் முதலியவைகளையும் அக்கிரமமாய் அபகரித்துக் கொண்டு போகும் வேலையையும் செய்தனர். இரண்டொருவருக்கு இச்செய்கைகளின் மூலம் உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. இவ்விவரத்தை நாயக சரிதையில் நன்கு காணலாம்.

எனவே, ஏகதெய்வக்கொள்கையுடன், ஏகதெய்வ வணக்கம் செய்கிற ஒரு கூட்டத்தாரை இரவு பகலாக இம்சித்துக் கொலை செய்யவும், மற்றவர்களைக் கொலை செய்யும்படி தூண்டவும் செய்கிற ஒரு கூட்டத்தார் இறுதியாக பட்டாளத்தைச்

சேர்த்துக் கொண்டு முஸ்லிம்களின் மீது படையெடுத்து 270 மைல்களைக் கடந்து வந்த பின்னரும் சாந்தம் பொறுமை என்று கூறிக் கொண்டு முஸ்லிம்கள் கையைக் கட்டிக்கொண்டிருந்திருப்பார்களாயின், இக்குவலயத்தில் இஸ்லாம் என்ற பெயரைக்கூட இந்நாளில் மக்கள் கேள்விப்படுவதற்கு இடமில்லாதபடி மக்கத்தார் அழித்துவிட முயன்றிருப்பார்கள். இதனால் இறைவன் கட்டளைப்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தற்காப்பு யுத்தம் செய்வதற்காக பத்ரு என்ற இடத்திற்கு முஸ்லிம் போர் வீரர்களுடன் செல்ல வேண்டியதாயிற்று.

இதன் பின்னர் அம்மக்கா வாசிகள் சமாதானமாக இருக்காமல் மறுபடியும் யுத்தம் செய்ய அதிக முஸ்தீப்புச் செய்து இரகசியமான துர்ஆலோசனைகளையெல்லாம் செய்து அறபி தேசத்திலுள்ள இதர பல குலத்தினர்களையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டு யுத்தத்துக்கு வந்தார்கள். இதுவும்போதாதென்று மதீனாவைச் சுற்றிலும் வசித்து வந்த யூதர்களுடன் நயவஞ்சகமான உடன்படிக்கை செய்து அந்த யூதர்கள் மூலமாக இஸ்லாத்தை அழிக்க முயற்சித்ததுடன் முஸ்லிம் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் கூட சமாதானமாகக் கவலையற்றிருக்கவும் இக்குறைஷியர் விட்டனரில்லை.

இப்படிப்பட்ட இரக்கமற்ற கல்நெஞ்சர்களிடமும் அவர்களது துணைவர்களிடமும் தற்காப்புக்காகவேனும் யுத்தம் செய்யாமல் அவர்கள் விடும் கூரிய அம்புபாணங்களுக்குப் பதிலாக அவர்களது தலையில் புஷ்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று இஸ்லாமிய விரோதிகள் கருதுகிறார்களா?

ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள், 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை திருப்பிக் கொடு' என்று உபதேசித்ததாகக் கூறும் கிறிஸ்துவர்கள் ஈஸா (அலை) அவர்கள் தமது சிஷ்யர்களுக்கு "யுத்தாயுதங்கள் வாங்கிக் கொள்ளும்படி கட்டளையிட்டதை" நினைத்துப் பார்க்கட்டும். தவிரவும் இம்மாதிரியான தற்காப்பு யுத்தம் செய்வது ஆக்ஷேபிக்கத்தக்க விஷயமுமன்று. யூத கிறிஸ்துவர்களின் வேதங்களான

பைபிளை எடுத்துப் பார்த்தால் இஸ்ரவேல் சந்ததியிலுதித்த ஹஜ்ரத் மூஸா (அலை), தாவூத் (அலை) உள்பட அநேகம் நபி மார்கள் வாள் கொண்டு யுத்தம் செய்த விபரங்கள் தெளி வாகக் கூறப்பட்டிருக்கின்றன.

லுக்கா அதிகாரம் 22 வசனம் 26-ல், "பட்டயம் இல்லா தவன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக் கடவன்" என்று ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சட்டையிட்ட விபரம் கூறப்பட்டிருக்கிறது. பின்னர் 38-வது வசனத்தில், "அத ற்கு அவர்கள், 'ஆண்டவரே! இதற்கு இங்கே இரண்டு பட் டயம் இருக்கிறது' என்றார்கள். அவர், 'போதும்' என்றார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ் வசனங்களிலிருந்து ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் யூதர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பிக் கொள்வதற்காக வாளாயுதத்தை யுப யோகிக்க முடிவு செய்திருக்கிறாரென்பது தெரிய வருகிறது. பின்னர், அதே அதிகாரத்தில் 49, 50-வது வசனங்களில், "அவரைச் சூழ நின்றவர்கள், நடக்கப் போகிறதைக் கண்டு 'ஆண்டவரே! பட்டயத்தினாலே வெட்டுவோமா?' என்றார்கள் அந்தப்படியே அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியானுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினான்" என்று எழுதப் பட்டிருக்கிறது. எனவே, ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களை யூதர்கள் கைது செய்ய வந்தபோது யூதர்களுக்கும், கிறிஸ்து வர்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் யூதர்களின் பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுக்கு வெட்டுக் காய மேற் பட்டு காது அறுந்தது என்றும் தெரிகிறது. எனவே, மத உரிமையைப் பாதுகாக்க எல்லா மதத்தாரும் வாளை உப யோகித்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களின் சிஷ்யர்களில் திறமைசாலிகள் இல் லாததால் யுத்தம் பலப்படவுமில்லை; யூதர்கள் அடக்கப்படவு மில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிஷ்யர்கள் கெட்டிக்காரர்களாக இருந்ததால் அவர்கள் இஸ்லாத்தின் விரோதிகளை அடக்கிக் கீழ்ப் படுத்தினார்கள்.

இதனை யுல்லாமல் உலகச் சரித்திரத்தில் காணப்படுகிற வேறு பல மதங்களின் தலைவர்களும் வாள் பலத்தினலேயே தங்களது மதத்தை பரவச் செய்திருக்கிறார்கள். சுருங்கக்கூறுமிடத்து உலகத்திலுள்ள சகல மதத்தவரும் தங்களுடைய மதஉரிமையையும் கௌரவத்தையும் வாளின் உதவிஇல்லாமல் காப்பாற்றவில்லை என்பது உலகறிந்த விஷயம். இவ்வாறு கருணைச் சித்தம் காட்டும் கிறிஸ்துவர்களும் கிறிஸ்துப் பாதிரிமார்களும் சிலுவை யுத்தம் செய்தது எதற்காக? அந்த யுத்தத்துக்கு மத யுத்தம் என்று பெயர் கொடுத்தது எதற்காக? என்று வினவுகிறோம். அன்பையும் கருணையையும் போதித்த ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களின் மதத்தைப் பின்பற்றியவர்கள் என்று கூறும் ஐரோப்பியர்கள் சிலுவை யுத்தத்தில்முஸ்லிம்களில் நோயாளிகளாகவும், வயோதிகர்களாகவும், ஸ்திரீகளாகவும் குழந்தைகளாகவும் இருந்த ஆயிரக் கணக்கானவர்களை அவர்கள் அபயம் அபயம் என்று கதறும்போதும்சவு இரக்கமின்றிக் கொலைசெய்தது எதற்காக என்று வினவுகின்றோம். இவ்வாறு வெட்டப்பட்டு மடிந்தவர்கள் கிட்டத்தட்ட 70 ஆயிரம் பேர்கள் என்று சரித்திரம் கூறுகிறது.

இதனை யல்லாமல் ஸ்பெயின் தேசத்து முஸ்லிம்களை எதிர்த்துப் போர் செய்து அவர்களை ஜெயித்து அத்தேசத்தைக் கைப்பற்றிய பார்டினன்ட் என்பவர் கிறிஸ்துவப் பாதிரிமார்களின் மார்க்கத் தீர்ப்பின் பேரில் ஆயிரக் கணக்கான முஸ்லிம் ஸ்திரீகளையும். குழந்தைகளையும் வயோதிகர்களையும், நோயாளிகளையும் கொலை செய்யவில்லையா?

இக்கொலைகள் மத சம்பந்தப்பட்ட வித்தியாசத்துக்காகவல்லாமல்வேறு எக்காரணத்தைப்பற்றியும் செய்யப்படவில்லை. ஸ்பெயின் தேசத்தில் அக் காலத்தில் இருந்த முஸ்லிம்களிற் சிலர் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கிறிஸ்துவ மதத்தைத் தழுவ வேண்டியதாக இருந்தது என்பதை இன்னமும் அத்தேச சரித்திரம் மெய்ப்பித்துக் காட்டுகிறது.

எனவே இஸ்லாத்தின் மீதும் திரு குர்ஆன் மீதும் ஆக்ஷேபணை செய்ய முற்பட்ட கிறிஸ்துவர்கள் அவர்களின் வேதமாகிய இஞ்சீலி(பைபிளி)லிருந்து நாம் மேலே எடுத்துக் காட்டிய ஆதாரத்துக்கும் சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கும் யாது பதில் கூறுவார்கள்? என்று வினவுகின்றோம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாவம் செய்தார்களா ?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாப மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று திரு குர்ஆனில் கட்டளையிடப்பட்டிருப்பதை இஸ்லாத்தின் விரோதிகள் தப்பருத்தஞ் செய்து கொண்டார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாபம் செய்தவர்கள் என்றும் ஹஜ்ரத் ஈஸா (அலைஹி) அவர்கள் பாபமற்றவரென்றும் கிறிஸ்துவ சகோதரர்கள் தங்களது மதப் பிரசாரத்தில் கூறி வருவதும் அதற்குத் திருகுர்ஆனை ஆதாரமாகக் காட்டுவதும் அவர்களது வழக்கமாக இருந்து வருகிறது. பாபமன்னிப்புக் கேட்கும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டது மெய்தான். அத்துடன் நாயகமவர்களின் பாபங்களனைத்தையும் மன்னித்து விட்டதாகவும் இறைவன் நற்செய்தி கூறியிருக்கிறான் என்பதையும் இக் கிறிஸ்துவ சகோதரர்கள் உணரவேண்டும். இவ் விரு விஷயங்களையும் கவனித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாபம் செய்ததாகவும் அவ்வாறு பாபம் செய்து விட்டு இறைவனிடம் பாப மன்னிப்புக் கேட்டதாகவும், இந்த பிரார்த்தனையின் பேரில் இறைவன் பாப மன்னிப்புச் செய்து விட்டதாகவும் யூகித்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு யூகித்துக் கூறுவது தவறான பலனைத்தான் தரும். ஏனெனில், நபிமார்கள் அந்தந்த சமூகத்துக்குத் தலைவர்களாகவும், அந்தச் சமூகத்தின் வக்கீலாகவும் இருக்கிறார்கள். அச் சமூகத்தார் செய்யும் பாபத்திக்காக நபிமார்கள் அச்சமூகத்தின் சார்பாகப் பாப மன்னிப்புக் கேட்பது வழக்கமாக இருந்து வருகிறது. இறைவன் மேற்கூறிய வசனத்தில் பாபமன்னிப்புக் கேட்கும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டளையிட்டதானது நாயகம்(ஸல்)

அவர்களின் சமூகத்தாரின் சார்பாக அச் சமூகத்தாருக்காகப் பாப மன்னிப்புக் கேட்கும்படி கட்டளையிட்டதாகவும், பின்னர் இறைவன் பாபமன்னிப்புச் செய்து விட்டதாக நற்செய்தி கூறியதை அச் சமூகத்தாரின் பாபத்தை மன்னித்ததாகவும் நாம் கருத வேண்டும்.

திருகுர்ஆனில் காணப்படும் பிரஸ்தாப ஆயத்தில் கூறப்பட்டுள்ள நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாபமன்னிப்பு, சாதாரண பொது மக்கள் செய்யும் பாவக்காரியங்களைப்போன்றவைகட்காகவல்ல. ஆனால், அவைகளை சர்வ சாதாரணமாக மனித இயற்கைக்கு உண்டாகக்கூடிய உணர்ச்சிகள் எண்ணங்கள் என்று கருத்து கொள்வோமாயின் இத்தகைய உணர்ச்சி நபிமார்களுக்கும் உண்டாகத்தான் செய்யுமென்பதை நாம் மறுக்கவில்லை.

இப்படிப்பட்ட உணர்ச்சிகள் உண்டாகாமலிருப்பதற்காக நபிமார்கள் வலிமார்கள் முதலிய மகான்களை இறைவன் பாப மன்னிப்புக் கேட்கும்படி கட்டளையிடுவதும் இவ்வுணர்ச்சிகள் தோன்றாமலிருக்க வேண்டுமென்று இம்மகான்கள் பாப மன்னிப்புக் கேட்பதும் இவர்களுடைய பிரார்த்தனையின் பேரில் இப்படிப்பட்ட எண்ணங்கூட உண்டாகாமலிருக்கும்படி இறைவன் செய்வதும் இவ்வுலகம் உற்பத்தியானகாலம்முதல் தொன்றுதொட்டுநடைபெற்று வரும் வழக்கமாக இருந்துவருகிறது. இதனால் தான் "நல்லோர்களின் நற்செய்கைகள் மூகர்ரபானவர்களின் பாபமாகஇருக்கிறது" என்று ஞானிகள் கூறுகிறார்கள். அல்லாஹுத்த ஆலாவின் ஞாபகம் ஒரு க்ஷணப்பொழுதேனும் மாறுதலடையுமாயின் பெரிய மகான்கள் அதற்காக இறைவனிடம் பாபமன்னிப்புக் கேட்பார்கள். எனவே இம்முறையில்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இறைவனிடம் பாப மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள் என்று கொள்ள வேண்டும். இவ்விபரத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "என்னுடைய இருதயத்தில் ஒரு திரையைப் போல் மூடிக்கொள்ளும். அதற்காக நான் பகல் முழு

வதிலும் 100 முறை பாப மன்னிப்புக் கேட்கிறேன்" என்று கூறி இருக்கிறார்கள். இந்த ஹதீதை இமாம் முஸ்லிம் (றஹ்) அவர்கள் தமது ஸஹீஹான ஹதீதுகளில் சேர்த்து ரிவாயத்துச் சொல்லி இருக்கிறார்கள், ஆதலால், இந்த ஹதீதில் எவ்விதச் சந்தேகமும் கொள்வதற்கோ மறுதலிப்பதற்கோ இடமில்லை; ஆகவே, இறைவனால் திரு குர்ஆன் அருளப்பட்டதை நமக்கு வெளியிட்ட நாயகம் (ஸல்) அவர்களே 'அவனிடத்தில் நீர் பாபமன்னிப்புக் கேளும்' என்று திருகுர்ஆனில் வந்த கட்டளைக்குக் கீழ்படிந்து தினசரி 100 முறை பாப மன்னிப்புக் கேட்ட விவரத்தையும் அந்தப் பாபம் இப்படிப்பட்ட பாபம் என்ற விபரத்தையும் கூறி இருக்கும் போது வேறு எவரும் தம் சார்பாகப் புதிய வியாக்யானம் செய்வது தகாது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய திரை என்பது யாது என்று கவனிப்போம். அவருடைய உம்மத்துக்களின் காரணமாகவேதான் நாயகம் ஸல்) அவர்களுக்குத் திரை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதாவது நாயகம் (ஸல்) அவர்களுக்கு உம்மத்துகளின் பாபங்கள் அறிவிக்கப்படும்; நாயகம் (ஸல்) அவர்கள் இதை யுணர்ந்தவுடன் அவர்களுடைய பரிசுத்தமான இருதயத்தில் அதனுடைய பிரதிபிம்பம் உண்டாகிறது. இதற்காக நாயகம் (ஸல்) அவர்கள் தினசரி 100 முறை பாப மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்று "லம்ஆத்" என்ற நூலின் ஆசிரியர் கூறியிருக்கிறார். தவிரவும், ஆத்மார்த்த துறையில்ஈடுபட்டுள்ளபெரியார்கள் எந்தெந்தஅந்தஸ்திலிருக்கிறார்களோஅந்தந்த அந்தஸ்துக்குக்கீழுள்ளவைகள் அனைத்தையும் வழிகேடு என்று மதிக்கிறார்கள். தாங்கள் அடைகிற அந்தஸ்து மட்டிலும் தான் சரியான நேர் வழி யென்று மதிக்கிறார்கள். ஆனால், அந்தப் பதவியை விட்டு இன்னும் உயர்ந்த பதவிக்குச் சென்றவுடன் முன்னர் தாம் இருந்த அந்தப் பதவி வழிகேடான பதவி என்று அவர்கள் காண்கிறார்கள். இதுசரியை கிரியை யோகாப்பியாசங்களைச் செய்து பரமார்த்திகத்துறையில் செல்பவர்களான ஸாலிஹீன்

களின் நிலைமையாகும். ஆகவே; "மேலும் அவன் உம்மை வழிகெட்டவராகக் கண்டு (உம்மை) நேர்வழியிற் சேர்ந்தான்" என்ற வேத வாக்கியத்துக்கு மேற்கண்ட விதமாக கருத்துக் கொள்வது தான் சரியான கருத்தாகும். அவ்வாறில்லாமல், 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கெட்ட செய்கையுடையவராக இருந்தார்கள்; விக்கிரக ஆராதனைக்காரராகஇருந்தார்கள்' என்று வலிந்து பொருள் செய்து நாயகம் (ஸல்) அவர்கள் அந்தஸ்துக்குக் குறைவு ஏற்படும்படிச் செய்யக் கிறிஸ்துவ சகோதரர்கள் எத்தனிப்பது தகாது. ஏனென்றால், மேலே நாம் எடுத்துக் காட்டிய பாபமான காரியங்களை விட்டு மனிதவர்க்கத்தில் பிறந்த எவரும் சுத்தமாக இருக்க முடியாது.

கிறிஸ்துவ சகோதரர்களால் அளவுக் கதிகமாகப் போற்றப்படும் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களே பைபில் புதிய ஏற்பாடு மத்தேயு, அதிகாரம் 19 வசனம் 16-ல் "அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி, 'நல்ல போதகரே! நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும்?' என்று கேட்டான். (17) அதற்கு அவர், 'நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே! நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக்கைக்கொள்' என்றார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தின்படி ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் கடவுள் ஒருவர் தான் நல்லவர்; மற்றவர் யாவரும் பாபமுள்ளவர்கள் என்பதை ஒப்புக்கொண்டு தம்மை "நல்ல போதகரே" என்று அழைத்ததையும் கூட அவர் கண்டித்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

பைபிள், பழைய ஏற்பாடு, யோபு அதிகாரம் 15-ல் வசனம், 4,

"மனுஷனானவன் பரிசுத்தமாயிருக்கிறதற்கும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் நீதிமானாயிருக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம்?" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, பைபிளிலிருந்தே ஸ்திரீ ஈன்றவர்கள் நீதிமானாக இருக்க முடி

யாது என்று ருஜூவாகிறது. ஆகவே, ஹஜ்ரத் ஈஸா(அலை) அவர்கள் மர்யம் ஸித்தீக்காவின் புதல்வராகவும், மனித வர்க்கத்தாராகவும் பிறந்திருப்பதால் பாபமற்றவராக இருக்க முடியாது என்பது ருஜூவாகிறது. ஆதலால், கிறிஸ்துவ சகோதரர்கள் 'யார் பெரியவர்?" முஹம்மதுவா; கிறிஸ்துவா; என்று வினவிக் கொண்டு திரு குர்ஆனிலுள்ள சில வசனங்களுக்குத் தங்கள் மனம்போன போக்குப்படி வியாக்கியானம்செய்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாபம் செய்தவர்கள் என்றும், ஹஜ்ரத் ஈஸா (அலை) எவர்கள் பாபமற்றவர் என்றும் கூறி மக்களை மயக்க முயலுவது சரியன்று. ஆகவே, நபிமார்கள் யாவரும் பாபத்தை விட்டுக் காக்கப்பட்டவர்கள் என்று விசுவாசம் கொள்வதும், அவர்களுக்குள் வித்தியாசம் பாராட்டாமல் யாவரையும் கண்ணியமாக மதித்துக் கொண்டாடுவதும் தான் நேர்மையானது என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

பத்தொன்பதாவது ஆக்ஷேபணை

"வஹியின் மூலமாக அல்லாமல், அல்லது திரைக்கு அப்பாலிருந்ததல்லாமல், அல்லது ஒரு தூதரை அனுப்பியதல்லாமல் அல்லாஹுதஆலா எந்த மனிதரிடத்திலும் பேசுவதில்லை. இன்னும், அவனுடைய கட்டளையைக் கொண்டு அவனுக்கு இஷ்டப்பட்டதை அத்தூதரானவர் அறிவிக்கிறார். நிச்சயமாக அவன் உயர்ந்தவன்; விவேகமுள்ளவன். இன்னும், இம்மாதிரியே நாம் உம்மளவில் நமது கட்டளையினால் ஆன்மாவை அனுப்பினோம்"

என்று திரு குர்ஆனில் ஒரு வசனம் காணப்படுகிறது. அதாவது, அல்லாஹுதஆலாவானவன் மனிதருடன் நேருக்கு நேராகப் பேசமாட்டான்என்பதும், வஹியின் மூலமாகவாவது, திரைக்கு அப்பாலிருந்து, ஒரு தூதரை அனுப்பி அவர் மூலமாகவாவது தான், மனிதர்களிடம் பேசுவான் என்று அவ்வசனத்திலிருந்து தெரிய வருகிறது. இந்த ஆயத்தின்பிரகாரம் அல்லாஹுதஆலாவே நேருக்குநேராக வஹி அறிவித்துவிட

வேண்டும்; அல்லது திரைக்கு அப்பால் பேசவேண்டும்; அல்லது ஹஜ்ரத் ஜிப்ராயீல் என்ற வானவர் அல்லாஹு தஆலாவின் வாக்கியங்களை அடியார்களிடம் அறிவிக்கவேண்டும். இம்மூன்று வகையைத் தவிர வேறு விதத்தில் இறைவன் அடியார்களிடம் பேசமாட்டான் என்பது முஸ்லிம்களின் அபிப்பிராயம். ஆனால், திரைக்கு அப்பாலிருந்து பேசுபவன் அல்லாஹு தஆலாதானா? அல்லது வேறு யாருமா? என்பதையும், திரைக்கு அப்பாலிருந்து வருகிற சப்தம் இறைவனுடைய சப்தமா? அல்லது வேறு ஒருவருடைய சப்தமா? என்பதையும் தெரிந்துகொள்வதற்கு முஸ்லிம்களிடத்தில் எவ்வித அடையாளமுமில்லை.

நபிமார்களிடம் 'வஹி' அறிவிப்பதற்காக வருகிற வானவர் உண்மையிலேயே ஜிப்ராயீல் என்ற தேவதூதர்தானா? அல்லது ஏதேனும் ஒரு ஷைத்தான் அவரது பெயரை சொல்லிக் கொண்டு மனிதரிடம் வந்து ஏமாற்றுகிறானா என்பதை பகுத்து அறிந்து கொள்வதற்கு ஒரு முறையும் இஸ்லாத்தில் ஏற்படுத்தப்படவில்லை. ஜிப்ராயீல் என்பவர் அந்தகுர்ஆனை எங்கிருந்து எடுத்துக்கொண்டு வருகிறார் என்பதையும், அல்லாஹு தஆலாவே திரு குர்ஆனை அந்தவானவருக்குப் படித்துக் கொடுக்கிறானோ; அல்லது எங்கேனும் இவ்வேதம் எழுதப்பட்டிருக்கிறதைப் பார்த்து வானவரே தானாக எடுத்துக்கொண்டு வருகிறாரா? என்பதையும் திருகுர்ஆன் விளக்கவில்லை. அன்றியும், ஒரு இடத்தில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு வானவர் எடுத்து வந்ததாக இருப்பின் அது இறைவனின் வசனம்தான் என்று அவருக்கு எவ்வாறு தெரியும்? என்பதற்கான திட்டம் எதுவும் திரு குர்ஆனில் சொல்லப்படவில்லை.

இன்னும் தங்கள் ஹிருதயத்தில் தோன்றுகிறதை 'வஹி' என்று நினைத்துக் கொண்டு அல்லாஹு தஆலாவே அதனை அறிவித்ததாகவும் கூறுகிறார்கள். இவ்விதமான எண்ணத்தை ஷைத்தான் உண்டாக்கவில்லை என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்பதைத் திரு குர்ஆன் தெளிவு படுத்தி வைக்க

யில்லை என்று கிறிஸ்துவ சகோதரர்களும் மற்றவர்களும் கூறுகிறார்கள்.

சமாதானம்

மேற்கண்ட கிறிஸ்துவ சகோதரர்களிடம் இதே கேள்வியைத் திருப்பிக் கேட்கவேண்டியதாகவும் ஏற்படும். ஏனென்னில், அவர்களும் இறைவனிடமிருந்துநபிமார்களுக்கு ஹஜ்றத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வஹி கொண்டு வருகிறார்கள் என்று நம்புகிறார்கள். ஆனால் இச்சந்தேக வினாவில் பிற மதத்தாரும் சேர்ந்திருப்பதால் இவ்வினாக்களுக்கு பதில் கூறுவது அவசியமாகும். ஆனால், ஒரு விஷயத்தை ஞாபக மூட்ட விரும்புகிறேன். இவர்கள் கூறும் ஆக்ஷேபனைகள் உண்மையில் இஸ்லாத்தின் பால் நல்ல எண்ணம் கொண்டதற்காகவோ அல்லது இஸ்லாம் மதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது அவர்களுக்கு நியாயமான முறையில் உண்டான சந்தேகங்கள் என்றோ ஐயவினாக்கள் என்றோ கருதமுடியாது. இவை வீணான பிரயோஜனமற்ற ஆக்ஷேபனைகளாகும். ஆத்மார்த்த அறிவு, ஆத்ம ஞானம் இல்லாதவர்களுக்குத்தான் இம்மாதிரியான குயுக்திகள் தோன்றும்.

சர்வ சாதாரணமாக இவ்வுலகில் அரசர்கள் பிறப்பிக்கும் கட்டளைகளையும், ஸ்ரீமுகங்களையும் பற்றிக் கூட மேற்கண்ட மாதிரியான சந்தேகங்களையும், ஐய வினாக்களையும் கூற இடமுண்டு. சில அரசர்கள் தர்பாரில் நேரில் கலந்து கொள்வதில்லை. தர்பாரில் செல்லும் அனைவரும் அரசரை நேரில் பார்க்கவும் முடியாது. இப்படிப்பட்ட தர்பாரில் ஒருவர் செல்கிறார். அங்கு அரசர் திரைக்கப்பாலிருந்து அவருடன் பேசுகிறார்; அல்லது ஒரு உத்தரவு செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட நிலைமையில் அந்தக் கட்டளையைப்பற்றியும் மேலெழுந்த மாதிரியான சந்தேகங்களை எழுப்ப முடியும். எவ்வாறென்றால் திரைக்

கப்பால் இருந்தது அரசரா? அல்லது வேறொரு மனிதரா? அவ் வுத்தரவை பிறப்பித்தது அந்த அரசர்தானா? அல்லது வேறு ஒருவர் அரசராக நடித்துக்கொண்டு அவ்வாறு கூறினாரோ? நமது செவிக்கு எட்டிய பேச்சுச் சத்தம் அரசருடைய பேச்சுத் தொனியா? அல்லது வேறு ஒருவருடைய பேச்சின் தொனியா? என்பனபோன்றவினாக்களும் உண்டாகஇடமுண்டு. இதுபோலவே அரசரின் கட்டளையைக் கொண்டு வருகிற ராஜதூதர்களைப்பற்றியும் இவர் உண்மையான ராஜ தூதரா அல்லது அந்த ராஜதூதர் வேஷத்தில் வந்த போலியரா? இந்த ராஜதூதர் கொண்டு வந்த கட்டளை அரசர் பிறப்பித்த கட்டளை தானா? அல்லது வேறு கட்டளையா? என்றெல்லாம் சந்தேகங்களைக் கிளப்பலாம். ஆனால், உலகில் நடைபெறும் ஒவ்வொரு காரியங்களுக்கும் இம்மாதிரியான ஐயவினாக்கள் உண்டாவதில்லை. இவ்வாறு ஒவ்வொரு காரியத்திலும் குயுக்தியைச் செலுத்தி ஐயவினாக்களைக்கிளப்புவோரை பைத்தியக்காரர் என்றும், சந்தேகி என்றும், விதண்டாவாதி என்றுமே உலகத்தார் கூறுவார்களே அன்றி அப்படிப்பட்ட வினாக்களுக்குப் பதில்கூற யாரும் முன்வர மாட்டார்கள். இனி விஷயத்தைக் கவனிப்போம்.

ஹஜ்றத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் என்ற வானவர் கொண்டு வந்த வஹி யெல்லாம் அல்லாஹுதஆலாவினிடத்திலிருந்து தான்; மேலும், அந்த வஹியில் சொல்லப்பட்டிருக்கிற பதங்களும்கூட அல்லாஹுதஆலாவினிடத்திலிருந்துள்ளவைகள் தாம்; ஓரிடத்தில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வஹியைக் கொண்டு வந்தார் என்றும், அல்லது அல்லாஹுதஆலா ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குக் கற்பித்துக் கொடுத்தான் என்றும் கூறுவது வீண் வாதமாகும். மலக்குகளும், ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமவர்களும் அல்லாஹுதஆலாவினிடத்தில் எவ்விதமாகப் பேசுகிறார்கள்? அவர்களுக்கு அல்லாஹுதஆலா எவ்விதமாக வஹி முதலியவைகளை அறிவிக்

கிருன்? என்பதை நமது புத்தி உணர்ந்து கொள்ள முடியாது. உலகில் மக்கள் ஒருவருக்கொருவர் சம்பாஷிப்பதைப் போல் அல்லாஹுதஆலாவும், மலக்குகளும் சம்பாஷிப்பார்கள் என்று நினைப்பது கூடாது. மனிதர்களுக்குள் நடைபெறும் சம்பாஷணை முறைகள் இறைவன் விஷயத்திலும் இம்மாதிரி தானிருக்கும் என்று நினைப்பது சரியான ஆராய்ச்சி முறையாகாது. ஆதலால், ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹுதஆலா வேதத்தைக் கற்றுக் கொடுக்கிருனு? அல்லது எதிலேனும் எழுதி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அவர் வஹீ கொண்டு வருகிருரா என்று சந்தேகங்களை உண்டுபண்ணுவது சரியாகாது.

இல்ஹாமும், வஹீயும்

'இல்ஹாம்' என்ற பதத்துக்கு மனதில் போடுவது என்பது பொதுப் பொருளாகும். ஒரு வாக்கியத்தை மனதில் இரகசியமாகப்போடுவது என்பது வஹீ என்ற பதத்துக்கு அர்த்தமாகும். இல்ஹாம், 'வஹீ' என்ற பதங்களிரண்டும் கிட்டத்தட்ட ஒரேவிதமான பொருள்களுள்ள இரு பதங்களாக இருக்கின்றன. தாதுவர்க்கம், தாவர வர்க்கம், ஜீவவர்க்கம் ஆகிய சகல சிருஷ்டிப் பொருள்கள் யாவற்றிற்கும் இறைவன் இதை அருளி இருக்கிறான். ஆனால், அவைகளுக்குள்ள அந்தஸ்துக்கும் தகுதிக்கும் தக்கவாறு இவ்வருளும் பலவிதமாக இருக்கிறது. "உன்னுடைய றப்பு தேனீக்களுக்கு 'வஹீ' அறிவித்தான்" என்றும், "ஆத்மாவின் மீதும் அவனைச் சரியாக்குபவனின் மீதும் சத்தியமாக, அப்பால் அதற்கு அதனுடைய தவறுகளை 'இல்ஹாம்' செய்தவனின் மீது சத்தியமாக" என்றும் திரு குர்ஆனில் வந்திருக்கிறது. இந்த வாக்கியங்களின்படி தேனீக்களுக்கு இறைவன் 'வஹீ' அறிவித்ததாகவும், ஆத்மாவுக்கு 'இல்ஹாம்' செய்ததாகவும் தெரிந்துகொள்கிறோம். ஆனால், இவைகளுக்கு அறிவிக்கப்படும். 'இல்ஹாம்' 'வஹீ' ஆகியவைகள் மனிதர்களுக்கு அறிவிக்கப்படும் 'இல்ஹாம்' 'வஹீ'

ஆகியவைகளைப் போலவே இருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு.

சில ஜனங்கள் அறபிப் பாஷையில் இப் பதங்களுக்குள்ள பொதுப் பொருள்களை நினைத்துத் தங்கள் நூல்களில் 'வஹி' என்றும், 'இல்ஹாம்' என்றும் தங்களுடைய வாக்கியங்களைப்பற்றியும் கூறிக் கொள்கிறார்கள். இவர்கள் தங்களைப்பற்றிச் சொல்லிக் கொள்ளும் இந்த 'வஹி', 'இல்ஹாம்' ஆகியவைகள் சாமான்யர்களின் ஹிருதயங்களில் வழக்கமாக உண்டாகும் எண்ணங்களையும், நினைப்புகளையும் போலவேதான் இருக்கின்றனவேயன்றி, இஸ்லாம் மதத்தில் சொல்லப்பட்ட 'இல்ஹாம்', 'வஹி' ஆகியவைகளைப் போலன்று.

ஆயினும், 'இல்ஹாம்', 'வஹி' என்ற இவ்வறபிப் பதங்களுக்கு அறபிப் பாஷையில் பொதுவான ஒரு அருத்தம் இருந்தாலும், இஸ்லாம் மதத்தில் 'வஹி' என்ற பதத்தை இப்படிப்பட்ட பொதுவான அர்த்தத்தில் உபயோகிப்பதில்லை. நபிமார்களுக்கு அல்லாஹுதஆலா அனுப்பும் செய்திகளுக்கு 'வஹி' என்று பெயர். திரு குர்ஆன், இன்ஜீல், ஜபூர் தௌராத், ஸுஹுபுகள் ஆகியவைகள் இத்தகைய 'வஹி'யின் மூலமாக நபிமார்களுக்கு இறைவன் அனுப்பிய வசனங்களாகும். ஆனால், திரு குர்ஆனில் சொல்லப்பட்ட பதங்களும், கருத்துக்களும் 'வஹி'யாக இருக்கின்றன. இதர வேதங்களின் கருத்துகள் மாத்திரம் தான் 'வஹி' மூலம் அறிவிக்கப்பட்டன. நபிமார்கள் அவைகளைத் தங்களது சொந்த வார்த்தைகளில் ஜனங்களுக்கு அறிவித்தனர். ஆதலால், அவ்வேதங்களின் பதம் 'வஹி' யல்ல. இது தான் பழைய வேதாகமங்களில் பெரும்பாலானவைகளுக்கும், திரு குர்ஆனுக்கும் இடையிலுள்ள வித்தியாசமாகும். ஆனால், இஸ்லாம் மார்க்கத்தில் இவ்விதமான வஹியானது இரண்டு வகைப்படும்.

(1) மலக்குகளின் மூலமாக இறைவன் நபிமார்க

ளுக்கு அறிவிப்பது ஒரு வகை. இதற்கு "**வஹீயே மத்லுவ்வா**" (ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹி) என்று பெயர்.

(2) மலக்குகளின் மூலமாக அல்லாமல் அல்லாஹுத் ஆலாவே நபிமார்களுக்கு நேருக்குநேராக அறிவித்து விடுவது மற்றொரு வகை. இதற்கு "**வஹியே கைர மத்லுவ்வா**" (ஓதிக்காண்பிக்கப்படாத வஹி) என்று பெயர்.

இதன்படி திரு குர்ஆன் "**வஹியே மத்லுவ்வா**"வை அதாவது, ஓதிக்காண்பிக்கப்பட்ட வஹியைச் சேர்ந்ததாகும். பொதுவாக எல்லா ஹதீதுகளும் சிறப்பாக ஹதீதுகுதஸிகளும் ஓதிக்காண்பிக்கப்படாத வஹியாக—அதாவது, "**வஹீயே கைர மத்லுவ்வா**"வாக—இருக்கின்றன. ஆனால் நபிமார்களுக்கு இறைவன் அறிவிக்கும் வஹியில் நபிமார்களின் நினைப்புகளும் யுக்திகளும் கலப்பதில்லை யாதலால், அவைகளில் தவறுகள் ஏற்படமாட்டா. ஆதலால், 'வஹி'யானது உறுதியும் நிச்சயமுமான செய்திகளாகும்.

ஆனால், நபிமார்களது சிஷ்யர்களிலுள்ள பெரியார்களில் மலக் கூத்தியான சக்தி அதிகமுள்ளவர்களுக்கு இறைவனின் இவ்வித அறிவிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் இஸ்லாம் மார்க்கச் சட்டப்படி நபிமார்களைப் பின்பற்றியவர்களுக்கு உண்டாகும் தெய்வ உதிப்புகளுக்கும், தெய்வ அறிவிப்புகளுக்கும் 'வஹி' என்று சொல்வதில்லை. அவைகளுக்கு 'இல்ஹாம்' என்று சொல்லப்படும்.

நபிமார்களாக இல்லாதவர்களிடத்தில் கூடுதல் குறைத்தல்களும் தவறுகளும் உண்டாக இடமிருப்பதால் இவர்களால் சொல்லப்படும் 'இல்ஹாம்'கள் யாவும் உறுதியுள்ளனவாகவோ நிச்சயமானவைகளாகவோ இருக்க முடியாது. ஆதலால், நபிமார்களுக்கு வரும் 'வஹி'யும், அவர்களைப் பின்பற்றியவர்களுக்கு உண்டாகும் 'இல்ஹாமும்' சரியாக மாட்டா. இந்த 'இல்ஹாமி'னால் மார்க்கச் சட்டம் ஏற்படுத்த

முடியாது. மார்க்கத்தின் அஸ்திவாரம் இந்த 'இல்ஹாமி'னல் எழுப்பப்படவுமில்லை.

தவிரவும், நபிகள் தங்கள் தாய்ப்பாஷையிலேயே தங்கள் சமூகத்தாரிடம் சன்மார்க்கத்தைப்பிரசாரம்செய்தார்களாதலால் அவரவருக்கும் அருளப்பட்ட வேதங்களும், ஆகமங்களும் அவரவர்களின் தாய்ப்பாஷையிலேயே அருளப்பட்டன. இவ்விதம் அவரவருடைய தாய்ப்பாஷையில் அருளப்பட்டால்தான் அந்தவகுப்பார் அதன் உள்ளுரைப் பொருள்களை நன்ருக விளங்கிக் கொள்ளவும், ஜனங்கள் அதன் கருத்தை சுலபமாக உணர்ந்து கொள்ளவும் முடியும். அவ்வேதம் அந்த ஜனங்களிடம் பரவி அவர்களுடைய ஒழுக்கம், நடத்தை, பழக்கம், வழக்கம் இவைகளைச் சீர்திருத்தி அவர்களைச் சன்மார்க்கர்களாக ஆக்கவும் மிகவும் சௌகரியமாக இருக்கும். ஆனல், அவ் வேதங்களி லுள்ள விதி விலக்குகள் அந்தந்த வர்க்கத்தாருக்கே நேரடியாக விதிக்கப்பட்டதாகக் காணப்படினும், அவனுடைய கட்டளை யாவருக்கும் பொதுவானதாக இருப்பதால், எல்லா ஜாதியாரும் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்படுகின்றனர்.

இனி இவ்வேதங்கள் இறைவனின் வாக்கியங்கள் தானு? அல்லது வேறு ஒருவருடைய வாக்கியங்களா? என்று எவ்வாறு அறிந்து கொள்ளல் முடியும் என்பதைச் சற்று கவனிப்போம். கிறிஸ்துவ சகோதரர்கள் எழுப்பிய இச் சந்தேகம் இன்றைக்குப் புதிதாக உண்டாகியசந்தேகமுமன்று; இதற்காக வேறு விதமான ஆதாரங்களை நாம் தேடித் திரிய வேண்டியதுமின்று.

“நம்முடைய (இவ்) அடியார் மீது நாம் இறக்கி வைத்திருக்கிற (இவ்வேதத்)தில் (இது இறைவனின் வாக்கியமா? அல்லவா என்று) நீங்கள் சந்தேகப்படுவீர்களாயின், இது போன்ற ஒரு அத்தியாயத்தை நீங்கள் (இயற்றிக்) கொண்டு வாருங்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், உங்களுடைய ஆதரவுக்காரர்களையும் நீங்கள் அழைத்துக் கொள்

ளுங்கள். மேலும், நீங்கள் அவ்வாறு (அமைத்து திரு குர்ஆனைப் போல்) ஒரு அத்தியாயத்தைச் செய்ய முடியவில்லையாயின்—அவ்வாறு நீங்கள் செய்யவே முடியாது—மனிதர்களும், கற்களும் விறகாக இருக்கிற (நரக) நெருப்பைப் பயந்து கொள்ளுங்கள்.''

என்று இறைவன் திருகுர்ஆனிலேயே பிரஸ்தாபித்து இச்சந்தேகத்தை நிவாரணம் செய்வதற்கான வழி இன்னது என்றும் கூறி இருக்கிறுன். அதாவது திருகுர்ஆனிலுள்ள ஒரு அத்தியாயத்தைப்போல் நாம் இயற்றமுடியாது என்பதைஇறைவன் கூறியிருக்கிறுன். இவ்வாறுஇயற்றமுடியாமலிருக்கிறஇவ்வொருவிஷயமே திருகுர்ஆன் தெய்வ வசனம் என்பதற்கு நித்தியசாக்ஷியமாக இருக்கிறது. திருகுர்ஆன் அருளப்பட்ட அந்தக் காலத்திலேயே இஸ்லாத்தின் விரோதிகள் இதுபோன்ற ஒரு அத்தியாயத்தை இயற்றுவதற்காக அநேகம் முறைகளில் முயற்சி செய்திருக்கிறுர்கள். ஆயினும், திருகுர்ஆனின் வசனங்களைப் போல் இயற்ற அவர்களால் முடியவேயில்லை. இறுதியாக இவ்விரோதிகள் திருகுர்ஆனின் தெய்விக சக்தியை ஒப்புக் கொள்ள வேண்டியதாகவே ஏற்பட்டது. இவ்விஷயங்கள் சரித்திரத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால் திருகுர்ஆன தெய்வ வசனமா அல்லவா என்பதைப்பற்றிய சந்தேகமோ ஆக்ஷேபனையோ உண்டாகவுமில்லை; இனிமேல் உண்டாவதற்கு இடமுமில்லை. நபிகள் நாயகம் (ஸல்)அவர்களுக்கு அருளப்பட்ட அந்த திரு குர்ஆன் தானு இப்பொழுது முஸ்லிம்கள் கையில் இருக்கும் குர்ஆன் ஷரீபு? என்று ஆக்ஷேபிப்பதற்கும் இடமுமில்லை. ஆனுல் கிறிஸ்துவ சகோதரர்களும் பிறமதத்துச் சகோதரர்களும் எழுப்பிய இவ்வக்ஷேபனை அவர்களது வேதங்களின் மீதுதான் உண்டாகிறது. அதற்கு அவர்கள் யாது சமாதானம் கூறுகிறுர்கள் என்பதை யாம் அறிய விரும்புகிறேம்.

திரு குர்ஆன் இறைவனின் வசனமா அல்லவா என்றும்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 'வஹி' அறிவித்தவர் ஹஜ்றத் ஜீப்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் தானு அல்லது வேறு யாருமா என்றும் கிறிஸ்துவ சகோதரர்களுக்கும் மற்றையோருக்கும் சந்தேகம் ஜனித்து விட்டது. ஆனல், இச் சந்தேகத்தையுண்டு பண்ணுகிற யூத, கிறிஸ்துவ, ஹிந்து சகோதரர்களிடம் இருக்கிற வேதத்தை அவர்கள் எந்த ஆதாரத்தின் பேரில் தெய்வ வாக்கென்று நம்புகிறார்கள் என்ற விஷயங்களை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவ்வேதங்களைப் பற்றி முஸ்லிம்களின் அபிப்பிராயம் இன்னதென்பதைத் தெரிந்து அதற்குத் தக்க சமாதானம் கூறும்படி அழைக்கிறோம். நீங்கள் திரு குர்ஆனைப் பற்றிக்கேட்ட இதே கேள்வி உங்களது வேதங்களின்மீது ஏற்படுகிறது என்பது ஒருபுறமிருக்க, கிறிஸ்துவ சகோதரர்களிட மிருக்கிற பைபிளை முற்காலத்து நபிமார்களுக்கு இறைவன் அருளிய வேதாகமங்கள் என்று முஸ்லிம்கள் நம்புவதில்லை. முற்காலத்து நபிமார்களின் பெயரையும் வேதங்களின் பெயரையும் கூறி இன்னின்ன வேதம் இன்னின்னருக்கு அருளப்பட்டதென்று முஸ்லிம் பொது ஜனங்களைக் கிறிஸ்துவர்கள் ஏமாற்றி விடப் பார்க்கிறார்கள். ஆனல், தற்போது கிறிஸ்துவர்களிடமிருக்கிற பைபிளிலுள்ள தோரா, சங்கீதம், இவாஞ்சலியம், போன்ற வேதாகமங்கள் முஸ்லிம்கள் கூறுகிற தௌராத், ஜபூர், இன்ஜீல் ஆகிய வேதங்களுடன் பெயரளவில் ஒற்றுமையாக இருக்கிறதே அன்றி, உண்மையில் ஒற்றுமையானவைகளாயில்லை. ஏனெனில், தௌராத், ஜபூர் இன்ஜீல் முதலிய வேதங்கள் இக்காலத்தில் இல்லை. ஆனல், அவைகளில் சொல்லப்பட்ட விஷயங்களில் சில இப்புத்தகங்களில் கூறப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் பைபிள் சம்பந்தமாக இந்த அளவுக்கேனும் அபிப்பிராயங் கொண்டு ஆதரிக்கிறார்கள். ஆனல், யூதர்கள் கிறிஸ்துவர்களின் இவாஞ்சலியத்தையும், கிறிஸ்துவர்கள் யூதர்களின் தோராவையும்பற்றி இந்த அளவுக்குக்கூட மதிக்கமாட்டார்கள் என்பது தெரிந்த விஷயம்.

இனி ஹிந்துக்களின் வேதங்களைப்பற்றிக் கவனிப்போம். ஹிந்துக்களில் தோன்றிய ஆரியசமாஜிகள் ஹிந்து வேத சாஸ்திரங்களனைத்தையும் மறுத்து விட்டு நான்குவேதங்களை மட்டிலும் ஒப்புக் கொள்கின்றனர். இந்த நான்கு வேதங்களும் நான்கு ரிஷிகளின் ஞானேதயத்தினலெழுதப் பட்டவை என்று கூறுகிறார்கள். இந்த வேதங்களில் கூறப் பட்டிருக்கிற சமாசாரங்களில், தேவதைகளை வணங்குவது சம்மந்தமான பல சமாசாரங்கள் மலிந்திருக்கின்றன. ஆனல் ஆரியசமாஜிகளின் தலைவர் இத்தகைய வாக்கியங்களுக்கெல் லாம் கூடார்த்தங்களைக் கூறியிருக்கிறார். ஹிந்துக்களிலுள்ள மற்றவர்கள் இவருடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. அவர்களிலுள்ள ஒரு வர்க்கத்தார் இவ் வேதங்களை பிரம்மா எழுதியதாகக் கருதுகின்றனர். வேருெரு கூட்டத் தார் வேதவியாசர் எழுதியதாகக் கூறுகின்றனர். மற்ருெரு வர்க்கத்தார் இந்தவேதங்களுக்கு ஆசிரியர்களே இல்லை; இவைகள் பலராலும் இயற்றப்பட்ட காவியங்கள் ஒன்று சேர்க்கப் பட்டவை யென்றும், அந்தந்த செய்யுளை இயற்றியவர்களின் பெயர்கள் அதன் தலைப்புகளில் எழுதப்பட்டிருக்கின்றன என் றும், 2500 வருஷங்களுக்கு முன்னர் வியாச மக ரிஷியானவர் தமது சிஷ்யர்களுடன் இந்தப் பாடல்களையும், செய்யுள்களையும் ஒன்று கூட்டி எழுதுவித்தார் என்றும் கூறு கின்றனர். எனவே, ஹிந்துக்களின் வேதம் எது? அது எப்பொழுது உண்டாக்கப்பட்டது? அதை எழுதியவர் யார்? என்ற விஷயத்தில் இவர்களுக்குள் ஒரு மனப்பட்ட அபிப் பிராயமில்லை. இவ்வித நிலைமையில் அதை மற்றவர்கள் அங்கீ கரிக்கச் செய்ய முடியுமா என்பதை அவர்களே சிந்திக்கட் டும்.

இதனையல்லாமல், திரு குர்ஆனின் வேத வசனங்களோ "இது இறைவனலனுப்பப்பட்ட வேதம்" என்று தாவாச் செய்கின்றன. அவ்வாறு இது இறைவனு லனுப்பப்பட்டதாக இராமல், "மற்றவர்களால் அனுப்பப்பட்டதாக இருப்பின் அதில் பல முரண்பாடுகள் காண்பீர்கள்" என்று திருகுர்

ஆனே சாக்ஷியம் பகருகிறது. எனவே இந்த சாக்ஷியத்தின் பிரகாரம் திரு குர்ஆன் எப்பொழுது யாருக்கு யாரால் அருளப்பட்டது என்ற விஷயம் சரித்திரப் பூர்வமாக அமைந்ததாக இருக்கிறது. அதனை முஸ்லிமல்லாதாரால் மறுதலித்துக் கூற முடியாது. இரண்டாவதாக திரு குர்ஆனில் கூறப்பட்ட விஷயங்கள் முன்னுக்குப்பின் முரண்பாடில்லாமல் ஒன்றுக்கொன்று வியாக்கியானமாக அமைந்திருக்கின்றன. இவ்விதமான தன்மை பைபிளுக்குமில்லை, வேதங்களுக்குமில்லை. எவ்விதமென்றால் தௌராத் வேதம் காணமற் போய்விட்டதாகவும், திரும்ப கண்டெடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. திரும்பக்கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பிரதி அசல் தௌராத்துதானு? அல்லவா? என்ற விஷயம் விளக்கப்படவில்லை. அன்றியும் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அருளப்பட்ட வேதமாகிய இன்ஜீலும் சந்தேகாஸ்பதமாகவே இருக்கிறது. ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அருளப்பட்ட இவாஞ்சலியம் என்று கூறுமல் தங்களது புதிய ஏற்பாட்டில் மத்தேயு எழுதின சுவிசேஷம், மாற்கு எழுதின சுவிசேஷம், லூக்கா எழுதின சுவிசேஷம், யோவான் எழுதின சுவிசேஷம் என்று நான்கு விதமான சுவிசேஷங்களையும் அப்போஸ்தலருடைய நடபடிகளையும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இதில் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு இறைவனுல் அருளப்பட்ட இன்ஜீல் எதுவென்று விளக்கமாகச் சொல்லப்படவில்லை. நிற்க, சுவிசேஷங்களை இன்ஜீல் என்று வைத்துக் கொள்ளலாம்; என்றுலும் அவர் எழுதிய சுவிசேஷம் இவர் எழுதிய சுவிசேஷம் உவர் எழுதிய சுவிசேஷம் என்று நான்கு பேர்களைச் குறித்து எழுதினுல், எவர் எழுதிய சுவிசேஷம் சரி; எவர் எழுதிய சுவிசேஷம் தவறு என்று தெரிந்து கொள்ள முடியுமா? தவிர பிற மதத்தாரிடம் கிறிஸ்துவர்கள் வேதத்தைப் பிரசங்கிக்கும் போது சரியான சுவிசேஷத்தையும் சரியில்லாத சுவிசேஷத்தையும் ஒன்றுகச் சேர்த்து எழுதிக் குழப்பி யிருப்பதாகவும்

கிறிஸ்துவ மதத்தின் பேரில் அவநம்பிக்கை கொள்ளவும் அன்றோ இடமேற்படும்? தவிரவும் இந்த சுவிசேஷங்கள் தாம் இவாஞ்சலியம் என்று நம்பமுடியாதபடி நான்கு பேரும் நான்கு சுவிசேஷங்களை எழுதி யிருக்கிறார்கள். இந்த நான்கு சுவிசேஷங்களையும் ஒன்றுக் கொன்று ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவைகளில் சிலவிஷயங்கள் விடப்பட்டும் சிலவிஷயங் கள் ஒன்றுக் கொன்று முரணானவைகளாகவு மிருக்கின்றன. இவைகளையல்லாமல் யோவான் எழுதிய சுவிசேஷத்தின் கடைசி வாக்கியங்களில் **"அந்தச் சீஷனே இவைகளைக் குறித்துச் சாட்சி கொடுத்து இவைகளை எழுதினவன். அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம். இயேசு செய்த வேறு அநேக காரியங்களு முண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங் கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்"** என்றெழுதப்பட்டிருக்கிறது. இவைகளைப் பார்க்கும்போது ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சிஷ்யர்களில் ஒருவர் சொன்னதைக் கேட்டு இவைகளை எழுதியிருப்பதாகத் தெரி கிறது. எனவே, இந்த சுவிசேஷங்கள் பிற்காலத்திலுள்ளோர் களால் அவர்கள் கேள்விப்பட்ட விஷயங்களை கொண்டு எழு திக் கொள்ளப்பட்டவை என்பதைத் தவிர உண்மையான இன் ஜீலாக இருக்கவில்லை என்று நன்கு தெரிகிறது.

எனவே, இவைகளெல்லாம் வெளியிலுள்ள ஆக்ஷேபனை களாகும். இவைகளிலுள்ள வாசகங்களைப்பற்றிக் கவனிப்பின், அது மிக விரியுமென்று விடுத்தனம். இறைவனிடமிருந்து ஈஸா நபி (அலை) அவர்களுக்கு அளிக்கப்பட்ட அசல் இன்ஜீ லாகவே இவை இருக்குமாயின், நான்கு பேர் நான்குவிதமாக எழுதி வைக்கவும் வேண்டியதில்லை; ஈஸா (அலை) அவர்களின் சிஷ்யர் ஒருவர் கூறியதைக் கேள்விப்பட்டு மற்றவர்கள் எழு திக் கொண்டு இன்ஜீல் என்று இயம்பவும் வேண்டியதில்லை; வேறு அநேக காரியங்களை எழுதாமல் விட்டு விட்டதாகக் கூறவும் வேண்டியதில்லை. இந்த வாக்கியங்களைக் கவனிக்கும் போது புதிய ஏற்பாட்டிலுள்ளவைகள் ஹஜ்ரத் ஈஸா (அலை)

அவர்களின் ஜீவிய சரித்திரமும், அவரது சிஷ்யர்கள் செய்த அரிய தொண்டுகளடங்கிய விஷயங்களும்தான் என்று தெரிய வருகிறது. இவைகளை வேதம் என்று பிற மதத்தார் ஒப்புக் கொள்வதற்குத் தகுந்த ருஜு இவர்களிடம் இல்லை. ஹஜ்றத் ஈஸா (அலைஹி) அவர்களுக்கு அருளப்பட்ட அசல் இன்ஜீல் இப்பொழுது இல்லை என்று நன்கு புலனாகிறது. ஆகவே, இனி திரு குர் ஆன் சம்பந்தமாக இப்படிப்பட்ட அபிப்பிராய பேதங்களும், வித்தியாசங்களும் இல்லை என்பதும் சரித்திரப் பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றன என்பதும் இதற்கு முன் நாம் கூறி வந்த விஷயங்களால் நன்கு தெரியவரும். ஆகவே திரு குர் ஆனின் மீது கிறிஸ்துவர்களும் மற்றவர்களும் கொள்ளும் சந்தேகங்கள் ஆதாரமற்றவையாகும்.

ஹிந்து சகோதரர்களிலுள்ள ஆரிய சமாஜத்தார் தாம் இஸ்லாத்தின்மீது ஆக்ஷேபனை செய்யும் விஷயத்தில் ஹிந்து சமூகத்தில் முன்னணியி லிருக்கிறார்கள். "வேதம் என்பதில் இறைவனின் வணக்கத்தைப்பற்றியும், சரியான ஞானத்தைப் பற்றியும் கூறப்பட வேண்டும். அதில் கதைகள் சொல்லப் படக் கூடாது; கூறியது கூறல் என்ற குற்றமிருக்கக் கூடாது; தவிரவும் தன்னுடைய வாக்கியத்தைத் தானே ரத்துச் செய்து கொள்ளவும் கூடாது" என்று ஆரிய சமாஜிகள் வேதத்துக்கு இலக்கணம் கூறி திருகுர்ஆன் மீது அநேகம் ஆக்ஷேபனைகளைக் கிளப்புகிறார்கள். வேதத்துக்கு இவர்கள் கூறிய இவ் விலக்கணம் பரிபூரணமாகவுமில்லை; சேர்க்கப்பட வேண்டிய அநேகம் விஷயங்கள் விடப்பட்டும் தள்ளப்பட வேண்டிய பல விஷயங்கள் சேர்க்கப்பட்டுமிருக்கின்றன. இது ஒரு பக்கல் இருக்க, இனி வேதத்துக்கு இருக்க வேண்டிய அம்சங்களைப் பற்றி அவர்கள் கூறி யிருக்கிறவைகள் திருக் குர்ஆனிலிருக்கின்றனவா என்பதைக் கவனிப்போம்.

இறைவனின் வணக்கம்

இணையற்ற ஏகதெய்வமான அல்லாஹுசுபுஹானகு வதஆலாவையே வணங்கவேண்டும்; வேறு யாரையும் வணங்கக்கூடாது; அவனுக்கு இணை வைக்கக்கூடாது என்ற விஷயத்தை திரு குர்ஆன் ஆதி முதல் அந்தம் வரை இடைவிடாமல் போதிக்கிறது என்பதை இஸ்லாத்துக்கு ஜன்மவிரோதியாக இருப்பவர் கூட ஒப்புக்கொள்வர். இஸ்லாம் மதம் தோன்றியதும், திரு குர்ஆன் அருளப்பட்டதும் ஏகதெய்வ வணக்கத்தை நிலைநிறுத்துவதற்குத் தான் என்பதை யாவரும் நன்கறிவர். ஆதலால் அது விஷயத்தைப்பற்றி நாம் அதிகம் எழுத வேண்டியதின்று. ஆனால், இப்படிப்பட்ட ஏகதெய்வ வணக்கச் சட்டம் திரு குர்ஆனைத் தவிர்த்து ஏனைய வேதங்களில் இருக்கின்றனவா? என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். திரு குர்ஆனை ஆக்ஷேபனை செய்ய முன் வந்த இதே ஆரியசமாஜிகள் ஒப்புக்கொள்ளுகிற ரிக், யஜுர் சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களிலும் 33 கோடி தேவர்களைப்பற்றிய ஸ்தோத்திரமும் ஸ்துதியும் அவர்களுக்கு வணக்கம் செய்தல், வேண்டுதல்செய்தல் ஆகியவைகள் நிரம்ப இருக்கின்றன.

இந்த வேதங்களின் வியாக்யானிகளின் நூல்களையும் இவ் வேதங்களுக்கு வியாக்யானம் செய்யவந்த மேனாட்டினரையும் விசாரித்துப் பார்த்தால் நாம் மேலே கூறியதன் உண்மை நன்குபுலனாகும். எனவே, ஹிந்துக்களிலுள்ள வேதாந்திகள் கூறுவதை ஒப்புக் கொள்ள முடியாது. சுவாமி தயானந்தர் கூறுவது மாத்திரம் தான் தங்களுக்கு நம்பிக்கையுள்ளது என்று ஆரிய சமாஜிகள் கூறுவார்களாயின், இதை தயானந்த சரஸ்வதியின் சிஷ்யர்கள் மாத்திரம்தான் நம்பவேண்டுமேயன்றி, மற்றவர்கள் இக்கூற்றை நம்பவேண்டும் என்று நிர்ப்பந்தமில்லை.

கூறியது கூறல்

"கூறியது கூறல்" என்ற குற்றம், திருகுர்ஆனில் இருப்பதாக ருஜூப்பித்துக் காட்ட முடியாது. ஒரு காரியத்தை வற்புறுத்தி தாக்கீது செய்வதற்கு அதை மடக்கிக் கூறுவது உலகில் சர்வ சாதாரணமான விஷயமாகும். எனவே, தாக்கீது செய்யும் முறையில், திரு குர்ஆனில் கூறிய விஷயம் திரும்பவும் கூறப்பட்டிருக்கிறது. அதுவும் மிக அழகிய முறையில் வேறொரு தலைப்பின் கீழ் புது மாதிரியான ரீதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் படிக்கும் போது இவ்விஷயம் அனாவசியமாகத் திரும்பத்திரும்பக் கூறப்பட்டிருக்கிறது என்று எவரும் உணரமாட்டார்கள். இவ்விதமான முறையில் விவரிப்பது திரு குர்ஆனின் உயர்தரமான இலக்கணச் சிறப்பாகும்.

ஆனால், ஹிந்துக்களுடைய சாம வேதத்தில் சில சுலோகங்களைத் தவிர பாக்கியுள்ள அனைத்தும் 'ரிக்' வேதத்தின் 'காப்பி'யாகவே இருக்கின்றன. 'அதர்வண' வேதம் பின்னுலுள்ளவர்களா லியற்றப்பட்ட தென்றும், மற்றைய வேதங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்டதென்றும் பண்டிதர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

தன் வாக்கைத் தானே மாற்றவோ, தள்ளுபடி செய்யவோ கூடாது

திரு குர்ஆனில் ஆதிமுதல் அந்தம் வரை ஒரு இடத்தில் கூட முன்னுக்குப்பின் முரணாகவோ, மாற்றமாகவோ இல்லை. திரு குர்ஆனில் நாஸிக் மன்ஸூக், (மாற்றியது, மாற்றப்பட்டது) இருப்பதன் உண்மைத் தாத்பரியத்தை உணர்ந்து கொள்ளாமல் பிற மதத்தார் திரு குர்ஆனின் மீது குறை கூற முற்படும் போது ஒரு பெரிய ஆக்ஷேபனை என மதித்து அதையும் கூறுவது வழக்கம். அதன் உண்மைக் கருத்தென்ன? நாஸிக் மன்ஸூக் என்பது என்ன? அதன் தாத்பரியமென்ன? என்ற விபரங்கள் முன்னொரு முறை கூறி இருக்கிறோம். ஆகவே, 'நாஸிக் மன்ஸூக், என்பது ஒன்றுக்கொன்று முரண்பட்டது என்றோ, அல்லது ஒரு சட்டத்தை இன்னொரு சட்டம் ரத்துச் செய்து விட்டது என்றோ

நினைப்பது முட்டாள்தனமாகும் என்பது அவ் வியாசத்தைப் படிப்பவருக்கு நன்கு விளங்கும்.

ஆனால், ஹிந்துக்களிடமிருக்கிற வேதங்களில் ஒன்றோடொன்று இருக்கிற முரண்பாடுகளையும், பேதகங்களையும் முன்னுக்குப் பின் விரோதமாக இருப்பவைகளையும் ஒன்று சேர்த்து எடுத்தெழுதிப் பிரசுரிப்பதாயின், அது ஒரு பெரிய புத்தகமாக இருக்கும். உலகம் சிருஷ்டித்த விஷயத்தை மட்டிலும் எடுத்துக் கொள்வோம். அந்த ஒரு விஷயத்தில் கூட எத்தனை முரண்கள் இருக்கின்றனவென்பதைக் கவனியுங்கள். யூத கிறிஸ்துவர்களின் வேதாகமங்களான பைபிளில் முன்னுக்குப் பின் முரண்பாடுகளிருப்பதையும், ஒன்றுக்கொன்று வித்தியாசமிருப்பதையும் முன் ஒரு முறை சுருக்கமாக எழுதியிருக்கிறோம்.

பாட்டிக் கதைகளிருக்கக் கூடாது

திரு குர்ஆனில் எவ்விதக் கதையும்,காரணமும் கூறப்படவில்லை. ஆனால்,சரித்திரப் பூர்வமாகநடைபெற்ற சிலசம்பவநிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்நிகழ்ச்சிகள் வெறும் காலக்ஷேபத்தைக் கருதி கூறப்பட்டனவன்று; இதில் மக்கள் அடைந்த லாபநஷ்டங்களையுணர்ந்து பிற்காலத் தவருக்கும் படிப்பினையுண்டாக்குவதற்காகவே அவை கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் அந் நிகழ்ச்சிகள் எந்த அளவுக்குத் தேவைப்படுகிறதோ, அந்த அளவுக்கு மட்டிலும் தான் அந்தந்த இடத்தில் கூறப்பட்டிருக்கின்றன அறிவாளிகள் இவைகளைப் படித்து இவைகளை வெறுங்கதைகளென்று கூறவே மாட்டார்கள். ஆனால், இதர வேதங்களிலோ, குடும்பச் சண்டைகளும் வீட்டுச் சச்சரவுகளும், மானங்கெட்ட சம்பவ நிகழ்ச்சிகளும் யானைப்படை குதிரைப்படைகளுடன் யுத்தம் செய்வதும் வேண்டியமட்டும் கூறப்பட்டிருக்கின்றன. திருகுர்ஆனையும் இவ்வேதங்களையும் எடுத்து ஒன்றுக்கொன்று சீர்தூக்கிப் பார்ப்பவர்களுக்கு எந்த வேதத்தில் வீண் கதை காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்பது புலனாகும்.

ஹிந்துக்களின் வேதாகமங்களில் திரிகாலத்துக்குமுள்ள சகலவிஷயங்களைக்கூறியிருப்பதாகதாவாச்செய்யும்ஆரிய சமாஜிகாள்! அறிவுசம்பந்தமாகவும், விவேகம் சம்பந்தமாகவும் மக்கள் நடந்துகொள்ள வேண்டிய கிரியைகள் சம்பந்தமாகவும் வேதங்கள் கூறியிருப்பவை யாவை? என்பதைத் தயவு செய்து எடுத்துக் காண்பிப்பீர்களா? அவைகளிலிருந்து ஒன்றிரண்டு சுலோகங்களை மொழி பெயர்த்து இவ்வாரியர்கள் கூறட்டும்! மனிதன் எத்தகைய விஷயங்களில் நம்பிக்கை கொள்ள வேண்டும்? மக்கள் ஈடேற்ற மடைவதற்கு என்னென்ன கிரியைகளைச் செய்ய வேண்டும்? எந்தெந்தக் காரியங்களைச் செய்யக் கூடாது? என்ற விதிவிலக்குகளடங்கிய சுலோகங்களையும், சூத்திரங்களையும் எடுத்துக் காண்பிக்கட்டும்! கடவுளின் தன்மைகளிலும் லக்ஷணங்களிலும் அவன் அரூபி என்பதை விளக்கக் கூடியனவாயிருக்கிற வாக்கியத்தினை எடுத்துக் காண்பிக்கட்டும்! அக்கினி நெய்வேத்தியம் செய்வதைப் பற்றித் தான் அவ் வேதங்கள் கூறுகின்றன. இதைத் தவிர பிரயோஜனமுள்ள வேறு காரியங்கள் அவ்வேதங்களில் கூறப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிவிக்கட்டும்!

பத்தொன்பதாவது ஆக்ஷேபனை

'கஅபா'வை முன்னோக்கித் தொழுதல், ஹஜ்ரே அஸ்வதை முத்திமிடல், மாமிசம் அருந்துதல்

"திரு குர்ஆனின் போதனைகள் நன்றாக இல்லை; விக்கிரக ஆராதனையை இஸ்லாம் மதம் விலக்கிற்றாயினும், கஅபாவையும் 'ஹஜ்ரே அஸ்வது' என்ற கருப்புக்கல்லையும் வணங்கும்படி கட்டளையிட்டிருக்கிறது. ரத்தம் சிந்தும்படி இஸ்லாம் கட்டளையிடுகிறது. 'காபிரானவர்களைக் கொல்லுங்கள்' 'அவர்களுடைய மனைவிகளை அபகரித்துக் கொள்ளுங்கள்!' 'அவர்களுடைய மக்களை அடிமையாக்கிக் கொள்ளுங்கள்!' என்று குர்ஆன் கட்டளையிடுகிறது. குர்பானி கொடுக்கும்

படி கட்டளையிட்டு மிருகவதை செய்யும்படி தூண்டுகிறது. இம்மாதிரிச் செய்வதால் இறைவனுக்கு என்ன பிரயோஜனம் உண்டாகிறது? இதனால், மனிதர்கள மாமிசம் அருந்துவதற்கு திரு குர்ஆன் அனுமதி கொடுக்கிறது. பிராணிகளை வதை செய்து அவைகளின் இறைச்சியை அருந்துவது கருணையற்ற செய்கையாகும்.”

சமாதானம்

‘கஅபா’ என்னும் தேவாலயம்

முஸ்லிம்கள் மக்காவிலுள்ள ‘கஅபா’ எனும் ஆலயத்தையோ, அவ்வாலயத்தின் சுவரொன்றில் இணைத்து வைக்கப்பட்டிருக்கிற ‘ஹஜ்ரே அஸ்வதெ’ன்னும் கருங்கல்லையோ வணங்கும்படி திருக் குர்ஆன் கட்டளையிடவுமில்லை; இஸ்லாம் மதம் கட்டளையிடவுமில்லை. ஒரு கல்லை அல்லது சிலையை வணங்குவோர் விக்கிரக ஆராதனைக்காரராக இணை வைத்து வணங்குபவராக ஆகிவிடுவது போலவே, கஅபாவையோ, ஹஜ்ரே அஸ்வதையோ வணங்குபவரும் இணை வைப்போராகி விடுகிறார். கஅபா என்ற அவ்வாலயம் ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்களால் புதுப்பித்துத் திரும்பக் கட்டப்பட்டதாகும். மேலும், அது இறைவனை வணங்குவதற்கென்று உலகில் கட்டப்பட்ட முதல் தேவாலயமாகவும் இருக்கிறது. ஹஜ்றத் இப்ராஹீம், இஸ்மாயில் அலைஹிமஸ்ஸலாம் ஆகிய நபிமார்கள் ஏக தெய்வ வணக்கஸ்தரின் பூர்விக காலத்துப் பெரியார்களாக இருக்கிறார்கள். ஆதலால். தொழுகையை நிறைவேற்றும்போது அந்த ஆலயம் இருக்கும் திசையை நோக்கித் தொழ வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிட்டிருக்கிறது. ஏனென்றால், இவ்வாலயத்தின் திசையை நோக்கித் தொழுபவர்கள் ஏக தெய்வ வணக்கஸ்தர்களான அப்பெரியார்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகி விடுகிறார்கள். அதுவும் கஅபா என்ற அவ்வாலயம் இன்ன திசையில்தானிருக்கிறது என்பது தொழுகையை நிறைவேற்றுபவருக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

அத் திசையின் பால் முகந் திரும்பித் தொழுவதற்கு வேறு தடைகளெதுவு மிருக்கக் கூடாது. எனவே, அத் திசை தெரியாமலிருக்குமாயின், அல்லது அத்திசையை நோக்கி நின்று தொழுவதற்கு இடைஞ்சல் இருக்குமாயின், எந்தத் திசையை முன்னோக்கித் தொழுதாலும் தொழுகை நிறைவேறி விடும். இவ்விதச் சமயத்தில் எந்தத் திசையை நோக்கித் தொழுதாலும், தொழுதுகொள்ள இஸ்லாம் மதம் அனுமதி கொடுத்திருக்கிறது "நீங்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் முகமிருக்கிறது" என்று இறைவன் திரு மறையில் கூறிஇருக்கிறான்.

'ஹஜ்ருல் அஸ்வது'

'ஹஜ்ருல் அஸ்வத்' என்னும் கல்லும் ஏகதெய்வ வணக்கமுள்ள மேற்கண்ட பெரியார்களின் கைபட்ட ஒரு கல்லாகும். இப்பெரியார்களின் ஞாபகார்த்தமாக இக்கல் இன்னமும் இருந்து வருகிறது. இக்கல்லைப் பார்த்தவுடன் உலகில் முதல் முதலாக இறைவனை வணங்குவதற்காகக் கட்டிய கட்டடத்தில் வைக்கப்பட்ட கல் என்றும், நபிமார்களும் றஸூல்மார்களும் சிற்பிகளாக நின்று எடுத்து வைத்த கல் என்றும் நினைத்து, அப்பெரியார்கள் பால் தங்களுக்குள்ள மதிப்பை அறிவிக்கும் நோக்கத்தில் அப்பெரியார்களின் கைபட்ட இந்தக் கல்லை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முத்தங் கொடுத்தார்கள். பெரியார்களை மதிக்கவேண்டுமென்ற உபதேசத்தைச் செய்கை மூலமாகக் காட்டி இருப்பதால், இச்செய்கை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பின்பற்றியவர்களுக்கு ஸுன்னத்து என்றேற்பட்டது. ஒருவர் ஹஜ்ஜுக்குச் சென்று கல்லை முத்தமிடாமல் வந்து விட்டாலும் அவரது ஹஜ்ஜு நிறைவேறி விடும். இதனால், அவரது ஹஜ்ஜுக்கு எவ்விதக் குறையும் ஏற்பட்டு விடாது, ஆனால் தவாபு செய்வதில் ஸுன்னத்தாகவுள்ள ஒரு காரியம் விடப்பட்டுப் போனதைத் தவிர வேறொன்று மில்லை. ஹஜ்ஜுக் கிரியைகள் நிறைவேறுவதற்காகக் கட்டாயம் செய்து முடிக்க வேண்டும் என்று கடமையாக்கப்பட்டிருக்கிற

காரியங்களில் இதுவும் ஒன்றல்ல. ஆதலால், கஅபா என்னும் தேவாலயம் இருக்கும் திசையை நோக்கித் தொழுவதும், ஹஜ்ஜுச் செய்யுங் காலத்தில் தவாப் செய்யும்போது ஹஜ்ருல் அஸ்வதை முத்தமிடுவதும் விக்கிரக ஆராதனையாகவுமில்லை; ஏக தெய்வ வணக்கத்துக்கு மாறான செய்கையாகவுமில்லை.

இரத்தஞ் சிந்துதல்

இரத்தம் சிந்துதல் நல்ல காரியமில்லை. ஆயினும் சில சமயத்தில் அது மிகவும் இன்றியமையாததாகி விடுகிறது. ஆதலால் இரத்தம் சிந்துவதை அடியுடன் நிறுத்தாமல் அனுவசியமாக இரத்தஞ் சிந்தக் கூடாது என்ற சட்டம் ஏற்படுத்துவது தான் சிறப்பாகும். துஷ்டர்கள், கொள்ளைக்காரர்கள், கொலை பாதகர்கள், அரசாங்கத்தை ஒழித்து விடுவதற்காக யுத்தம் செய்பவர்கள் ஆகியவர்களின் வலிமையைத் தொலைக்கத்தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதல் அவசியமான காரியமாகும். இந்தச் சமயங்களில் ஜீவ வதை என்றோ, இரத்தஞ் சிந்துதல் என்றோ நினைத்து வாளாவிருந்து விட்டால் அரசாங்கத்தின் நிர்வாகம் சீர் குலைந்து நாட்டில் சமாதானம் இருக்க மாட்டாது. இறுதியாக அவ்வரசாங்கம் ஒழிய வேண்டிய நிலைமையையே அடையும். தவிர, ஏக தெய்வ வணக்கஸ்தரைத் தொந்தரை செய்பவர்கள், பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்கள் ஆகியவர்களைத் தண்டிப்பதானது துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனத்தைச் சேர்ந்தது. ஜீவகாருண்யம் என்று கூறிக் கொண்டு இவர்களைத் தண்டிக்காமலும் அடக்காமலுமிருந்து வருவதானது நல்லோர்களுக்கு இடைஞ்சல் செய்வதாகும். இதைப் பற்றி முன் ஒருமுறையும் கூறியிருக்கிறோம்.

குற்றம் செய்தவர், குற்றம் செய்யாதவர் என்ற பாகுபாடின்றி பெண்டு பிள்ளைகள் யாவரையும் பிடித்துக் கொண்டு வந்து அடிமையாக்கிக் கொள்ளும்படி இஸ்லாம் சட்டம் செய்யவில்லை. பகைவர்களின் மனைவி மக்களின் பால் கருணை காட்ட

வேண்டுமென்று திருகுர்ஆன்போதிக்கிறது. ஒருவர் விரும்பி னால் அவர்களை அழைத்து வந்து தன்னுடைய உணவில் அவர்களைப் பங்காளிகளாக சேர்த்துக் கொள்ளவும் அவர் களின் சக்திக்குத் தக்க வேலையை அவர்களிடத்தில் வாங்கிக் கொள்ளவும் இஸ்லாம் இடங் கொடுத்திருக்கிறது. இவ்வாறு அவர்களைப் போஷிப்பதனால் போஷிப்பவர்களுக்கு சில அதி காரங்களை இஸ்லாம் கொடுத்திருக்கிறது. இதைத் தவிர கண்ட வர்களையும் அகப்பட்டவர்களையும் பிடித்துவந்து யாவரையும் அடிமைகளாக்கி விற்றுவிட திருகுர்ஆன் சட்டமிடவுமில்லை; அனுமதிக்கவுமில்லை. இப்படிப்பட்ட அடிமைகளை விடுதலை செய்து உலகிலுள்ள அனைவருக்கும் இருந்து வருகிற மனித சுதந்திரம் முதலியவைகளை அவர்களுக்கு அளிப்பதற்கான சட்ட திட்டங்களே திருமறையில் கூறப்பட்டிருக்கின் றன.

மாமிசம் அருந்துதல்

மாமிசம் அருந்த வேண்டும்; பிராணிகளை வதை செய்ய வேண்டும் என்று திரு குர்ஆன் எவரையும் கட்டாயப்படுத் தவுமில்லை; நிர்ப்பந்தப்படுத்தவுமில்லை. மரக்கறி பதார்த்தங்கள் உணவாக இருப்பதுபோல் சில பிராணிகளின் மாமிசங்களும் உணவாக இருக்கின்றன என்று கூறியிருக்கிறது. எனவே, இஷ்டப்பட்டவர் இதைப் புசிக்கலாம், இஷ்டம் இல்லாதவர் கள் புசிக்காமல் இருந்து கொள்ளலாம், பிராணிகளை வதை செய்வதால் இறைவனுக்கு எவ்விதப் பிரயோஜனமுமில்லை என்பதை விளக்கி, "இவைகளின் மாமிசங்களும், இரத்தங்களும் அல்லாஹ்வுக்குச் சேருவதே இல்லை; ஆயினும், உங்களில் நின்றுமுள்ள பயபக்தியானது அவனைச் சேரும்" என்று தனது திருமறையில் அவன் கூறியிருக்கிறான். ஆதலால், பிராணிகளை அறுத்துப் பலியிடுவதும், ஹஜ்ஜுக் காலங்களில் குர்பானி கொடுப்பதும் நம்முடைய பயபக்தியை வெளிப்படுத் தும் பொருட்டே ஏற்படுத்தப்பட்டவைகளாகும். இம்மாதிரி யான பலி இதர மதங்களிலும் இல்லாமலில்லை. ஜீவகாருண்

யும் என்ற பெயரைக் கூறிக் கொண்டு மாமிசம் அருந்தாதிருக்கும் கூட்டத்தார் ஹிந்து மதத்தில் தான் அதிகம் இருக்கின்றனர். ஆயினும், அவர்களுடைய வேத சாஸ்திரங்களிலும் பசு பலி, அசுவ பலி முதலிய பல யாகங்கள் செய்யச் சடங்குகளிருக்கின்றன. அன்றியும், தாவரவர்க்கங்களான செடி கொடிகளில் உயிர் இருப்பதாக இஸ்லாம் மதம் ஆரம்பக்காலத்திலிருந்து சொல்லுகிறது. அதற்குத் துணையாக இக்காலத்தில் தற்காலமுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளும் அவைகளில் உயிர் இருக்கின்றனவென்பதை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, மரக்கறிகளையும், மாமிசங்களையும் புசிக்க வேண்டுமாயின், பிராண வதையில்லாமல் முடியாது என்பது நன்கு தெரிய வருகிறது. ஹிந்துக்களிலுள்ள சில வர்க்கத்தார் மரக்கறிகளைப் புசிக்கலாம் என்றும், மாமிசங்களைப் புசிக்கக்கூடாதென்றும் கூறுவதற்கு அர்த்தமே இல்லை. அவசியமான சமயத்திலும் கூட மாமிசங்களை புசிப்பது மகா பாபமென்று கருதுகிற ஹிந்துக்கள், யுத்த காலத்தில் மனிதர்களைக் கொல்லும்படி சட்டம் இடுவது நீதியாகுமா? அல்லது நேர்மையாகுமா? என்பதை நிதானிக்கட்டும்! ஆகவே, ஜீவகாருண்யம் என்று பெயர் கூறிக்கொண்டு பலவிதத்திலும் ஜீவனுக்குத் தொந்தரை செய்வதானது சொல் ஒன்றும், செயல் ஒன்றுமாக இருப்பதற்கு ஒப்பாகும். எனவே, இறைவன் அனைவருக்கும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் ஒரே நிலைமையில் இருந்து சத்தியத்துக்கு கட்டுப்பட்டு நேர்மையாக நடக்க உதவி புரிவாராக! ஆமீன்!!

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்

அக்கியோன்
(மௌலவி) அஹ்மத் ஸயீத்,
ஆசிரியர், "ஸைபுல் இஸ்லாம்"

"ஸைபுல் இஸ்லாம்" பிரஸ், சென்னை.

"ஸைபுல் இஸ்லாம்"
சொந்த நூற்கள்

நபிகள் திலகம்

பள்ளி மாணவர்களுக்கு பாடப் புத்தகம். இது அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்டது,

1-ம் பாகம்	விலை அணா	0—4—0.
2-ம் பாகம்	விலை அணா	0—4—0.
3-ம் பாகம்	விலை அணா	0—5—0.
ஹஜ்ஜு யாத்திரை	விலை அணா	0—4—0.
காபுலின் கன்னிகை	விலை அணா	0--10—0.
இஸ்லாமும், உலகமும்	விலை அணா	0--12—0.
வஸிய்யத் லா	விலை அணா	0—3—0.
நோன்பின் மாட்சி	விலை அணா	0—2—0.
அயோத்திய குப்ருஸ்தானில் ஒரு நற்பாக்கிய ஆத்மா அல்லது சாவித்திரியும், பரிசுத்த குர்ஆனின் தெய்வீகசக்தியும்	விலை ரூ.	1—0—0.
திருக்குர்ஆனும், ஐரோப்பியரும்	விலை அணா	0—4—0.
இந்திய முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி	விலை அணா	0—8—0.

கிடைக்குமிடம்:—
மானேஜர் :

"ஸைபுல் இஸ்லாம்" புக் டிபோ,

47, சேம்புதாஸ் தெரு, சென்னை.

ஸைபுல் இஸ்லாம்

(வாரம் இரு முறை வெளிவரும் முஸ்லிம் பத்திரிகை)

முஸ்லிம் சமூகம் கல்வி, கைத் தொழில், வியாபார விவசாயம் முதலிய சகல துறைகளிலும் முன்னேற்ற மடைவதற்கும், அரசியல் துறையில் மார்க்க நெறி வழுவாது அபிவிருத்தி யடைவதற்கும் "ஸைபுல் இஸ்லாம்" வழிகாட்டியாக நின்று 25 வருட காலமாக ஆற்றி வரும் ஒப்பற்ற தொண்டினைத் தமிழுலகு நன்கறியும்.

முஸ்லிம் சமூகம் அரசியல் துறையில் சமத்துவம், பாத்தியதை, மார்க்க சமூகப் பாதுகாப்பு பெற, தக்கதோர் வழிகாட்டியாக நின்று முஸ்லிமல்லாதார் முஸ்லிம் சமூகத்தினருக்கு விரோதமாக அரசியல் துறையில் செய்யும் சூழ்ச்சிகளை அவ்வப்போது விளக்கிக் கூறி முஸ்லிம் பொது மக்களை விழிக்கச் செய்வது "ஸைபுல் இஸ்லாம்" ஒன்றே.

இஸ்லாமிய உலக வர்த்தமானம், மார்க்க வினு விடைகள், முழு உலகச் செய்திகள், உலகக் கியாதி பெற்ற முஸ்லிம் பெரியார்களின் அருமையான கட்டுரைகளும், பிரசங்கங்களும் தாங்கி வெளிவந்துலாவும் "ஸைபுல் இஸ்லாத்"தை ஆதரித்தல் உங்களின் கடமையாகு மன்றோ!

எனவே "ஸைபுல் இஸ்லாத்"திற்கு நீங்கள் உடனே சந்தாதாரராகச் சேருவதுடன், உங்கள் நண்பர்களையும் சந்தாதாரராக சேர்க்க முயலுங்கள்.

சந்தா:—	உள் நாடு	வெளி நாடு
1 வருடத்திற்கு	ரூ. 10—0—0	ரூ. 12—0—0
6 மாதத்திற்கு	,, 5—8—0	,, 6—8—0
3 மாதத்திற்கு	,, 3—0—0	